
தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

ஜனவரி 2001



ஒன்றுதிரண்ட தமிழின் எழுச்சிக்கு
வித்திட்ட "பொங்குதமிழ்"



நோர்வே அரசின் சமாதான
முயற்சிக்கு அவகாசம்
அளிக்கும் நோக்குடன் மேலும்
ஒரு மாத கால
"போர் நிறுத்தம்"
-விடுதலைப் புலிகள் அறிவிப்பு

விடுதலைப் போராட்ட வரலாற்றில்
தளபதி கிட்டு ஓர் அத்தியாயம்

www.tamileelamarchive.com

தமிழ் ஆவணக் காப்பகம்






# அக்கறைப்பூக்கள்

என்னுடைய நண்பர் ஒருவர் மூலம் எரிமலை சஞ்சிகை கிடைக்கப் பெற்றேன். தமிழீழத்தில் நடைபெறும் உண்மை நிகழ்வுகளை அறியாமல் தவித்துக் கொண்டிருந்த எனக்கு பாலைவனச் சோலை என எரிமலை என் தாகத்தைத் தணித்தது. சிறீலங்காப் பேரினவாத அரசு செய்யும் அட்டூழியங்களை, மனித உரிமை மீறல்களை படம் பிடித்துக் காட்டிய எரிமலைக்கு நன்றி. புலிகளின் போராட்டத்தில் அடிப்படை நியாயம் உள்ளது. அடிப்படை நியாயம் கொண்ட எந்தப் போராட்டமும் தோல்வியுற்ற வரலாறு இதுவரை இல்லை. வெற்றியும் நாளையும் நமதே.


எ.தனஞ்செயன்
வசந்தநகர்
கூப்பிளி
கர்நாடகா






எரிமலையின் நவம்பர் 2000 மாத இதழ் கிடைக்கப்பெற்றேன். ஓயாத அலைகள் சிறப்பு மலருடன் வந்திருந்த இவ்விதழ் சிறப்பாய் விரிந்திருந்தது. தாயக மறவர்களின் தன்னிகரில்லாத சாதனையாம் ஓயாத அலைகள் -3 நடவடிக்கையின் வெற்றிகளை நிழற்படமாகத் தாங்கி வந்த எரிமலைக்கு வாழ்த்துக்கள்.

ஆர்.ஜெ.இளங்கோ
திருச்செந்தூர்
தமிழ்நாடு






தமிழின விடுதலை வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். எரிமலை இதழில் தாய்த் தமிழகத்தில் நடைபெற்ற ம.தி.மு.க மாநாட்டில் ஈழத்தமிழர்கள்பால் தாய்த் தமிழகத்தில் உள்ள நிலையை மாநாடு படம் பிடித்துக் காட்டியது. தென்சூடான் தேசிய இன விடுதலை குறித்த செய்தியும் படித்தேன். உலகம் இன்று 2000ஆம் ஆண்டு நூற்றாண்டின் தொடக்கமா அல்லது 2001ஆம் ஆண்டு தொடக்கமா என்று கேள்வி எழுப்புக்கிற வேளையில், நாடு, நகரம் அமைத்து வாழ்ந்த முதல் மனிதன் தமிழன் அதுவும் 21ஆம் நூற்றாண்டில் வாழும் தமிழன், இன்று இன்னும் அடிமையாக ஏதிலியாக நடத்தப்படுகின்றான். அவன் விடுதலை கேட்டு போராட்டம் நடத்திக் கொண்டு இருக்கின்றான். இனிவரும் ஆண்டு வெற்றிகள் தரும் ஆண்டுகளாகத் திகழ, தமிழன் விடுதலை பெறும் ஆண்டுகளாகத் திகழ வாழ்த்துக்கள்.

வெ.கோ.சுப்பிரமணியம்
ஈரோடு
தமிழ்நாடு.






எரிமலை இதழ்களைத் தொடர்ந்து படித்து வருகின்றேன். அவ்விதழ்களில் எல்லாம் ஈழமண்ணில் இனவெறி இராணுவம் புரியும் அட்டூழியங்களையும், மனித உரிமை மீறல்களையும் புகைப்படங்கள் மற்றும் செய்திகள் மூலம் உலக சமூகம் அறியும் வகையில் அம்பலப்படுத்தி உள்ளது சிறப்பாக அமைந்துள்ளது. தமிழீழ விடுதலைப் போரின் மிகச்சிறந்த பிரச்சார ஆயுதமாக எரிமலை விளங்குகின்றது என்பதில் ஐயமில்லை.

த.சந்திரசேகர்
மேட்டுப்பாளையம், தமிழ்நாடு










www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உள்ளே...

எரிமலை
ஜனவரி 2001

## கட்டுரை

ஒன்றுதிரண்ட தமிழின எழுச்சிக்கு வித்திட்ட "பொங்குதமிழ்" பக்கம் - 04
எல்லை காக்கும் இல்லங்கள் பக்கம் - 12
தமிழர் மீதான கெடுபிடியை மூடிமறைத்துவிட முனைகிறது பக்கம் - 14
சிங்கத்தின் குகையில் அரசோச்சிய புலிக்குரல் பக்கம் - 16
விடுதலைப் போராட்ட வரலாற்றில் தளபதி கேணல் கிட்டு ஓர் அத்தியாயம் பக்கம் - 18
பாலியல் வல்லுறவு மண்ணும் மனிதமும் பக்கம் - 20
வேறு வழி? பக்கம் - 28
சந்திரிகாவின் 'பெருமை' பக்கம் - 29
ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டமும் அதன் இலக்கியப் பதிகையும் பக்கம் - 30
மக்களின் தொண்டர்களாய், பாதுகாவலர்களாய்... பக்கம் - 32
வள்ளுவர் கூறிய வீரமும் வீரப்படையும் எம்மிடம் உண்டு பக்கம் - 36
'அவனுக்கு முன்னாலை நாங்களெல்லாம் சின்ன ஆக்கள்' பக்கம் - 42
அபோறிஜின்ஸ்– அவுஸ்திரேலிய ஆதிக்குடிகள் பக்கம் - 44

## அணையாத தீபங்கள்

மேஜர் சோதியா பக்கம் - 50

## சிறுகதை

தொடுவான எல்லைகளைத் தாண்டி– விண்ணரசி பக்கம் - 38
கற்பு– வரதர் பக்கம் - 46

## கவிதை

தைத்திங்கள் மலரட்டும் - செவ்வந்தி மகாலிங்கம் பக்கம் - 11
பயணம் - செந்தோழன் பக்கம் - 23
மௌனத்துள் துயரம் - நா.நாமகள் பக்கம் - 35
ஆகா!- சிதம்பர திருச் செந்திநாதன் பக்கம் - 35
நாங்கள் வருகின்றோம் - யாழ்வீரன் பக்கம் - 41

## தொகுப்பு

கேணல் கிட்டு உட்பட பத்து வீரமறவர்களின் எட்டாவது ஆண்டு நினைவெழுச்சி நிகழ்ச்சிகள் பக்கம் - 22
தமிழர் வரலாற்றில் தைமாதம் பக்கம் - 48
பதிவுகள் பக்கம் - 49
மீள்பார்வை டிசம்பர் பக்கம் - 51
கண்கள் கூறும் வார்த்தைகள் பக்கம் - 52

08 தொடரும் இராணுவத்தின் படுகொலைகளால் யாழ். இல் அதிகரிக்கும் மனிதப் புதைகுழிகள்



24 அவலத்தின் ஒரு அடையாளமிது



26 வருங்காலம் வளமாக...





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எமது மண்ணில் அந்நிய ஆக்கிரமிப்பிற்கு இடமளிக்கப்போவதில்லை.



இராணுவ ஆக்கிரமிப்பின் மூலம் தமிழரின் வரலாற்று மண்ணில் சிங்களத்தின் இறையாண்மையைத் திணித்துவிட முடியாது. தமிழரின் விடுதலைப் படை என்ற ரீதியில் நாம் எமது மண்ணில் அந்நிய ஆக்கிரமிப்பிற்கு இடமளிக்கப்போவதில்லை.

எல்லைப் படையாக அணிதிரண்ட எமது மக்கள் இந்தச் சமர்களில் நேரடியாகப் பங்கு கொண்டு போராடியது எமது விடுதலைப் போராட்டத்திற்கு புதிய தெம்பையும், பலத்தையும் அளித்தது. குடும்பப் பொறுப்புக்களைச் சுமக்கும் இவர்கள் தேசப்பற்றால் ஈர்க்கப்பட்டு, ஆயுதப் பயிற்சி எடுத்து, பெரும் நில மீட்புச் சமர்களில் பங்குகொள்வது எமது தேசத்திற்கு பெருமை சேர்க்கிறது. எமது விடுதலைப் போராட்டத்தில் பரந்துபட்ட பொதுமக்கள் இணைந்து கொள்ளும் பொழுதுதான் அது மக்கள் போராட்டம் என்ற உயர்நிலை அரசியற் பரிமாணம் பெறுகிறது. எமது ஆயுதப் போராட்டத்தில் மக்களின் பங்களிப்பு மேலும் மேலும் பெருக வேண்டும். அதுதான் எமது போராட்டத்தில் பாரிய திருப்புமுனைகளை ஏற்படுத்தும். அதுதான் எமது மண்ணில் எதிரியின் ஆக்கிரமிப்பிற்கு முடிவுகட்டி எமது விடுதலை இலட்சியத்தை வெகுவிரைவில் நிறைவு பெறச்செய்யும்.


**– தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வே.பிரபாகரன் அவர்கள்.**

2000ம் ஆண்டு மாவீரர் நாள் உரையிலிருந்து


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தலைவாசல்




**கலை பண்பாட்டு**

**அரசியல் சமூக ஏடு**

★

இருபதாம் ஆண்டு

ஜனவரி

**2001**

திருவள்ளுவர் ஆண்டு 2032

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும்
தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 01 - 43 58 11 42
Fax: 01 - 43 58 11 91
e.mail:erimalai@freesurf.fr

## போர்நிறுத்தமும் - தயார்நிலையும்

புலிகள் தமது முதற்கட்டப் போர்நிறுத்தத்தை மேலும் நீடித்து சிங்களத் தலைமைக்கு பெரும் அரசியல் - இராஜதந்திர நெருக்கடியை ஏற்படுத்தி யுள்ளனர். போர்நிறுத்தத்திற்கு உடன்பட மாட்டோம் என்ற சிங்களத்தின் கடும் போக்கை உலக நாடுகளின் தீர்ப்புக்கு விட்டதன் மூலம் சந்திரிகாவினதும் அவரது பரப்புரையாளர் கதிர்காமரதும் அரசியல் - இராஜதந்திர தில்லுமுல்லுகளுக்கு புலிகள் முற்றுப்புள்ளியிட முனைந்துள்ளனர்.

இந்தப் போர்நிறுத்த அறிவிப்பால் உலகசமூகத்தின் மத்தியில் சாதகமான அலையை புலிகள் ஏற்படுத்துகின்றனர். சிங்களத்தின் போர்முயற்சிக்கு ஊன்றுகோலாக நின்ற சில நாடுகளும், ஆதரவு சக்திகளும் தற்போது தமது முன்னைய போக்குப் பற்றிய மீள்பார்வைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். சிங்கள அமைப்பு தனது முரண்பட்ட நிலைப்பாட்டால் மேலும் மேலும் முரணான சர்வதேச சூழ்நிலைக்குள் தள்ளப்படும் நிலைக்கு இட்டுச்செல்லப்பட்டுள்ளது. அகத்தே முற்றிய இனவாத நோயால் பீடிக்கப்பட்ட சிங்களம் இதுகாலவரை புறத்தே வெளிக்காட்டிய போலித்தனமான தோற்றத்தை புலிகளின் தொடர் அரசியல் நகர்வுகளால் இழந்து வருகின்றது.

சிங்களத்தைப் பொறுத்தவரை உலக இணக்க முயற்சிகளுக்கு செல்வதை பீதியுடனேயே அணுகுகின்றது. தமிழர்களின் தேசிய தன்னாட்சி உரிமை பற்றிய வாதங்களில் ஈடுபட சிங்களம் தயாராகவில்லை. மாறாக, தனது இராணுவ நிலையை மேலும் மேலும் பலப்படுத்தி அதன் மூலம் தமிழர்களின் அரசியல் உரிமைகள் தொடர்பான விவாதங்களை இல்லாதாக்குவது மட்டுமே சிங்களப் பேரின வாதத்தின் நோக்கமாகவுள்ளது. குவிக்கப்பட்ட கனரக ஆயுததளபாடங்கள் மீது கொண்ட அதீத நம்பிக்கையால் போரை தொடரும் தனது எண்ணத்தில் சிங்களம் குறியாகவுள்ளது. ஆனையிறவுப் பிரதேசத்தை மீளக்கைப்பற்றுதல் உட்பட பல தொடர் இராணுவ இலக்குகளுடன் போரைத் தொடர எண்ணும் சிங்களத்தை, அரசியல் - இராஜதந்திர முனைகளில் சர்வதேச ஆதரவுடன் சந்திக்க புலிகள் முயல்வது தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றின் மற்றுமொரு சிறப்பான பரிமாணமாகும்.


எனினும், இனவாத நோயால் பீடிக்கப்பட்ட சிங்கள தேசத்தினை நன்கறிந்த தமிழர்களும், புலிகளும் கிளாலி - எழுதுமட்டுவாள் - நாகர்கோவில் பகுதியூடான பெரும் போர்க்களத்தின் முக்கியத்துவத்தை உணர்வர். சிங்களத்தின் உச்ச நாசகார பலம் இங்கு பாவிக்கப்படும் என்பதையும் உணர்வர். பெரும் வீரசரித்திரமாக இடம்பெற்ற ஆனையிறவை மீள ஆக்கிரமிக்கும் சிங்களத்தின் நோக்கு விரிவாக்கம் பெறுவதையும் காணலாம். இந்த போர்முனையின் போக்கை தீர்மானிக்க சந்திரிகா தொடர்ந்தும் பல ஆயுதக் கொள்வனவுகளை மேற்கொள்கின்றார் என்பதும், முழுச் சிங்கள அமைப்பும் இதனை எதிர்பார்த்துள்ளது என்பதும் கொழும்பு ஊடகங்கள் ஒப்புக்கொள்ளும் உண்மைகளாகும்.

தமது வலிந்து தாக்குதல் நடவடிக்கையை நிறுத்தி, தற்காப்பு நடவடிக்கைகள் என்ற மட்டத்தில் போரினை எதிர்கொள்ளும் போராளிகள், தமது கைகளைப் பலப்படுத்தும் பணிக்காக புகலிடத் தமிழர்களின் உழைப்பை இவ்வரலாற்றுத் தருணத்தில் எதிர்பார்ப்பர். அனைத்துலக நல்லிணக்க முயற்சிகளையும் ஆதரிக்கும் அதே வேளை, சிங்களத்தின் அனைத்து இராணுவ நடவடிக்கைகளுக்கும் தயார்நிலையிலே தமிழீழம் எப்போதும் இருக்க வேண்டிய சூழ்நிலையே நிலவுகின்றது. அந்த தயார் நிலையில் புகலிடத் தமிழர்களும் இருந்திடல் வேண்டும்!



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# ஒன்றுதிரண்ட தமி

# பொங்

2001 ஜனவரி 17இல், மீண்டுமொருமுறை சிதைக்கப்பட்டிருக்கின்றது சிறீலங்கா அரசின் முகத்திரை. இம்முறை அதன் முகத்தில் ஓங்கி அறைந்திருப்பது, யாழ். பல்கலைக்கழக மாணவர் சமூகமும், அவர்கள் பின்னே அணிதிரண்ட பொதுமக்களுமே.

விடுதலை வேண்டிநிற்கும் ஈழத் தமிழ்ச் சமூகத்தின் ஒட்டுமொத்தக் குரலாய், யாழ். குடாநாட்டின் மத்தியில் பொங்கி வெடித்



திருக்கின்றது 'பொங்குதமிழ்'. இவ்எழுச்சி நிகழ்வானது அது நடைபெற்ற இடம், காலம், சூழ்நிலை போன்ற காரணிகளினடிப்படையில் பார்க்கின்றபோது, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனிச் சிறப்பு மிக்கதாகத் திகழ்கின்ற அதேவேளை, விடுதலைப் போரானது மற்றுமோர் புதிய பரிமாணத்தை எட்டி நிற்பதனையும் வெளிக்காட்டி நிற்கின்றது.

காலம்காலமாக தமிழீழ மக்களின் அடிப்படை உரிமைகளையும், அதற்காக கிளர்ந்தெழுந்த அவர்களது விடுதலைப் போராட்டத்தையும், அந்தக் காலம் முதல் இந்தக் காலம்வரை ஆயுத பலாத்காரத்தின்மூலம் அடக்கி ஒடுக்கிவிடலாம் எனக் கங்கணம் கட்டிநிற்கும் சிறீலங்கா அரசானது, ஆரம்பகாலங்களில் எவ்வாறு தமிழ் மக்களின் அமைதிவழி சாத்வீகப் போராட்டங்களுக்கெதிராகச் செயற்பட்டதோ, அதே போன்றே இப்பொழுதும் யாழ். பல்கலைக் கழக மாணவர் சமூகம் ஏற்பாடு செய்த 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வினையும் குழப்பியடித்து இல்லாமற் செய்துவிடலாம் எனப் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டது. இருப்பினும் மாணவர்களும், மக்களும் காட்டிய வியத்தகு உறுதியின் பயனாய், சிறீலங்கா அரச படைகளின் கையாலாகாத்தனம் கடந்த 17.01.2001 நண்பகல் 12.30 மணியுடன் வரலாற்றுப் பதிவாகிப்போனது.

இரு இனங்களுக்கிடையில் நடைபெறுகின்ற ஆயுதப் போராட்டத்தின் மத்தியில், ஓர் அந்நிய அதாவது, எதிரிப்படைகளின் ஆக்கிரமிப்பிற்குள் இருந்துகொண்டு, அதுவும் 'சமாதானம் வேண்டாம் யுத்தம்தான் தீர்வு' என்கிற போர் வெறிபிடித்த ஓர் அரச இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருந்துகொண்டு, சமாதானம், பேச்சுவார்த்தை, யுத்தநிறுத்தம் என்று குரலெழுப்புவதென்பது ஒன்றும் இலகுவான காரியமல்ல.

அப்படி இருந்தும் வெற்றிகரமாக இவ் அதிசயம் நடந்தேறியிருப்பதானது, பல உண்மைகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றது என்பதனையும் எண்ணிப்பார்க்க வேண்டியது அவசியமே.

'சமாதானத்துக்காகவே யுத்தம் செய்கின்றோம்' என்று கூறிக்கொண்டு, யாழ்ப்பாண மண்ணையும், மக்களையும் 'சூரியக் கதிர்' என்கிற படை நடவடிக்கையின் மூலம் ஆக்கிரமித்துக்கொண்ட சிறீலங்கா அரச படைகள், தமது கட்டுப்பாட்டின் கீழ் யாழ்ப்பாண மக்கள் சகல உரிமையுடனும், சுதந்திரமாக, சுபீட்சமாக வாழ்கின்றார்கள் என்றே இதுவரை வெளி உலகை நம்ப வைத்து வந்தது. இதனைப் பொடிப்பொடியாக்கிவிட்டது பொங்குதமிழ் நிகழ்வு.

பொங்குதமிழ் நிகழ்வானது யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் முன்னெடுப்பில், நீண்ட பல நாட்களைக் கொண்ட ஓர் நிகழ்வாக ஒழுங்கு செய்யப்பட்டு, அதன் உச்சக்கட்டமாக 'பொங்குதமிழ் எழுச்சி விழா' என்னும் நிகழ்வு கடந்த 17.01.2001இல் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. பல்வேறு தடைகளையும், நெருக்குவாரங்களையும் உடைத்தெறிந்தே இந்






www.tamileelamarchive.com

# ...எழுச்சிக்கு வித்திட்ட

# ...தமிழ்

தமிழீழ ஆவணக் காப்பகம்



மொறிஸ் தர்மபாலன்

நிகழ்வானது திட்டமிட்டபடி நிறைவேற்றப்பட்டது.

ஆரம்பத்தில் இதற்குத் தடைவிதித்த சிங்கள இராணுவமும், பொலிசாரும் பின்னர் வெளிப்படையாகவே வன்முறைகளிலும், எதிர்ப் பரப்புரையிலும் இறங்கினர். பல்வேறுபட்ட மிரட்டல்களும், அச்சுறுத்தல்களும் மாணவர்கள் மீது விடுக்கப்பட்டதுடன், ஒருசில மாணவர்களைக் கைதுசெய்யும் முயற்சியிலும் இறங்கியது அரச படைகள். பலாலிப் படைத்தளத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட ஓர் பத்திரிகையாளர் மாநாட்டில், யாழ். இராணுவத் தளபதியான அன்ரன் விஜேந்திரா அவர்கள், சமாதானம் கோரி ஆர்ப்பாட்டம், பேரணிகள் நடத்துவது குற்றமாகக் கருதப்படும் என்றும், இதற்குத் தாம் ஒருபோதும் அனுமதி தரப்போவதில்லை என்றும் கூறியதோடு, இந்நிகழ்வுக்கு 5 சதவீத மானோரே ஆதரவுள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்றும் குறிப்பிட்டார். இது தவிர பல்கலைக்கழக மாணவர்கள் பலர் புலிகளின் ஆதரவாளர்கள் என்றும், புலிகளாலேயே மாணவர்கள் தூண்டப்பட்டு இவ்வாறு தவறான வழியில் செல்கின்றார்கள் என்றும் கதையளந்தார். இதே போன்றே யாழ். மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகரும், பொங்குதமிழ் நிகழ்வைத் தடைசெய்வதாகக் கூறி, தேவையேற்படின், கண்ணீர் புகை, குண்டாந்தடிப் பிரயோகம் என்பவற்றுடன் துப்பாக்கிச் சூட்டையும் நடத்தவேண்டி வரலாம் என்றும் குறிப்பிட்டார். ஆனால், மாணவர்களோ, இதற்கு 99 சதவீதமானோர் ஆதரவு தருவதாகவும், இதை நடத்தியே தீருவோம் என்றும் அரச படைகளுக்கெதிராகச் சவால் விடுத்ததோடு, அதற்கான தயாரிப்பு வேலைகளிலும் மும்முரமாக ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்கெங்கும் வீடுவீடாகச் சென்று பிரச்சாரங்களை மேற்கொண்ட மாணவர்கள், பாடசாலைகூட விநியோகித்தனர். இவ்வாறான மாபெரும் பிரச்சாரத்தின் மூலம் மிகப் பெரிய ஆதரவு அலை யாழ். பல்கலைக் கழக சமூகத்துக்குக் கிட்டியதுடன், அவர்களுக்கு ஆதரவாக, கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகமும், வவுனியா பல்கலைக் கழக மாணவர்களும், கல்வியியற் கல்லூரி மாணவர்களும் எனப் பல்வேறு தரப்பிலிருந்தும் ஆதரவாக அவ்வப் பகுதிகளில் நிகழ்வுகள் நடாத்தப்பட்டன.






களுக்குச் சென்று தமது நிலைப்பாட்டைத் தெரிவித்து ஆதரவு கோரினர். அதேபோன்று, பல்வேறு அமைப்புக்களிடமும், ஏனைய மாவட்ட பல்கலைக் கழக மாணவர்களிடமும் ஆதரவு வேண்டினர். அத்தோடு நின்றுவிடாது, தமது நியாயப்பாட்டைத் தெரிவித்து வெளிநாட்டுப் பொது நிறுவனங்கள், அமைப்புக்களுக்கும் மகஜர்கள் அனுப்பினர். மும்மொழியில் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களை இராணுவத்தினருக்குக் இவ்வாதரவானது அவுஸ்திரேலியா, கனடாவின் பல மாநிலங்கள் என வியாபித்து யாழ். மாணவர் சமூகத்தை மேலும் உற்சாகப் படுத்தியது.

இது இவ்வாறு இருக்க படைத்தரப்பும் தனது எதிர் நடவடிக்கையில் மிகத் தீவிரமாகவே செயற்பட்டது. யாழ். பல்கலைக்கழகத்தைச் சுற்றிவர வீதியெங்கும் வீதித்தடைகள் போட்டும், பொலிசாரைக் குவித்தும் தீவிர கண்காணிப்புக்களை மேற்கொண்டதுடன், பல்கலைக்கழக




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



‘கயவரின் பிடிக்குள்ளும்
கானகத்து வாழ்வோயுனக்கு – பொங்கு தமிழுக்கு
நெஞ்சு நிமிர்த்தி நீ விரை
நீ விரைவதால் விளையுது விடுதலை’



‘உண்மையை மறைக்கும் துட்டனின் படைக்கு
வெண்மையும் வெறுக்கும்தான்
பொங்கிடும் தமிழுக்கு தோள்கொடுத்தால்
உண்மையும் தடுக்கும்தான்’



‘மட்டக்களப்பே – மடைதிறந்த
மாணவர் வெள்ளமே
பொங்கிடும் தமிழால் உம் நாடும்
விரைவினில் விடுதலைபாடுமே.’

மாணவர்கள் விரிவுரையாளர்கள் எனப் பலரையும், பரிசோதித்து முடிந்தவரை அவர்களுக்குச் சிரமத்தைக் கொடுத்தது. பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்ட மாணவர்களை வீதிகளில் மறித்து, தமது காவலரண்களில் பலமணிநேரம் தடுத்து வைத்திருந்தனர். பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்களையும், அதிபர், ஆசிரியர்களையும், பொங்குதமிழ் நிகழ்வுக்கு ஆதரவு கொடுக்கவேண்டாம் என்று பிரச்சாரம் செய்ததுடன், மகளிர் பாடசாலைகளுக்குச் சென்று ஒழுங்கீனமாக நடந்துவிட்டுப் பழியை பல்கலைக்கழக மாணவர்கள் மீது சுமத்தும் முயற்சிகளையும் மேற்கொண்டனர். இராணுவம் தவிர, அரசுக்கு முண்டுகொடுத்துச் செயற்படும் குழுக்களில் ஒன்றான ஈ.பி.டி.பி. கட்சியும் மாணவர் எழுச்சியை ஒடுக்கும் தீவிர செயற்பாடுகளில் பங்குகொண்டன. ஒலிபெருக்கி கட்டப்பட்ட வாகனம் மூலம் ஊரூராகச் சென்று மக்களை இதில் கலந்துகொள்ளவேண்டாம் என்று கூறியதுடன், இந்துக் கோவில் ஒன்றில் ஆலய ஒலிபெருக்கியின் மூலம் 17ஆம் திகதி மாணவர்களை பாடசாலைக்குச் செல்லவேண்டாமென்றும், மீறிச் சென்றால் பல அசம்பாவிதங்கள் ஏற்படும் என்றும் அடிக்கடி அறிவித்துக் கொண்டிருந்தனர். வலிகாமப் பகுதிப் பிரதேசசபைத் தலைவர் ஒருவர் தனது அதிகார வரம்பை மீறிப் பாடசாலை அதிபர், ஆசிரியர்களை அழைத்து நிகழ்வுக்கு ஆதரவு கொடுக்க வேண்டாம் என்று எச்சரிக்கை செய்தார்.

இவ்வாறு அரசும், அதன் படைகளும் முடிந்தவரை தம்மாலான முயற்சிகளையெல்லாம் பிரயோகித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சியை முறியடிக்கப் போராடினர். இறுதியில் நடந்தது என்ன? எவ்வளவோ தடுத்தும் மக்கள் வெள்ளம் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு பொங்குதமிழை சிறப்பித்தது.

17.01.2001 காலை 10.30 மணிக்கு திட்டமிட்டபடி ‘பொங்குதமிழ்’ எழுச்சி நிகழ்வு சுதந்திர தீபமேற்றலுடன் ஆரம்பமானது. மாணவர்கள், பொதுமக்கள், மதத்தலைவர்கள், பத்திரிகையாளர்கள் என யாழ். பல்கலைக்கழக மைதானமே நிரம்பி வழிய பல்லாயிரக் கணக்கில் மக்கள் அணிதிரண்டு பொங்குதமிழில் தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர். மஞ்சள் சிவப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த மைதானத்தில் விசேட மேடை ஏற்பாடு செய்யப்பட்டு, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. பல எழுச்சி உரைகள் ஆற்றப்பட்டன. மைதானத்தின் நடுவே முட்கம்பி வேலியமைக்கப்பட்டு அதனுள்ளே எலும்புத் துண்டுகள் கட்டப்பட்டு, தொலைபேசி, தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி, போன்ற மின் உபகரணங்கள் வைக்கப்பட்டு, அதில் சுகம் காணும் மக்கள் இறுதியில் ‘சுதந்திரமாக வாழ்வோம்’ எனக் கூறி முட்கம்பி வேலியினை அறுத்தெறிந்து, வெளியேறுவதான காட்சி அமைப்புடன், ஓர் குறியீட்டு நாடகம் நடாத்தப்பட்டது. இதன்மூலம், யாழ்ப்பாணம் ஓர் திறந்தவெளிச் சிறைச்சாலை என்றும், அவர்கள் உண்மையான சுதந்திரத்திற்காக ஏங்குகின்றார்கள் என்பதும் எடுத்துக் காட்டப்பட்டது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் தமது வாயினை கறுப்புத் துணிகளால் கட்டியவாறு காணப்பட்டனர். இவ்வாறு எழுச்சிகரமாக நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்க, ஏராளமான மக்களையும், மாணவர்களையும் படைத்தரப்பு வீதித்தடைகளில் மறித்து பலவந்தமாகத் திருப்பி அனுப்பிக்கொண்டிருந்தனர். ஆயினும், அவர்களில் பலர் குறுக்கு வீதிகளால் வந்து மதில் பாய்ந்து நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். இவவாறு சென்றோரின் நூற்றுக்கணக்கான துவிச்சக்கர வண்டிகள் இராணுவ ‘ட்ரக்’குகளில் ஏற்றிச் செல்லப்பட்டன.

திருப்பி அனுப்பப்பட்ட 47 ஒன்றியங்களின் பிரதிநிதிகளும், மதத்தலைவர்களும், அருட் சகோதரிகளும் இணைந்து ஒன்றிய வளாகத்தில் கூடி பிரார்த்தனைகளிலும், பொங்குதமிழ் நிகழ்ச்சிக்கு ஆதரவாக கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். சகல வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டு நிகழ்விற்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது. மதியம் 12.00 மணிக்கு அனைத்து ஆலய மணிகளும் ஒலிக்க, மக்கள் எழுந்து நின்று தாயக விடுதலைக்கு உயிர் நீத்த மாவீரர்கள் நினைவாக அகவணக்கம் செலுத்தினர். விழாவின் இறுதியில் ‘பொங்குதமிழ்ப் பிரகடனம்’ பல்கலைக்கழக மாணவர்களால் வெளியிடப்பட்டது.

“இந்தப் பொழுதில் திரண்டிருக்கும்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எங்கள் ஆத்மாவின் குரலை ஒரே சுருதியில் வெளிப்படுத்துகின்றோம். அரசு இக்கொடிய யுத்தத்தை நிறுத்தி, அர்த்தமும், நீதியுமான பேச்சுவார்த்தையினை விடுதலைப் புலிகளுடன் உடன் ஆரம்பிக்க வேண்டும். இதன்வழி தமிழரின் நீண்டகால ஆத்ம வெளிப்பாட்டினை, பெரு விருப்பினை, அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் தமிழ்த் தேசியம், மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை இவற்றினை அங்கீகரிக்கும் நீதியானதோர் அரசியல் தீர்வினை நாம் காணவேண்டும்.

"சர்வதேச சமூகமே! நீண்டகால அடக்குமுறைக்குள் பயந்து உறைந்து போயுள்ள எமது மக்களின் உண்மையான மன உணர்வுகளை, அபிலாசைகளை, உரியவாறு நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நீதியான, அமைதியான எங்கள் வாழ்விற்கான தீர்வினைக் காண் பதில் உங்கள் மனச்சாட்சிக்கு உரியவாறு பேசவேண்டும்"

இவ்வாறு பொங்குதமிழ்ப் பிரகடனம் தமது பேரணிக்குரிய காரணத்தை தெளிவாகச் சுட்டிக்காட்டியதுடன், சர்வதேசத்திற்குத் தனது உணர்வலைகளை வெளிப்படுத்தி 12.30 மணியுடன் நிகழ்வுகள் யாவும் நிறைவடைந்தது. நிகழ்வின்போது மைதானத்துக்குள் இருந்த மக்களை வீதியில் இருந்து வேலிகளுக்கூடாக வீடியோ படம் எடுக்கமுனைந்த இராணுவத்தினரது முயற்சி, மாணவர்களால் மறைப்புக்கள் போட்டு முறியடிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

படைத்தரப்பின் கைகளையும் மீறி, எப்படியோ பொங்குதமிழ் எழுச்சி விழா நடைபெற்றுவிட்டது. இது அடக்குமுறைக்குள் வாழும் குடாநாட்டு மக்களிற்கு மிகப்பெரிய வெற்றியே. ஆனால், படைத்தரப்பிற்கோ இதுவொரு கசப்பான அனுபவமே.

திருகோணமலையில் கடந்த நவம்பர் மாதம் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நான்கு தமிழ் இளைஞர்களின் நினைவாக படைத்தரப்பைக் கண்டித்து, அப்பகுதி மக்கள் எழுச்சிப் போராட்டங்களை நடத்தினர். இது நடந்து சரியாக ஒரு மாத காலத்தின் பின்னர் டிசம்பரில் மேலும் இரு தமிழ் இளைஞர்களை, அப்பகுதியில் வைத்து கடற்படையினர் சுட்டுக்கொன்றனர். இவர்கள் எதற்காகச் சுடப்பட்டார்கள் என்றால், அப்பகுதியில் நடைபெற்ற பேரணிக்கு முன்நின்று செயற்பட்டவர்கள் இந்த இரண்டு இளைஞர்களுமே. ஏற்கனவே நான்கு உயிர்களுக்காக ஆட்சேபித்த மக்கள், அதற்காக மீண்டும் இரு உயிர்களை இழந்தார்கள். இதனால் மேலும் உயிரிழப்புக்கு அஞ்சி மக்கள் மௌனித்துப் போயினர். இவ்வாறு தனது ஆயுத பலத்தினால் அப்பகுதி மக்களின் எழுச்சியை கட்டுப்படுத்திவிட்ட சிங்களப் படைகளுக்கு யாழ்ப்பாணத்தில் 'பொங்குதமிழை' அடக்க முடியாமற்போனது பெரும் ஏமாற்றமே.

எந்தக் காரணங்களிற்காக மாணவர் எழுச்சியை அடக்குவதற்கு படைத்தரப்பு முயன்றதோ, அதே காரணங்கள், படைத்தரப்பினாலேயே வெற்றியடைந்துள்ளது என்பதே உண்மை. ஏனெனில், மாணவர் எழுச்சிப் பேரணியை தம்பாட்டுக்குப் பேசாதுவிட்டிருந்தால், அதுபாட்டுக்கு யாழ்ப்பாணத்துக்குள்ளேயே அமைதியாக நடைபெற்றிருக்கும். சும்மாகிடந்த சங்கை ஊதிக்கெடுத்த ஆண்டியின் நிலையே இப்போது சிங்களப் படைகளிற்கும்.

ஏற்கனவே பல்வேறு தோல்விகளால் விகாரித்துப்போயிருக்கும் சிங்களப் பேரினவாதத்தின் முகத்தில், 'பொங்கு தமிழ்' எழுச்சித் தீயானது மேலும் வடுக்களை ஏற்படுத்தியிருப்பது உண்மை. இந்த வடுக்களுடனும், அதிலிருந்து வடிகின்ற ஊனங்களுடனும் சிங்களப் பேரினவாதம் சும்மா இருந்துவிடாது. ஏதோ ஒரு வழியிற் பழிதீர்க்கவே அது தருணம் பார்த்திருக்கும் என்பதனை யாழ். சமூகமும், சர்வதேச சமூகமும் விழித்திருந்து நோக்கவேண்டியது காலத்தின்தேவை. ஏனெனில், அதன் பழிதீர்க்கும் படலத்திற்கான ஏராளமான உதாரணங்களைச் சிங்களப் பேரினவாதத்தின் வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டுவதன்மூலம் பதில் கிடைக்கும்.

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியிலும், அரசியல்ரீதியிலும் வெற்றிவாகை சூடியிருக்கும் இவ்வேளையில், பொங்குதமிழும் வெற்றி பெற்றிருப்பதானது, விடியலிற்கான விடுதலைப்பாதை உரியமுறையில் செப்பனிடப்பட்டு வருகின்றது என்பதே வரலாற்று நிதர்சனம்.




**அவுஸ்திரேலியா**

கடந்த 17.01.2001 அன்று அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழ் மாணவர்கள் தாயகத்தில் தமது உறவுகள் நடத்தும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்விற்கு ஆதரவு தெரிவித்து அமைதிவழியில் திரண்டனர். மெல்பேர்ண், சிட்னி ஆகிய இருநகரங்களில் பொங்கு தமிழிற்கு ஆதரவாக நடத்திய போராட்டங்கள் நடந்தேறின.






**கனடா**

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்விற்கு ஆதரவு தெரிவித்து கனடாவின் ரொறன்ரோ நகரிலும் ஒட்டோவா நகரிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மாணவர்கள் அமைதிப் போராட்டங்களை நடத்தியுள்ளனர்.






www.tamileelamarchive.com

# தொடரும் ராணுவத்தின்

# யாழ். இல் அதி

# மனிதப்புதை

யாழ். குடாநாட்டை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்த பின்னர் அங்கு பல மனிதப்புதைகுழிகள் தோன்றியுள்ளன. சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல்போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டோர் இந்த மனிதப் புதைகுழிகளில் முகவரி அற்றுக்கிடக்கின்றனர்.

யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்த சிறீலங்கா அரசும் அதன் படைகளும் அங்கு சிவில் நிர்வாகமும் சகஜவாழ்க்கையும் நிலவுவதாக உலகிற்கு பிரச்சாரம் செய்துவரும் வேளையில், அங்கு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் இன அழிப்பு நடவடிக்கைகளும் இதன்மூலம் தோன்றிய சில மனிதப் புதைகுழிகள் தொடர்பான விடயங்களும் எவ்வாறோ அம்பலத்துக்கு வந்துவிடுகின்றன.

செம்மணிப் பகுதியில் பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு புதைகுழிகளில் புதைக்கப்பட்டு பாரிய ஒரு இனப்படுகொலையினை சிறீலங்கா இராணுவம் ஏற்கனவே நிறைவேற்றி இருந்தது. இந்தவிடயம் கிருசாந்தி என்ற பாடசாலை மாணவி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்ட பின்னரே அம்பலத்துக்கு வந்தது.


செம்மணிப்புதைகுழி தொடர்பான விடயங்கள் வெளிவந்ததும் இதுதொடர்பான பரவலான எதிர்ப்பார்ப்பாட்டங்களும், நீதிமன்ற விசாரணைகளும் இடம்பெற்றன. நீண்டநாட்களாக இழுபறி நிலையில் நடைபெற்ற நீதிமன்ற விசாரணைகளின் பின்னர் குற்றவாளிகளான இராணுவத்தினர் உரியமுறையில் தண்டிக்கப்படாமலே இப்புதைகுழி விவகாரம் ஓய்ந்துபோனது.

தென்மராட்சி மிருசுவில் பகுதியில் மீண்டும் மனிதப் புதைகுழிகள் இருப்பதற்கான ஆதாரங்கள் தற்போது வெளிவரத்தொடங்கியுள்ளன. இதற்கு வலுச்சேர்ப்பதுபோல் அமைந்திருப்பது கடந்த டிசம்பர் 25 ஆம் திகதி மிருசுவில் பகுதியில் எட்டு மனித சடலங்களும் மேலும் சில உடுபுடவைகளும் புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட சம்பவமாகும்.

மிருசுவில் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை நாவலர் மடத்தில் தங்கியிருந்த ஒன்பது பேர் கடந்த 19ஆம் திகதி மிருசுவில் பகுதிக்கு தமது வீடுகளைப் பார்த்து வருவதற்காகச் சென்றனர். இவ்வாறு சென்ற ஒன்பது பேரில் ஒருவர் மாத்திரம் படுகாயமடைந்த நிலையில் உயிருடன் தப்பி வந்திருந்தார். இவ்வாறு தப்பிவந்தவரான பொன்னுத்துரை மகேஸ்வரன் என்பவர் தாம் அனைவரும் சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டதாகவும், தான் ஒருவிதமாக தப்பி வந்ததாகவும் தெரிவித்திருந்தார்.

இதன்படி வீடுபார்க்கச் சென்ற ஏனைய எட்டுப்பேரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட விடயம் உறுதியாகியது. தப்பி வந்தவர் கொடுத்த தகவலின்படி அவர்கள் எட்டுப்பேரும் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழவே இது தொடர்பான விசாரணைகள் தீவிரமடைந்தன.

பொன்னுத்துரை மகேஸ்வரனும், இச் சம்பவம் தொடர்பாக சந்தேசத்தின் பேரில் கைதான இராணுவச் சிப்பாயும் அடையாளம் காட்டிய இடத்தினை தோண்டியபோது அங்கு காணாமல்போயிருந்த எட்டுப்பேரும் சடலங்களாக மீட்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் கைகள் கட்டப்பட்டு ஆடைகள் களையப்பட்டு தாக்கப்பட்டு பயனைட் கத்தியால் கழுத்துவெட்டி கொல்லப்பட்டவர்களில் ஐந்து வயது, பதின்மூன்று வயதுச் சிறுவர்களும் அடங்குகின்றனர். இவர்களது தந்தையும் இதில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.



சடலங்கள் புதைக்கப்பட்ட இடத்தில் இருந்து சடலங்கள் தோண்டி எடுக்கப்படும்போது அங்கு மேலும் பெண்கள் அணியும் உள்ளாடை, சேலை என்பனவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவ்விடயம் பெரும் பரபரப்பையும் அங்கு மேலும் பல மனிதப்புதைகுழிகள் இருப்பதற்கான சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளன.

ஏனெனில், கைதுசெய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வர்கள் எட்டுப்பேரும் ஆண்களாவர். இவர்கள் புதைக்கப்பட்ட இடத்தில் இருந்து பெண்கள் அணியும் ஆடைகள் மீட்கப்பட்டுள்ளன. எனவே, மேலும் பலர் இங்கு படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டதற்கு ஆதாரமாக இந்தப் பெண்கள் அணியும் ஆடைகள் அமைந்திருக்கின்றன.

அத்துடன் அச்சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்டவரின் மனைவி நீதிமன்ற விசாரணையின்போது சாட்சியமளிக்கையில் மேலும் சில விடயங்களை தெரியப்படுத்தியுள்ளார்.

படுகொலைசெய்யப்பட்டவரான தேவகுலசிங்கத்தின் மனைவியான ஜெயசுதா தனது சாட்சியில்

தனது கணவர் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் கடந்த 16ஆம் திகதி மிருசுவில் பகுதிக்கு வீடுபார்த்து வரச் சென்றபோது, அங்கு ஓரிடத்தில் துர்நாற்றம் வீசியதாகவும், கணவர் துர்நாற்றம் வீசிய இடத்தை தோண்டிப் பார்த்தபோது அங்கு பதினெட்டு வயது மதிக்கத்தக்க இளம் பெண்ணொருவரின் சடலம் மஞ்சள் நிற பஞ்சாபி உடையுடன் காணப்பட்டதாகவும், தான் அந்த இடத்துக்கு அடையாளமாக தனது பாதணியை கழற்றிவைத்துவிட்டு

## பற்றிப்பிடிக்கட்டும்!

பொல்லா அரக்கர் கோலோச்சும்
எம் புனித மண்ணில் மேலும்
நில்லாது விரிகின்றன
நீண்ட புதைகுழிகள்

வல்லாதிக்கம் வந்து
எம் இனத்தின்
வாழ்வைச் சிதைக்கும் இந்நேரத்தில்
மேலும் நில்லாது விரிகின்றன
நீண்ட புதைகுழிகள்

உண்மை நில்லாது மண்ணும்
உறைந்து விடுமென்றா
பேய்கள் இந்த
'ஊத்தைவேலை' யைச் செய்கின்றன?

ஒரு கொலையை மறைப்பதற்கு
தொடர்ந்து ஒன்பது கொலைகளா....?
அதுவும் எம் மண்ணிலா....?

இது இனியும் நிகழ்வதா....?
இப்படியே விடுவதா....?

செம்மணி விடயம்
சிதைந்து விட்ட தென்று வந்த
சிங்களவன்
இதைச் சிரித்துக் கொண்டா செய்தான்?

புதைகுழிகள் விரியும்
எமது புனித மண்ணில்
வதைபட்டு உதைபட்டு....
வாழ்வு அஸ்தமனமானவர்களின்
ஆத்தை, அப்பன் அள்ளிப்போகும்
அந்த சாபவார்த்தைகள்...
'அம்மணி' யை
பற்றிப்பிடிக்கட்டும் அப்படியேயாக....
(மிருசுவிலில் படுகொலை
செய்யப்பட்டவர்களின் நினைவாக....)

—அலெக்ஸ் பரந்தாமன்.

# கொலைகளால் ரிக்கும் தமிழச்

(ஜெயகுமார்)

வந்ததாகவும் தன்னிடம் கூறியதாக ஜெயசுதா தெரிவித்துள்ளார்.

பின்னர் கடந்த 19ஆம் திகதி அப்பகுதிக்குச் சென்ற தனது கணவர் உட்பட எட்டுப்பேரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் எனவும், அவர் தனது சாட்சியில் தெரிவித்திருக்கின்றார்.

இப்படுகொலை சம்பந்தமான நீதிமன்ற விசாரணைகள் நேற்று முன்தினம் பருத்தித்துறையில் அமைந்துள்ள சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்றன. அப்போது சாட்சியமளிக்கையிலேயே இத்தகவல்கள் அவரால் வெளியிடப்பட்டன அத்துடன், அங்கு சாட்சியமளித்த மந்திகை மருத்துவமனை மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை தனது சாட்சியத்தில் புதைகுழியை தோண்டும்போது அங்கு உடல்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் கழுத்து பயனைட் கத்தியால் வெட்டப்பட்டிருந்ததாகவும் மேலும் அங்கிருந்து பெண்கள் அணியும் உள்ளாடையும் சேலையும் மீட்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி இருவரது சாட்சியங்களின்படியும் மிருசுவில் பகுதியில் மேலும் பலர் படுகொலை செய்யப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் வெளிவந்துள்ளன. குறிப்பாக பெண்கள் படுகொலை செய்யப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் வெளிவந்துள்ளன. இவர்கள் யார்? எப்போது கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டார்கள்? என்ற விடயங்கள் இன்னும் வெளிவரத்தொடங்கவில்லை.

இப்படுகொலை தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் தற்போது தொடர்ந்து இடம்பெற்றுவருவதால், அங்கு மேலும் பல புதைகுழிகள் இருப்பதற்கான ஆதாரங்கள் வெளிவரலாம். ஆயினும் அவ்வாறான புதைகுழிகள் தோண்டப்பட்டு குற்றவாளிகளான இராணுவத்தினர் தண்டிக்கப்படுவார்களா? என்பதுடன் மேலும் இவ்வாறான படுகொலைச் சம்பவங்கள் இடம்பெறாது தடுக்கப்படுமோ? என்பதும் கேள்விக்குறியே.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தமிழீழ விடுதலைப் புலிகள்
**Liberation Tigers of Tamil Eelam**

TAMIL EELAM

URGENT PRESS RELEASE

International Secretariat
London
23rd January 2001

TAMIL TIGERS EXTEND UNILATERAL CEASEFIRE

The Liberation Tigers of Tamil Eelam (LTTE) in an official statement issued from its headquarters in Vanni, northern Sri Lanka, extended its unilateral cessation of hostilities for another month and called upon the international community to persuade the Sri Lanka government to reciprocate favourably and resume negotiations in a cordial atmosphere of peace and normalcy.

## நோர்வே அரசின் சமாதான முயற்சிக்கு மேலும் கால அவகாசம் அளிக்கும் நோக்குடன் ஒரு மாத காலத்திற்கு

# போர்நிறுத்தம்

**23.01.2001** அன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் வன்னியிலிருந்து விடுத்த அதிகாரபூர்வமான அறிக்கையில் தாம் பிரகடனம் செய்த ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடித்திருப்பதாக அறிவித்திருக்கின்றது. அத்தோடு தமது போர்நிறுத்த அறிவிப்பை ஏற்று சமாதானத்தைப் பேணும் இயல்பு நிலையை உருவாக்கி, பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு சிறீலங்கா அரசுக்கு அழுத்தம் பிரயோகிக்குமாறும் விடுதலைப் புலிகள் சர்வதேச சமூகத்தை இவ்வறிக்கையில் வேண்டிக் கொண்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த டிசம்பர் 24ஆம் திகதி ஒரு தலைப்பட்சமாக ஒரு மாதகாலத்திற்கு போர்நிறுத்தத்தை அறிவித்ததுடன் சிறீலங்கா அரசும் அதனை ஏற்றுப் பேணுமாறு வேண்டுகோள் விடுத்தது. ஆனால் சந்திரிகா அரசு புலிகளின் போர்நிறுத்தத்தை ஒரு அரசியல் ஏமாற்று வித்தையாக வர்ணித்து நிராகரித்ததுடன் அக்காலகட்டத்தில் பாரிய இராணுவ நடவடிக்கைகளிலும் ஈடுபட்டது. ஆயினும் விடுதலைப் புலிகள் இக்காலகட்டத்தில் போர்நிறுத்தத்தை ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் கடைப்பிடித்து தற்காப்புப் போரில் மட்டுமே ஈடுபட்டனர். விடுதைலப் புலிகளின் போர்நிறுத்தம் 24.01.2001 நள்ளிரவுடன் முடிவடைய இருந்தது.

"தற்போது நிலவும் இராணுவ நெருக்கடி பெரும் போராக விரிவடைவதை தவிர்க்கும் நோக்கத்துடனும், நோர்வே அரசின் சமாதான முயற்சிக்கு மேலும் கால அவகாசம் அளிக்கும் நோக்குடனும் நாம் எமது ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தை மேலும் நீடிக்க முடிவெடுத்திருப்பது சமாதானத்தில் எமக்குள்ள நேர்மையான அக்கறையையும், சமாதான வழியில் இன நெருக்கடிக்கு தீர்வு காணவேண்டுமென்ற எமது உண்மையான அபிலாசையையுமே எடுத்துக்காட்டுகிறது. தமிழர் தேசம் ஒருமித்த குரலாக சமாதானம் வேண்டி விடுக்கும் அறைகூவலுக்கும், சமாதான வழியில் சென்று பிரச்சினையைத் தீர்க்குமாறு சர்வதேச சமூகம் விடுத்து வரும் அழைப்பிற்கும் செவிமடுத்த நாம் இந்த முடிவை எடுத்தோம்" இவ்வாறு விடுதலைப் புலிகள் தலைமைச் செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

"எமது போர்நிறுத்த அறிவிப்பை ஏமாற்று வித்தை என சிறீலங்கா அரசு நிராகரித்தமை எமக்குக் கவலையையும் ஏமாற்றத்தையும் தருகின்றது. எமது நேர்மையான நல்லெண்ண சமிக்ஞையை சிங்கள அரசு இழிவு படுத்தியதும் அல்லாமல் போர்நிறுத்த காலகட்டத்தில் எமக்கு ஆத்திரமூட்டும் வகையில் பாரிய இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. இவ்விதமான கடும்போக்கான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதால் போரினால் ஏற்படும் உயிரழிவுகள் பற்றி இந்த அரசுக்கு எந்தவிதமான அக்கறையுமில்லை என்பதையும், வன்முறைப் பாதையில் தான் அதற்கு நாட்டமிருக்கின்றது என்பதையுமே உலகிற்கு எடுத்துக்காட்டியிருக்கின்றது" என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

"எமது போர் நிறுத்தப்பிரகடனத்தை ஏற்றுக்கொண்டு, போர் நெருக்கடியைத் தணிப்பதற்கும் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்குமாக நோர்வே அரசு தெரிவித்த யோசனைகளைச் செயற்படுத்த சிறீலங்கா அரசு முன்வருமானால் எமது விடுதலை இயக்கம் சமாதானப் பேச்சுக்களில் பங்குகொள்ளத் தயாராக இருக்கிறது. சிங்கள அரசு தனது போர்வெறி கொண்ட கடும்போக்கைக் கைவிட்டு, சமாதானப் பாதையை கடைப்பிடிக்குமாறு சர்வதேச உலகம், குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய நாடுகள், இந்தியா ஆகியன தமது இராஜதந்திர செல்வாக்கைப் பிரயோகித்து அழுத்தம் போடவேண்டும்" என்றும் புலிகளின் அதிகாரபூர்வ அறிக்கை கூறுகின்றது.

"சிறீலங்கா அரசு போர்நிறுத்தம் செய்வதற்கு தயங்குவதற்கும், சமாதானப் பேச்சுக்கான நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்குவதற்கு மறுப்பதற்கும் காரணமுண்டு. பிரித்தானிய அரசாங்கம் தனது புதிய பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகளை தடைசெய்ய வேண்டும் எனக் கோரிவரும் சிங்கள அரசு, சமாதான சூழ்நிலை ஏற்படாத வண்ணம் பகைமையையும் போர் சூழ்நிலையையும் தொடரச்செய்யவே விரும்புகிறது. புலிகளுக்கு உண்மையில் சமாதானத்தில் அக்கறையில்லையெனக் காட்டவும் விரும்புகின்றது" இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்நிறுத்தம் சம்பந்தமான தமது முடிவை சிறீலங்கா அரசாங்கத்திற்கு அதிகாரபூர்மான முறையில் அறிவிக்குமாறு லண்டனிலுள்ள தமது அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் ஊடாக நோர்வே சமாதானத் தூதுவர் திரு. எரிக் சுல்கைமிற்கு விடுதலைப் புலிகள் கூறியிருப்பதாகவும் இறுதியாக தலைமைச் செயலக அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# “தைத்திங்கள் மலரட்டும்”

‘தைத்திங்கள் மலரட்டும்’
வதை செய்தோர் காலம் போய்
விதை விதைக்கும் காலத்தை
கதையாகத்தந்தான் காண் கரிகாலன்
கவிதை சொல்லும் தைத்திங்கள் கனிகிறது.

திக்கெட்டும் புகழ் பரப்பி
திசை எங்கும் தமிழ் பரப்பி
கொட்டட்டும் போர்ப்பரணி வரலாறு
திகைக்கட்டும் சிங்களத்தின் அகராதி.

காலம் ஒரு பதில் சொல்லும்
கரிகாலன் சேனை விடையளிக்கும்
புதியதொரு வரலாறு உருவாகும்
புதிய தைப்பொங்கலுடன் உறவாடும்.

ஏருழவர் தொழிலாளர் சிற்பிகளின்
தேரூர்ந்த சிறப்புக்களைச் சிதைத்திருந்த
கொடூரத்தின் கும்பல்களை குதறிவிட்டோம்
கொஞ்சு தமிழ்க் கோலத் தை நீ வாழி.

கிராமியத்துப் படையணிகள் கிளம்பட்டும்
கிறுக்கழிக்க எல்லைப்படை விரையட்டும்
களமாடும் புலிச்சேனை தளைக்கட்டும்
களங்க மற்ற தைத்திங்கள் மலரட்டும்.

போர் ஆண்டு பூரணமாய் பொலியட்டும்
புகுந்து நின்று போர் முடிக்க இணையட்டும்
வீட்டிற்கொரு விடுதலைத் தீ கிளம்பட்டும்
விரைவான சுதந்திரமாய் மலரட்டும்.



–கவிஞர் செவ்வந்தி மகாலிங்கம்.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எல்லை காக்கும் இல்லங்கள்



-தமிழவள்

## சோட்டர்

'லிங்கம்' என்று கேளுங்கள் 'தெரியாது' என்பார்கள். 'எல்லைப்படையில் இருந்து இப்ப வீரச்சாவடைந்தவர்' என்று விளக்கம் கூறிக்கேட்டால் கேள்வி முடியமுன்னரே 'அட எங்கட சோட்டர்' என்றுவிட்டு வீட்டு அடையாளம் சொல்லுமளவிற்கு அவருடைய கட்டையான உருவம் பிரபலம்.

கடுகு சிறிதென்றாலும் காரம் பெரிதென்று எப்போதோ படித்தது ஞாபகத்தில் வர ஆளும் அப்படி காரமானவராய்த்தான் இருப்பாரோ என்று எண்ணி வீட்டுக்குள் போனால் வரவேற்றது லிங்கத்தின் குழந்தையும் மாமியாருமே.

லிங்கத்தின் மனைவி எங்கே எனக் கேட்பதற்கு முன்னரேயே 'சும்மா இருந்து யோசிக்கிறதும் அழுவதுமாகவே இருந்த தால தமக்கை தான் வேலைக்குப் போகும் இடத்திற்கு கூட்டிக்கொண்டு போயிட்டா இருங்கோ இப்ப வந்திடுவினம். அருமையான பிள்ளையை பறிகுடுத்திட்டு அழாமல் எப்படியம்மா இருக்க முடியும்?' என்று அழுத அந்த மூதாட்டியின் கண்ணீரை லிங்கத்தின் சின்னஞ்சிறு வாரிசு துடைத்துக்கொண்டிருந்தபோதே லிங்கத்தின் மனைவி அமைதியே வடிவாக உள்ளே வந்து கொண்டிருந்தார்.

பிலோமினாவுக்கு 20 வயதுதான். கை கால் சுறுசுறுக்கின்ற வயதில் அமைதியே உருவான பேச்சே அற்ற சுபாவம் வியப்பையும் கொஞ்சம் பயத்தையும் தர 'கதைக்கமாட்டீங்களா?' என்ற எனது கேள்விக்கு ஒரு சிரிப்பை மட்டுமே பதிலாகத்தந்துவிட்டு தன் குழந்தைக்கு விளையாட்டுக் காட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டவரை 'விரும்பியா திருமணம் செய்தீர்கள்' என்ற எனது கேள்வி சற்றே வெட்கத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.

மெல்லிய சிரிப்புடன் 'இல்லை, அவர் விரும்பிக் கேட்டவர் என்று அம்மாக்கள் தான் செய்து வைத்தவை. எனக்கு முதலிலை விருப்பமில்லை வீட்டுக்காரர் எடுத்துச் சொன்னபின் தான் சம்மதித்தேன்' என்றவரிடம் 'ஏன் முதலில் விருப்பம் இல்லை' எனக் கேட்க, பதில் சொல்லாது எழுந்து வீட்டுக்குள் சென்றவர் தமது திருமண அல்பத்துடன் திரும்பி வந்து அதனைத் தந்துவிட்டு அமர்ந்து கொண்டார்.

ஓரிரு படங்களைப் பார்த்துவிட்டு 'உங்களவிடக் கட்டையானவர் என்பதாலா' என்றபோது தன்பாட்டில் சிரித்த அந்த இளம் மனைவி ஏதோ நினைவில் கண்கலங்கினார்.

உருவம்தான் சிறிதே ஒழிய அந்த வீரனின் இதயம் விசாலமானது. அந்தக் குடும்பத்தில் ஒருவனாகி தன் மனைவி குழந்தைக்கு என்று மட்டுமில்லாது அனைவர்க்காகவுமே உழைத்து தன் குழந்தையின் எதிர்காலம் பற்றி ஆயிரம் திட்டங்கள் வைத்திருந்த லிங்கம், அவர்களுடன் இன்று இல்லை என்பதை ஒரு தடவை போன எமக்கே ஜீரணித்துக்கொள்ள முடியவில்லையெனில் அந்தக் குடும்பம் எப்படி? இயல்பிலேயே அதிகம் பேசாத அமைதியான தம் மகளின் வாழ்வு ஒரு கண்ணி வெடிக்குப் பலியாகிப் போனதை அவர்கள் சகிப்பது எங்ஙனம்?

போராட்டம் நடந்துகொண்டிருக்கும் மண்ணில் போராளிகளுக்குள்ள சுமைகள் கொஞ்ச நஞ்சமன்று, பிரதேசங்களை மீட்பது பெரும் பணியென்றால் மீட்ட பிரதேசங்களை மக்கள் வாழ்வதற்குரியவையாய் ஒழுங்குபடுத்தி, வெடி பொருட்களை அகற்றி அச்சமற்ற நிலைக்கு மாற்றிக்கொடுக்கும் பணி இன்னும் கடினமானது. போராளிகளின் சுமைகளைப் பகிர்ந்து கொண்டு எல்லைப்படையாக களம் வந்த வீரர்கள் மீட்புப் பணிகளில் மட்டுமன்றி அதற்கடுத்ததான பணிகளையும் பகிர்ந்து கொள்வது எம்மண்ணில் இன்றைய இயல்பான நடப்பு.

மீட்ட நிலங்களில் எதிரி புதைத்திருந்த கண்ணிவெடிகளை அகற்றி அவற்றை மக்கள் வாழும் அச்சமற்ற பிரதேசமாக மாற்ற முன் சென்றவர்களில் லிங்கமும் ஒருவர். எத்தனையோ பொறிவெடிகளையும், கண்ணிவெடிகளையும் கண்டுபிடித்து செயலிழக்க வைத்த அந்த வீரனை ஒரு கண்ணிவெடி....



களமுனைக்குச் செல்வதற்காக முண்டியடிக்கும் எல்லைப் படை, கிராமியப்படை வீரர்கள்....

ஆஷா எனத்தான் செல்லமாக அழைக்கும் 11 மாதமேயான தன் மகள் தபோதினியையோ அல்லது அமைதியே உருவான அன்பான மனைவி பிலோமினாவையோ நினைக்கக்கூடப் பொழுதின்றி இந்த மண்ணிற்காக சிதறிப்போன அந்த வீரனுக்கு எங்கள் இளைய தலைமுறை செலுத்தப் போகும் அஞ்சலி எதுவாக இருக்கும்? தேச மீட்பிற்காய் வாழ்க்கைத் துணையையே விலையாகக் கொடுத்துக் கொண்டிருக்கும் பிலோமினாக்களுக்கும் தேசம் செலுத்தப் போகும் பிரதியுபகாரம் என்ன? பலனை எதிர்பாராது தன்னையே உருக்கும் பெண்மைக்கும் தாய்மைக்கும் எது ஈடென கேட்கிறீர்களா? எதுவுமே இல்லைத்தான்.



www.tamileelamarchive.com

## விடுதலையின்விலை-

'என்னால தாங்கேலாமல் இருக்கு. என்ர பிள்ளையை எப்பிடி வளர்க்கப்போறன். நாட்டுக்காக செய்யத்தான் வேணும், ஆனாலும் என்னால தாங்க முடியேல்லயே. இனி நான் என்ன செய்யப்போறன். உதவி என்று யாரிடமும் எதுவும் கேட்டு எனக்கு பழக்கமில்லையே. எப்பிடி இதை நான் தாங்கப்போறன் என்று தெரியேல்லயே'

சுசியின் அழுகை போவோர் வருவோரையும் சட்டென்று தொற்றிக்கொள்கிறது. அந்த வேதனையையும் ஏக்கத்தையும் எப்படி தீர்க்கிறது என்று விக்கித்து நிற்கச் செய்கிறது. கணவர் இனி இல்லையென்பதை நம்ப, கடந்தகால இனிய நினைவுகள் தடையாய் இருந்தாலும், சாவின் நிஜம் சுசியை உலுக்கி உருக்குலைக்கிறது. ஒன்பது மாதக்குழந்தை சானுஜன் மட்டுமே சுசிக்குக் கொஞ்சம் ஆறுதல் என்றாலும் அவளது கண்ணீருக்கும் வேதனைக்கும் அணை போட அந்தக் குழந்தையால் முடியுமா?

ரகுவும் சுசியும் ஒருவரை ஒருவர் விரும்பி பின்னர் பெற்றோர்களின் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டவர்கள்.

நான்கு வருடங்கள் இனிமையான வசதியான வாழ்க்கை.



விடுதலைப் புலிகளிற்கு உறுதுணையாகச் செயற்படும் எல்லைப்படை வீரர்கள்....

சிறீலங்கா அரசின் பொருளாதாரத் தடையால், இராணுவ நடவடிக்கைகளால் பொதுவாக ஏற்படும் இன்னல்களைத் தவிர குடும்ப வாழ்வில் பற்றாக்குறைகள், கஸ்ரங்கள் அல்லது பிணக்குகள் என்று எதுவும் இல்லை.

சுசி கேட்டதெல்லாம் உடனே கிடைக்கும், இரவு ஒன்பது மணிக்கு 'எனக்கு கொத்து ரொட்டி சாப்பிடவேணும் போல இருக்கு' என்றால் அடுத்த அரைமணி நேரத்தில் கொத்து ரொட்டி வரும்.

'பிள்ளை அழுகிறான். எனக்கு நித்திரை வருது. நீங்கள் பால் கரைச்சுப் பருக்குங்கோ' என்றால் இரவு ஒருமணிக்கு அடுப்பு எரிச்சு குழந்தைக்கு மா கரைச்சு சுசிக்கும் தேநீர் வரும்.

'படம் பார்க்கவேணும் போல இருக்கு' 'சரி போவம்'

சுசிக்கு எதுவுமே எப்பவுமே மறுக்கப் பட்டதில்லை. மனைவியின் முகம் வேதனையில் அல்லது ஏமாற்றத்தில் சுருங்கிப் போய் விட்டால் ரகுவுக்கு தாங்காது. குழந்தையாக தான் கருதும் மனைவியின் துன்பங்கள் பொறுக்காது. இது கடந்தகாலம் திரும்பவும் வராத இனிய இறந்தகாலம்.

'முதல் தரம் எல்லைக்குப் போனபோது நான் மறிக்கேல்ல. ஆனால், இரண்டாம் தரம் போக வெளிக்கிட நான் தடுத்திட்டன். ஆனாலும் வேலைக்கு என்று போயிட்டு அங்கிருந்தே எல்லைக்குப் போயிட்டார். சரி போயிட்டு வருவார் தானே என்றிருந்தன். பெட்டியில் வருவார் என்று தெரியாதே. என்னால முடியலேயே. நாலு வருசச் சந்தோசம் போதும் என்றா பெட்டியில வந்தவர்? நான் இனி என்ன செய்யப்போறன்?' இந்த மண்ணிற்கு இந்த இழப்புக்கள் புதியவை அல்ல ஆனால், சுசிக்கு காற்றென விரையும் காலம் சுசியை நிச்சயம் ஆற்றும். விடுதலைக்கான பாதையில் யாரும் விலகி நின்றுவிட முடியாதென்பதை தெளிவுபடுத்தும். ஓராயிரம் துன்பங்களை, சோகங்களைத் தன்னகத்தே தாங்கி நிமிர்ந்து நிற்கும் மக்கள் படை தன் இலட்சியத்தை அடைந்தேதீரும். அதன் கால நீடிப்பை தீர்மானிக்கும் சக்தியாக விளங்கும் இளைய தலைமுறையே! விடுதலைக்கு விலை கந்தையா ரகுநாதன் மட்டுமல்ல, சுசியின் காதல், அவளது சந்தோசம், வளமான எதிர்காலம் இவைகளுந்தான்.

## வீரன் அறியாத வித்து-

'எனக்குப் பயமாக இருக்கு' 'பிரச்சினை இல்லை நீ பேசாமல் வா'

'ஐயோ! உங்கட அப்பா வாசல்ல நிக்கிறார். நான் மாட்டன் '

'உஷ் சத்தம் போடாமல் வா'

'அப்பா நாங்....'

'யாரைக் கேட்டு அந்தப் பிள்ளையைக் கூட்டி வந்தனி, நீ இந்த வீட்டுக்குள்ள வரக்கூடாது. இப்படியே போ. இஞ்சநின்றால் நான் காவல்துறைக்குத்தான் கொண்டுபோய் குடுக்கவேண்டிவரும். சொல்லிட்டன்'

'நாங்கள் போவம் வாங்கோ, உங்களுக்கு அடிக்கப்போறாரோ தெரியாது. எனக்கு பயமா இருக்கு'

'பயப்பிடாத இவர் இப்படித்தான் கோபம் வந்தா கத்துவார். பிறகு சமாதானமாயிடுவார். அவரும் அம்மாவை காதலிச்சுத் தானே கட்டினவர். கடைசிவரைக்கும் எங்களைப் பிரிக்கமாட்டார்'

ரகு (ரஜீதரன்) தான் மனமார நேசித்த செல்வியை வீட்டுக்குக் கூட்டிவந்தபோது அவனுக்கு இருபது வயதுதான். வீட்டுக்கு மூத்த மகனாக, செல்லப்பிள்ளையாக, தன் கடைசித் தங்கையையும் அவளுடனொத்த சிறுவர் சிறுமிகளையும் மேய்த்தபடி எந்த நேரமும் சிரிப்பும் பகிடியுமாக இருந்தவனுள் 'காதல்' எப்படி உள்நுழைந்தது? நாட்டின் போர்ச் சூழ்நிலையால் தென் தமிழீழத்தில் இருந்து வன்னிக்கு வந்து உறவினர் வீடொன்றில் தங்கியிருந்த செல்வியின் அநாதரவான நிலைதான் அதற்கு வித்திட்டதோ?

எப்படியோ இருவர் மனமும் ஒன்றுபட்டு இறுதியாக செல்வியை வீட்டுக்கு அழைத்து வந்து தந்தையை எதிர் நின்று அவர் சம்மதத்துடனேயே புதிய வாழ்வை தொடங்கிய ரகுவுக்கு மணவாழ்க்கை மிகவும் குறுகிய காலமென்பதை எவருமே அறிந்திருக்கவில்லை. இந்த மண்ணின் விதியாகவே மாறிவிட்ட இந்த அவலநிலைக்கு ரகுவும் விதிவிலக்கல்லவே. ஆனால், அவன் வீரனாக மடிந்தான் என்பதுதான் வித்தியாசம்.

ரகு வயதுக்கேயுரிய சுறுசுறுப்பான உழைப்பாளி. வயலில் இறங்கி தன்புதிய சிறிய குடும்பத்திற்காக அவன் விதைத்த நெல் முற்றி அறுவடையாகி வீட்டுக்கு வந்து ஒரு கொத்து தலைவாசலுக்கு நேர் மேலே கூரையில் தொங்கவிடப்பட்டு அவனது உழைப்புக்குச் சாட்சியாகி...

எல்லாவற்றிற்கும் மேலாக இருபத்தியெட்டு நாட்களே வாழ்ந்த அந்த இளம் உள்ளங்களின் இணைவுக்கு உயிருள்ள சாட்சியாய் ரஜிதா....

தேசத்தின் தேவைகருதி எல்லைப்படை வீரர்களாய் தமிழ் இளைஞர் யுவதிகள் களமிறங்கிவிட்ட காலப்பகுதியில் ரகுவும் களம் சென்றான், நின்றான், வந்தான், திரும்பவும் சென்றான்.

பல தடவைகள் தன் பணியை குறைவின்றி முடித்து வீடு திரும்பிய அந்த வீரனுக்குள் காதல் முகிழ்ந்ததும் அது திருமணத்தில் முடிந்ததும், எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிடவில்லை, மாறாக கடமையும் ஒன்றாகிப்போனது.

அதுவே அவனை திருமணம் முடிந்த இருபத்தியெட்டாம் நாளே களத்திற்கும் அழைத்தது. பத்து நாட்களில் தன் பணி முடித்து தன்னிடம் திரும்புவான் என்ற எதிர்பார்ப்போடு செல்வி காத்திருக்க 11ஆம் நாள் அவன் பற்றிய செய்தியே அவளுக்குப் பதிலாகி....

இருபத்தியெட்டு நாட்களே வாழ்ந்த அந்த இளம் பெண்ணின் உணர்வுகளைச் சொல்ல வார்த்தைகளுக்கு வலு இருக்குமா? வார்த்தைகளெல்லாம் ஓடி ஒளிந்துகொள்ள கண்ணீரே முன் வந்து அந்தத் துயருக்கு சாட்சி பகர்கிறது, உங்களால் முடியுமெனில் அந்த இருவிழி நீரோடையில் நீங்கள் செல்வியை உணர்ந்து கொள்ளுங்கள்.

ஊர்க்குழந்தைகளை மேய்த்தபடி திரிந்த அந்த வீரனுக்கு தன் குழந்தை உருவான செய்தியை எவர் சொல்லக்கூடும்? ரஜிதாவாகி செல்வியின் கைகளுக்கு பலமாக அது மாறிவிட்டதை யார் உணர்த்தக்கூடும்?



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மாமனிதர் குமார் பொன்னம்பலம்

'இரண்டாயிரமாவது ஆண்டு முடியும் வரை என்னை உயிருடன் விட்டுவைப்பார்களோ தெரியவில்லை'

என்று கூறிய திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் மறைந்து ஓராண்டாகிவிட்டது. அவரின் நினைவுகளை ஒரு கணம் மீட்டுப் பார்ப்போம்.

05.01.2000 அன்று கொழும்புநகரில், அவரது மோட்டார் வண்டிக்குள் வைத்து, கயவன் ஒருவன் தன் கைத்துப்பாக்கியை இயக்கி,



# சிங்கத்தின் குகையில் அரசோச்சிய புலிக்குரல்

—எல்லாளன்

ஐந்து குண்டுகளை அனுப்பி குமார் பொன்னம்பலத்தின் உயிரைக்குடித்தான்.

சிங்களப்பேரினவாதிகளின் தமிழர் விரோதக் கருத்துக்களுக்கு சுடச்சுட, ஆணித்தரமான பதில்களை வழங்கி, எதிர்வாதம் புரிந்த தமிழீழ தேசப் பற்றாளர் திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் மறைந்தவுடன் அவரது இழப்பிற்கு இரங்கல் தெரிவித்தும், அவரின் போராட்டப் பங்களிப்பை நினைவுகூர்ந்தும் தமிழர் தொடர்பூடகங்கள் அஞ்சலி செலுத்தி, அவரைக் கௌரவப்படுத்தின. தமிழீழத்திலும், புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் நாடுகளிலும் அவருக்கு அஞ்சலி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. படையினரின் தொல்லைகளையும் அசட்டை செய்துவிட்டு ஆயிரக்கணக்கில் கொழும்பு நகரில் திரண்ட தமிழர்கள் அவரது புகழுடலுக்கு இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக குமார் பொன்னம்பலத்தின் துணிச்சலான போராட்டப்பங்களிப்பைப் புகழ்ந்து பேசிய தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் "மாமனிதர்" என்ற அதிஉயர் விருதை அவருக்கு வழங்கி, அன்னாரின் தேசிய சேவையை கௌரவித்து, அஞ்சலி செலுத்தியுள்ளார்.

பேரினவாதத்தின் மைய நிலத்தில் வசித்தபடி தமிழ் மக்களுக்கெதிரான அரச பயங்கரவாதச் செயல்களை அம்பலப்படுத்துவதிலும், தமிழினத்திற்கு இழைக்கப்படும் அநீதிகளை வெளிச்சம் போட்டுக்காட்டுவதிலும் மாமனிதர் குமார் எல்லோரையும் முந்திக் கொள்வார்.

சிங்களத்தின் அரசியல்வாதிகள் மற்றும் தொடர்பூடகவியலாளர்கள் தமிழினத்திற்கு எதிராக இனவாதம் கக்கினால் அவற்றிற்கெதிராக கர்ணகடூர மொழியில் பதிலிறுத்து, சிங்களப் பேரினவாதத்தின் சித்தாந்தத் தளத்தைச் சிதைக்கும் வகையில் தனது கருத்துக் குண்டுகளை, குமார் பொன்னம்பலம் வீசியெறிவார்.

அத்துடன், இனவெறிச்சட்டங்களால் சிறைகளில் அடைக்கப்பட்ட தமிழ் மக்களை விடுவிப்பதற்காக தனது சட்டத்தொழிலின் பெரும் பகுதிநேரத்தை அர்ப்பணிப்புணர்வுடன், அவர் செலவிட்டார். தமிழ் அரசியல் கைதிகளில் 95 வீதமானோரின் வழக்குகளை குமார் பொன்னம்பலம் கையாண்டார். இதற்காக எதுவித கட்டணங்களையும் அறவிடாது இலவசமாகப் பணிசெய்தார். அதைத் தனது கடமை என்று வர்ணித்தார்.

இத்தகைய தமிழின சேவைக்காக குமார் பொன்னம்பலத்தைத் தண்டிக்க பேரினவாதிகள் பலதடவைகள் முயன்றனர்.

ஆனால், குமார் பொன்னம்பலம் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. மாறாக, தனது செயற்பாடுகளை அவர் தீவிரப்படுத்தி பதிலடி கொடுத்தார்.

சட்டத்திற்கு புறம்பானவகையில் தமிழர்களைத் தொல்லைப்படுத்தும் 'பாஸ்' நடைமுறை மற்றும் அடையாள அட்டைகளுடன் உலாவ வேண்டும் என்ற படையினரின் உத்தரவுகளை தான் நேரடியாகச் சந்திக்கும்போது அவற்றிற்குப் பணிய மறுத்து சம்பந்தப்பட்டவர்களுக்கு சட்டரீதியாகச் சவால்கள் விடுத்தார்.

புறச்சூழலின் நெருக்கடிகள்-கொலைப் பயமுறுத்தல்களைப் பற்றிக் கவலைப்படாமல் சொல்லவேண்டியவற்றை- சொல்லவேண்டிய இடத்தில்- சொல்லவேண்டுமென்ற மனத்துணிவு, இந்த மனத்துணிவை செயலாகமாற்றும் வீரம் குமார் பொன்னம்பலத்திடம் இருந்தது.

தமிழரின் போராட்டத்திற்கு ஆதரவாக வெளிநாடுகளில் பணிசெய்துவிட்டு கொழும்பு திரும்பும்போது

விமான நிலையத்தில் வைத்து சோதனை என்ற பெயரில் அவமானப்படுத்தப்படுவதை பொறுமையுடன் அனுமதிப்பார். அதிகாரிகள் தேடும் ஆவணங்களை பயணப்பெட்டிக்குள் வைத்துக்கொண்டுவரும் முட்டாள் நானில்லை என்று கூறி, அந்த ஆவணங்களை சேரவேண்டிய இடத்திற்கு சேரவேண்டிய வழிமுறையில் அனுப்பிவைக்கும் விஞ்ஞான வழிமுறைகள் உண்டென்ற சாதாரண அறிவுகூட சோதனைபோடுபவர்களுக்கு இல்லையென்று துணிச்சலுடன் கேலிபேசி- அவமதிப்புக்குப் பதிலடியாகச் சொல்லடிகள் கொடுத்து அவற்றை பத்திரிகைகளுக்கு அனுப்பியும் வைப்பார்.

ஆயுதப்போராட்டத்தின் பிறப்புப்பற்றியும், அதன் தவிர்க்கமுடியாத தேவை பற்றியும் உலகப் பிரமுகர்களுக்கும் விளக்குவார். தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தி, அவற்றை சர்வதேச மனித உரிமைக் கழகங்களிடம் எடுத்துச் செல்வார். புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் போராட்டத்திற்கு ஆற்றவேண்டிய பங்களிப்புகள் பற்றி விளக்குவார். பேரினவாதிகளின் இனவாதக் கருத்துக்களுக்கு பதில் கருத்துக்களை அளிப்பார். எமது இனத்தின் அறிவுஜீவிகளுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்துள்ள திரு. குமார் பொன்னம்பலம் சிங்களப் பேரினவாதிகளுடன் மட்டுமன்றி பேரினவாதத்திற்கு ஏவல் செய்யும் தமிழ்க்குழுக்களுக்கு எதிராகவும் அவர் காட்டமானவகையில் தனது எதிர்ப்புணர்வைக் காட்டியுள்ளார்.




கனடா வாழ் தமிழீழ மக்களால் "மாமனிதர்" குமார் பொன்னம்பலம் நினைவாக வெளியிடப்பட்ட தபால் முத்திரை.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தனயனைக் காத்த தாய்

டிசம்பர்-25

ஏழை மக்களின் நண்பனாகவும், துன்பப்பட்ட மக்களின் துயர் தீர்க்கவும், அனைத்து கிறீஸ்தவ மக்களாலும் 'மீட்பர்' என்று நினைவு கூறப்படும் இறைமகன் யேசுபாலனின் பிறப்பை அனைத்துலக கிறிஸ்தவ மக்களும் வெகு கோலாகலமாகக் கொண்டாடும் ஒளி பொருந்திய ஒரு நன்நாள்.

அந்தநாள், சிறீலங்கா அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழும் எமது மக்களுக்கு ஒளிபெருகும் நாளாகவன்றி இருள் சூழ்ந்த, பயங்கொண்ட நாட்களாகவே அமைந்துபோய் பல வருடங்களாகிவிட்டது.

தம் பாதுகாப்பிற்கென சிறீலங்காப் படையினரால் நள்ளிரவு 12.00 மணிக்கு யேசுபாலன் பிறக்கும் அந்த நேரத்திற்கான திருப்பலிகள் தடைசெய்யப்பட்டு, மறுநாள் காலையே திருப்பலிகளும், ஆராதனைகளும் நடைபெறும். எந்த நேரமும் கத்திமுனையில் நடப்பது போலவே அந்த மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

தம் சொந்த மண்ணைக் கிளறி, வியர்வை சிந்தி அதனால் பெற்ற பயன்களான நெல்லும், தேங்காயுமாக ஒவ்வொரு வீடுகளின் 'மால்'களும் நிறைந்திருந்தாலும், எந்தப் பொழுதிலும் ஏதோவொரு அபாயத்தை எதிர்நோக்கியே கலங்கிக்கொண்டிருக்கும் மட்டக்களப்பு, 'சென்றல் காம்ப்' நான்காம் கொலனியில் வசிக்கும் குடும்பங்களில் வெள்ளைக்குட்டியின் குடும்பமும் (கிறீஸ்த்தவக் குடும்பம்) ஒன்று. மகன் குலேந்திரன் ஜீ.சி.ஈ. (உ.த.) லும், இளையவன் மூன்றாம் ஆண்டிலும் பயின்றுகொண்டிருந்தனர்.

1999 டிசம்பர் 25.

அந்த விடிகாலைப் பொழுது அனைத்து கிறீஸ்தவ குடும்பங்களுக்கும் போலவே வெள்ளைக்குட்டிக்கும், அவர் மனைவி பாரிக்கும், இரு ஆண் பிள்ளைகளுக்கும் அமைதியாகவும், இனிமையாகவும் விடிந்தது.

வழமைபோலவே, அன்றும் தேவாலயங்களில் இருந்து வீடு திரும்பிய நான்காம் கொலணி மக்கள் ஊர்காவல் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டனர். அந்தக் கிராமமே அவல ஒலங்களால் அதிர்ந்து கொண்டிருந்தது.

வெள்ளைக்குட்டியின் வீட்டினுள் நுழைந்த இரண்டு ஊர்காவல் படையினரின் இயந்திரத் துப்பாக்கிகள் என்ன நடக்கின்றது என்பதை அறிய முன்னரே குலேந்திரனைக் குறிவைத்தது.

ஒரு கணம்தான் வேட்டுக்கள் ஓய்ந்தது. மூன்று உடல்கள் தரையில் சாய்ந்தன. மூன்றையும் உதைத்துத் தள்ளிய ஊர்காவல் படை வெளியேறிவிட்டது.

சுற்றுப்புற நடமாட்ட ஒலிகளை அவதானமாகச் செவிமடுத்துக்கொண்டிருந்த குலேந்திரனுக்கு வாகனங்கள் உறுமிக்கொண்டு புறப்படும் ஒலிகள் கேட்டன. எவருமே இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு, மெல்லக் கண்களைத் திறந்தான்.

அருகில் அப்பாவும் அம்மாவும் இரத்த வெள்ளத்தில் சூழ்கிக் கிடக்க, அவன உறைந்து போனான்.

ஆம், குலேந்திரனுக்கு வைக்கப்பட்ட குறி எப்படி தாயையும் தந்தையையும் மாய்த்தது?

குறிபார்க்கப்பட்ட அந்தக் கணத்தில் மகனிடம் பாய்ந்து சென்ற அந்தத்தாய் அவனைத் தன்னோடு அணைத்துக்கொள்ள, சீறிவந்த ரவை அந்த மகனைச் சுமந்த அதே வயிற்றைக் கிழித்துச் செல்ல மனைவியிடம் ஓடிவந்த கணவனை இன்னுமொரு ரவை துளைபோட...

குலேந்திரனும் இறந்தவர்களின் உடல்களோடு உடல்களாக...

தன் ஒரேயொரு உடன் பிறந்தவனை, அந்த ஒரு உறவாவது தனக்கு எஞ்சாதா என்ற ஆதங்கத்துடன் தேடியவன் தன் இளையவனை ஒரு வாழைப்பாத்தியினுள் கண்டான். பருந்திற்குப் பயந்து நடுநடுங்கும் குஞ்சுபோல அவன் தேகம் படபடத்தது. தமயனோடு ஒட்டிக்கொண்ட அந்த இளந்தளிர். இன்று நான்காம் ஆண்டு படிக்கும் இவனின் சின்னவாய் பாடசாலையில் ஆசிரியர்களால் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் கூறுவதற்கும், உணவு உண்பதற்கும் மட்டுமே திறக்கும்.

இவன் மட்டுமா? இன்னும் எத்தனை ஆதரவற்ற இளம் பிஞ்சுகள் தென் தமிழீழத்தில்.

---

நீலன்திருச்செல்வம் கொல்லப்பட்டபோது அவரது இறுதிச் சடங்கை கொழும்புவாழ் தமிழர்கள் பகிஸ்கரித்திருந்தனர். இதற்காக தமிழ் மக்களை குறிப்பாக தமிழ் அறிவுஜீவிகளை பேரினவாதிகள் கண்டித்தனர். இதற்காக குமார் பொன்னம்பலத்தையும் பேரினவாதிகள் கண்டித்திருந்தனர்.

இறந்தவருக்கு இறுதிமரியாதை செலுத்துவது ஒரு மனிதப்பண்பாடு. பகைவனாய் இருந்தாலும் அந்த நாகரீகத்தைக் கடைப்பிடிப்பது மனிதமாண்பு. ஆனால், இறந்தவர் ஒரு இனத்துரோகி என்றால் அவரது செயற்பாட்டால் ஒரு இனமே அவலத்தைச் சந்தித்தது என்றால் அத்தகைய கோடாரிக்காம்புகளுக்கும் இறுதிக் கௌரவம் வழங்கவேண்டும் என்ற கருத்தை குமார் பொன்னம்பலம் நிராகரித்தார்.

சந்திரிகா அம்மையார் குண்டுத்தாக்குதலுக்கு உள்ளாகி இரண்டாம்நாள் சிங்கள மக்களுக்கு தொலைக்காட்சி வாயிலாக உரையாற்றினார். தனது உரையில், தமிழர்களை குறிப்பாக போராட்டத்தை ஆதரிக்கும் கொழும்பு வாழ் தமிழர்களை கடுமையாக எச்சரித்தார். அந்த எச்சரிக்கை உரைக்கு குமார் பொன்னம்பலம் துணிச்சலுடன் பதிலெழுதினார். 'உம்முடைய உரையில் நீர் யாரை எச்சரித்தீரோ அவர்களில் நானும் ஒருவன்' என்று எழுதினார். அதேவேளை, 'உம்முடைய எச்சரிக்கைகளுக்கு அடிபணிய மறுப்பவர்களில் நானும் ஒருவன்' என்றார். 'உம்மீது நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதலைக் குறிப்பிட்டு அது ஒரு 'இருண்ட இரவு' என வர்ணித்திருந்தீர்கள். ஆனால், உங்களுக்கு முன்னரே உங்களது தலைமையிலான படையினரின் வெறிச்செயல்களால் ஆயிரக்கணக்கான தமிழ்ப்பெண்கள் அந்த இருண்ட இரவுகளைச் சந்தித்துள்ளனர்.' என்று சுட்டிக்காட்டினார். தனது பதில்மடலை எழுதுவதற்குப் பயன்படுத்திய ஆரம்ப வாக்கியம் அவரது அஞ்சாமையின் உச்சக் கட்டத்தையும், தமிழீழத் தேசப்பற்றையும் வெளிப்படுத்துகின்றது. 'நான் ஒரு தமிழீழத்தவன் என்ற வகையில் இதை எழுதுகின்றேன். புலிகள் இயக்கத்தினது அரசியல் சித்தாந்தத்தின் தீவிர ஆதரவாளன் என்றவகையில் இதை எழுதுகின்றேன் ' என்று கடிதத்தை தொடக்கியிருந்தார்.

சாவரக்கன் தன்னை நெருங்கிவிட்டான் என்பது குமார் பொன்னம்பலத்திற்கு நன்றாகத் தெரிந்திருந்தது. எனினும், உயிருக்கு அஞ்சி கொள்கையில் பின்வாங்கி, அடிபணிய அவர் விரும்பவில்லை.

சாவுவரும் என்று தெரிந்திருந்தும்கூட தன் நிலைப்பாட்டில் இருந்து இம்மியளவேனும் நகராது, தனது இறுதி மூச்சுவரை வாழ்ந்துகாட்டிய இந்த மாமனிதரின் நினைவுகள் ஓராண்டில் மட்டுமா எத்தனை ஆண்டுகள் சென்றாலும் தமிழர் நெஞ்சங்களில் உயிர்வாழும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# விடுதலைப் போராட்ட
# தளபதி கிட்டு ஓர்

'கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட, ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு' இது தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் தளபதி கேணல் கிட்டுவைப்பற்றி கூறியதாகும்.

உலகின் சரித்திரம் காலத்திற்குக் காலம் உருவாகும் சாதனையாளர்களின் சரித்திரமாகவே அமைகின்றது. அவ்வாறே ஒரு நாட்டின் வரலாறாக இருந்தாலென்ன, ஓர் இனத்தின் வரலாறாக இருந்தாலென்ன, ஒரு போராட்டத்தின் வரலாறாக இருந்தாலென்ன, அதில் சாதனையாளர்கள் சரித்திரத்தில் இடம்பெறுபவர்களாக இருக்கின்றார்கள்.

இந்தவகையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில், தமிழீழத்தின் வரலாற்றில் ஏன் தமிழினத்தின் வரலாற்றிலேயே இடம்பெறக்கூடிய அளவிற்கு சாதனைகள் பல புரிந்தவர் கேணல் கிட்டு.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் அவர் முத்திரை பதிக்காத துறையே இல்லையென்பது மட்டுமல்ல போராட்டம் ஈட்டியுள்ள, ஈட்டிவரும் வெற்றிகள், சாதனைகள் என்பவற்றை ஆரம்பித்து வைத்தவர் கேணல் கிட்டு என்றே கூறமுடியும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தால் சிறீலங்கா இராணுவத்தினர் வீதி வீதியாகத் திரிந்த காலத்தில் அவர்கள் மீது நடத்தப்பட்ட பல தாக்குதல்களில் பங்கேற்ற கேணல் கிட்டு, 1985இல் யாழ். மாவட்டத் தளபதியாகப் பொறுப்பேற்ற பின் வடமாகாணத்திலேயே பெரிய பொலிஸ் நிலையமாகிய யாழ். பொலிஸ் நிலையம் மீது தாக்கி அழித்து, அங்கிருந்த நூற்றுக்கணக்கான ஆயுதங்களையும், ரவைகளையும் கைப்பற்றி போராட்டத்தில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியவர்.

அதன்பின், தளபதி கேணல் கிட்டு யாழ். குடாநாட்டிலிருந்த படைமுகாம்களில் நிலைகொண்டிருந்த படையினரை முற்றுகையிட்டுத் தாக்கி, சிங்களப் படைகளை முற்றாக முகாம்களுக்குள் முடக்கி யாழ்ப்பாணக் குடாநாட்டை விடுதலைப் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தவர்.

இம்முற்றுகையை உடைக்க பலமுனைகளில் பலமுறை முயன்ற சிறீலங்கா இராணுவத்திற்கு தகுந்த பதிலடிகொடுத்து இம்முயற்சிகளை முறியடித்தவர் தளபதி கிட்டு.

இவ்வாறான முற்றுகையால் ஆத்திரமடைந்த சிங்கள அரசாங்கம் யாழ். குடா

[16.01.1993 அன்று வங்கக்கடலில் வீரகாவியமான கேணல் கிட்டு, லெப். கேணல் குட்டிசிறி, மேஜர் வேலவன், கப்டன் ஜீவா, கப்டன் றொசான், கப்டன் குணசீலன், கப்டன் விஜய், லெப். அமுதன், லெப். நல்லவன், லெப். தூயவன் ஆகியோரின் 8ஆம் ஆண்டு நினைவுநாள்.]



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# வரலாற்றில் அத்தியாயம்

நாட்டின் மீது பொருளாதாரத் தடையை விதித்து மக்களை அடிபணிய வைக்க முயன்ற போது, அதற்கு எதிரான போராட்டத்தை தளபதி கிட்டு ஆரம்பித்தார். கிராமிய உற்பத்திக் குழுக்களை ஆரம்பித்து சொந்தக் காலில் தமிழ் மக்கள் நிற்கமுடியும் என நிரூபித்தவர் தளபதி கிட்டு.

அவ்வேளையில் சிங்கள இராணுவத்தினரிடமிருந்து மட்டுமல்ல இனத்துரோகிகளிடமிருந்தும், சமூக விரோதிகளிடமிருந்தும் தமிழீழ தேசத்தைப் பாதுகாக்க கேணல் கிட்டு மேற்கொண்ட நடவடிக்கைகள் அவர்களின் செயற்பாடுகளை முறியடித்தன.

யாழ். குடாநாட்டில் சிறீலங்காப் பொலிஸாரினது நடவடிக்கைகளை முழுமையாக முடக்கிய தளபதி கிட்டு, அங்கு இடம்பெற்ற சட்டவிரோதச் செயல்கள், சமூக ஒழுக்க மீறல்கள், சிறு பிணக்குகள் என்பவற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர கிராமிய நீதிமன்றங்களை அமைத்தார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் மேற்கொண்ட பிரச்சாரத்தை முறியடிக்கவும் மக்கள் மத்தியில் விடுதலை உணர்வை வளர்க்கவும், வில்லுப்பாட்டு, தெருக்கூத்து, நாடகம் போன்ற கலைவடிவங்களை ஊக்குவித்ததுடன் களமுனைகளை ஆவணப்படுத்தி களமுனைக் காட்சிகளை 'நிதர்சனம்' மூலம் மக்கள் மத்தியில் கொண்டு சென்றவர் கேணல் கிட்டு. அத்துடன் அவர் சிறந்த எழுத்தாற்றல் மிக்கவருமாவார். பல கள நிகழ்வுகளை எழுத்தில் அவர் கொண்டுவந்திருக்கிறார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தை சிங்கள மக்களுக்கும், உலக மக்களுக்கும் புரியவைக்கக் கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் கேணல் கிட்டு பயன்படுத்தினார்.

யாழ். குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வேளை அங்கு வருகைதந்த அரசியல் தலைவர்கள், பௌத்த பிக்குகள் அனைவரோடும் உரையாடியும் 1986ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் நாள் விடுதலைப் புலிகளிடம் பிடிபட்டிருந்த சிறீலங்கா இராணுவத்தினரை விடுவிக்க எடுத்த நடவடிக்கையின்போதும் தனது அரசியல் ஆற்றலை கேணல் கிட்டு வெளிப்படுத்தினார்.

ஆயுதப் போராட்டத்தைச் சிறப்பாக நடத்திக்கொண்டிருந்த அதேவேளை மக்களை அணிதிரட்டி, போராட்டங்களை நடத்துவதிலும் கேணல் கிட்டு சிறந்தவராகவே விளங்கினார். 1986 நவம்பரில் தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழ்நாட்டில் இந்திய அரசுக்கு எதிராகச் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தபோது தமிழீழ மக்களை அணிதிரட்டி மிகப்பெரிய கண்டன ஊர்வலத்தையும், பொதுக்கூட்டத்தையும் நடத்திக்காட்டியவர் கேணல் கிட்டு.

கேணல் கிட்டு 1987இல் தேசவிரோதிகளின் தாக்குதலுக்கு இலக்காகி இடதுகாலை இழந்தபோது மக்கள் அடைந்த துன்பத்துக்கு அளவேயில்லை. சிங்கள இராணுவத்தை தெருவழியே திரியவிடாது முகாம்களுக்குள் முடக்கி வைத்திருந்த தளபதி கிட்டு மீது மக்கள் அளவிடமுடியாத அன்பு வைத்திருந்தார்கள். இந்தச் சம்பவத்தின் பின் 1987 மே தினத்தன்று விடுதலைப் புலிகள் நல்லூரில் நடத்திய மேதின நிகழ்வின்போது கிட்டண்ணா உரையாற்ற வருகிறார் என அறிவிக்கப்பட்டபோது, மக்கள் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அங்கு திரண்டிருந்த லட்சக்கணக்கான மக்கள் வெள்ளத்தில் கிட்டண்ணா வந்த வாகனம் கடலில் ஒரு படகுபோல மிதந்து வந்தமையே மக்களின் மகிழ்ச்சிக்குச் சான்றாக அமைந்தது.

பின்னர் 1989இல் விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுப் பிரிவிற்குப் பொறுப்பாளராக பதவியேற்று வெளிநாடுகளில் அவர் புரிந்த பணிகள் அளப்பரியவை. அவர் வெளிநாட்டுப் பிரிவுக்குப் பொறுப்பாளராகிய பின் அங்கு போராட்டத்திற்கு ஆதரவான செயற்பாடுகள் துரிதமடையத் தொடங்கின. இன்று தமிழீழப் போராட்டத்தில் வெளிநாடுகளில் வாழும் தமிழீழ மக்களும், தமிழ் மக்களும் பிற நாட்டுமக்களும் காட்டும் ஈடுபாட்டுக்கும், பங்களிப்புக்கும் கிட்டண்ணா ஆரம்பித்து வைத்த செயற்பாடுகளே காரணம் எனலாம்.

இவ்வாறு சகல துறைகளிலும் சாதனை படைத்த தளபதி கேணல் கிட்டுவின் வீரச்சாவும் முற்றிலும் வேறுபாடான சரித்திர நிகழ்வாகவே அமைந்துவிட்டது.

மேற்குலக நாடுகள் சிலவற்றின் முன்முனைப்புடன் தமிழீழ மக்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத்திட்டம் குறித்த ஆலோசனைகளுடன் சர்வதேச கடல் வழியூடாக தமிழீழம் நோக்கி வந்துகொண்டிருந்த தளபதி கிட்டுவையும் ஏனைய போராளிகளையும் இந்தியாவின் நாசகாரிக் கப்பல்கள் 1993 ஜனவரி 13ஆம் திகதி சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து வழிமறித்தன. பின்னர் இந்தியக் கரைநோக்கிக் கப்பலைச் செலுத்தும்படி நிர்ப்பந்தித்தன.

கேணல் கிட்டு தமிழீழம் நோக்கி வங்கக்கடல் வழியாகப் பயணம் செய்கிறார் என்ற செய்தியும், மேற்குலக சமாதான முயற்சியின் தூதுவனாக அவர் பயணம் செய்கிறார் என்றும் இந்திய அரசுக்கு ஏற்கனவே தெரியும். ஆனால் அக் கப்பலை வழிமறிக்கும்படி அன்றைய இந்திய அரசு கட்டளையிட்டது.

ஜனவரி 15ஆம் திகதி இந்தச் செய்தி உலகமெங்கும் பரவிவிட்டது. கிட்டுவை உயிருடன் பிடிக்கவேண்டும் அல்லது அவரை அழிக்கவேண்டும், மேற்குலகின் சமாதான முயற்சியைக் குழப்ப வேண்டும் என அன்றைய இந்திய அரசாங்கம் முடிவெடுத்தது.

சர்வதேசக் கடற்பரப்பிலிருந்து இரண்டு நாள் கடற்பயணத்தின் பின் கேணல் கிட்டுவும் தோழர்களும் பிரயாணம் செய்த கப்பல் சென்னைத் துறைமுகத்துக்கு நேரே இந்தியக் கடல் எல்லைவரை கொண்டுவந்து, சரணடையும் படியும் மறுத்தால் கப்பல் மூழ்கடிக்கப்படும் எனவும் இந்தியக் கடற்படை எச்சரித்தது. சரணடைந்தால் தம்மீது பொய் வழக்குகள் சுமத்தப்பட்டு தமது இயக்கம் மீதும், போராட்டம் மீதும் களங்கம் சுமத்த அன்றைய இந்திய அரசு முயற்சிக்கும் என்பதை உணர்ந்துகொண்ட கேணல் கிட்டு கப்பற்சிப்பந்திகள் அனைவரையும் கப்பலை விட்டு இறக்கியபின் கப்பலை வெடிவைத்துத் தகர்த்து தன் தோழர்களுடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் ஒரு சாதனை வீரராகியவர் தளபதி கேணல் கிட்டு, போராட்டத்தின் ஒவ்வொரு துறையிலும் அவர் நாட்டிய விதைகளே இன்று விருட்சமாக வளர்ந்து போராட்டச் சோலையை நிறைத்து நிழல் தருகின்றன. அவர் போராட்ட வரலாற்றில் ஓர் அத்தியாயம்.



1986 ஆம் ஆண்டு யாழ். பலாலி வீதியில் சக போராளிகளுடன் கேணல் கிட்டு.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# பாலியல் வல்லுற
# மண்ணும் மனித

## வன்முறை என்பது

தனிப்பட்ட வாழ்க்கையிலோ அல்லது பொதுவாழ்க்கையிலோ பெண்களின் சுதந்திரத்தில் ஏற்படுத்தும் தடை அல்லது பார பட்சநிலை உட்பட பெண்களைப் பாதிக்கும் உடல் உள பால் சார்ந்த இம்சைகள், கொடுமைகள், அச்சுறுத்தல்கள் என்பவற்றை விளைவிக்கும் பால் சார்ந்த செயற்பாடுகள் பெண்களுக்கெதிரான வன்முறையாகக் கருதப்படுகின்றது. குடும்பம், சமூகம், நாடு என்ற மூன்று நிலைகளில் பெண்களுக்கு இழைக்கப்படும் குற்றங்கள்தான் நடத்தைசார் வன்முறை என்று அழைக்கப்படுகின்றன.

இன்று இந்த உலகை ஆக்கிரமித்திருக்கின்ற இன அடக்குமுறை, இனவாதம், இன ஒடுக்கல், பால்சார்ந்த வன்முறைகள், கொலை, கொள்ளை, சித்திரவதைகள், பசி, பட்டினி, வறுமை, வேலையின்மை போன்ற அனைத்து வன்முறை வடிவங்களும் ஆண் பெண் வேறுபாடின்றி அனைவரையும் பாதிக்கின்றன. வன்முறை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாயினும், வன்முறை தொடர்பான அனுபவங்களைப் பொறுத்து ஆண் பெண்ணுக்கிடையில் வேறுபாடு உண்டு. வலுச்சண்டை, தனிப்பட்ட மோதல்கள், போர்க்காலக் கைதுகள், சித்திரவதைகள், கொலைகள் போன்ற நேரடி வன்முறையின் தாக்கம் இருபாலாருக்கும் பொதுவானது எனினும் பாலியல் சார்ந்த பிரச்சினைகள், பாரபட்ச நிலைகள் போன்ற மறைமுக வன்முறையின் தாக்கத்திற்கு அதிகம் உட்படுவது பெண்கள் இனமே.

நடத்தைசார் வன்முறையில் மிகவும் மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் வன்முறை வடிவமாக இருப்பது பாலியல் வல்லுறவாகும். குடும்பம் என்று வரும்போது கட்டாய பாலுறவு என்ற நிலையிலும், சமூகம் என்று வரும்போது சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகம், நிறுவனங்களில் கட்டவிழ்த்துவிடும் பலாத்கார வல்லுறவாகவும், நாடு என்று வரும்போது இனத்தை இனம் பழிவாங்கும் வல்லுறவாகவும் இது மாற்றம் பெறுகின்றது.

பலமுள்ளது பலமற்றதை நசுக்கும்

மனித வாழ்வின் தோற்றத்திலிருந்தே பலமுள்ளது பலமற்றதை நசுக்கும் என்ற இயற்கையின் நியதிக்கமைய போரும் வாழ்வுமாகவே மனித வாழ்வு பின்னப்பட்டிருக்கின்றது. தமது இருப்பை உறுதிசெய்வதற்காகவோ, தமது இனக்குழுவின் பலத்தை அதிகரிப்பதற்காகவோ புராதன குலக்குழுக்கள் மேற்கொண்ட யுத்தத்தில் பாலியல் வல்லுறவானது பெண்ணின் உடலுக்கு உரிமைகோரும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது. மனித இனம் நிரந்தரமாக வாழ்விடத்தை அமைத்துக்கொண்டு தமக்கென தனித்துவ கலை, பண்பாட்டு அம்சங்களை பின்பற்றிய காலத்தில் மண்ணிச்சை கொண்டு மேற்கொள்ளப்பட்ட சாம்ராஜ்ய விஸ்தரிப்பு போர்களில் இராணுவத்தின் பாலியல் வேட்கைகளை தீர்ப்பதற்கான வழிமுறையாக பாலியல் வல்லுறவு பயன்பட்டது. அதன் பின்னர் பொருளாதாரரீதியில் வளமுள்ள நாடுகளை சுரண்டும் நோக்குடன் முதலாளித்துவம் மேற்கொண்ட காலனித்துவப் போர்களின்போது எதிரியை அச்சுறுத்தும் பொருட்டும், தமது ஆதிக்கத்தை நிலைநாட்டும் பொருட்டும், பாலியல் வல்லுறவு மேற்கொள்ளப்பட்ட போது பெண் சொத்து என்ற நிலையில் இருந்து பாலியல் பண்டம் என்ற நிலைக்கு இறக்கப்பட்டாள். பாலியல் வேட்கையை தீர்த்துக் கொள்வதற்கான அனைத்து வழிகளும் திறந்து விடப்பட்ட இன்றைய நிலையில், நசுக்கப்படும் இனம் ஒன்று அடக்குமுறைக்கெதிராகக் கிளர்ந்தெழுந்து விடுதலை கோரி மேற்கொள்ளும் விடுதலைப் போராட்டங்களின்போது அடக்கும் இனம் அடக்கப்படும் இனத்தின்மீது பிரயோகிக்கும் பாலியல் வல்லுறவானது இனச்சுத்திகரிப்பு என்ற பின்னணியில் இன அடையாளத்தை முற்றுமுழுதாக அழிக்கும்நோக்கிலும், பாலியல் வக்கிரத்தை வெளிப்படுத்தும் நோக்கிலும், ஆணுறுப்புடன் தடிகள், போத்தல்கள் என்பவற்றைப் பயன்படுத்தி பெண்ணைக் கோரமாக சித்திரவதை செய்தல் என்ற நிலையிலும் மாறியிருக்கிறது. தோல்வியுற்ற எதிரியின் மீது உடல்ரீதியான ஆக்கிரமிப்பை மேற்கொள்வதானது அன்றைய காலங்களில் சட்டரீதியானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இன்றைய காலங்களிலோ பாராமுகமாக விடப்பட்டிருக்கிறது.

## எங்கள் மண்

கட்டற்ற பாலுறவைப் பிரதான பண்பாகக் கொண்ட மேலைத்தேய நாகரீகத்திலிருந்து முற்றுமுழுதாக விலகி, ஒருவனுக்கு ஒருத்தி என்ற கட்டுக்கோப்புக்குள் தமது உள்ளத்து விருப்பங்கள், ஏக்கங்கள், தாபங்களை வரையறைப்படுத்தி வாழ்வதை தமது பண்பாகக் கொண்டது இந்த மண். சீதனம் என்ற கொடுமைப்பிடிக்குள் சிக்கி சீரழிந்து வாழ்வு முழுவதும் திருமண வாழ்வு மறுக்கப்பட்ட நிலைக்கு வந்த போதும்கூட பண்பாட்டு சீரழிவுக்குள் சிக்குப்படும் தன்மை தமிழ்ப்பெண்ணுக்கு மிகவும் குறைவு. விருப்பமற்ற திருமணம், கணவனின் அடி உதை போன்றவற்றால் பாதிக்கப்பட்டாலும்கூட, தமது உள்ளத்து உணர்வுகளை, கட்டற்ற அதன் விருப்பங்களை குடும்பம் என்ற கட்டமைப்புக்கு ஏற்ப வழிப்படுத்தி குடும்பத்தின் முதுகெலும்பாகத் திகழும் தமிழ்ப்பெண்ணின் தியாகங்கள் அளப்பரியவை.

## மண்ணின் தனித்துவம்

மனிதனின் பாலியல் சார்ந்த விருப்பங்களுக்கு இறுக்கமான மரபுகளால் வேலியிட்டு வைத்திருக்கும் தனித்துவமான பண்பாட்டைக் கொண்டது இம்மண். பாலியல் பசிக்கு தீனி போடுவதற்கென உலகம் எங்கனும் சட்டரீதியாகவோ, சட்டரீதியற்ற முறையிலோ எத்தனையோ வழிமுறைகள் நிலைகொண்டிருக்க தமது மன உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதனூடாக, குடும்ப அமைப்பில் ஒரு ஒழுங்குத் தன்மையை பேணுவதன் மூலம் ஏனைய சமூகங்களிலிருந்து சற்று வேறுபட்டு நிற்பவர்கள் இம்மண்ணின் மக்கள். கட்டற்ற பாலுறவையும், வீதிக்கு வீதி விபச்சார விடுதிகளையும் கொண்டிருக்கும் அமெரிக்க மண்ணில் ஒவ்வொரு மணிநேரமும் 16 பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுகின்றனராம். கலாச்சாரத்திற்குப் பெயர்பெற்ற இந்திய மண்கூட சட்டரீதியான விபச்சார விடுதிகளைக் கொண்டிருக்கின்றது என்ற உண்மை ஒரு புறம் இருக்க, பெண் கைதிகள் மீது பாலியல் வல்லுறவுப் பிரயோகம் நடத்துவதில் உலகிலேயே முதலிடம் பெறுவது இந்திய சிறைக் கூடங்கள்தானாம். பணத்திற்காக பெண்களை விற்பதன் மூலம் பாலியல் வல்லுறவானது தாராளமாக நடைபெற ஊக்குவிப்பதில் தென் கிழக்காசிய நாடுகள் முன்னணி வகிக்கின்றன.

பாலியல் வல்லுறவுக்கு சட்டங்கள் இயற்றிய நாடுகள்கூட நடைமுறையில் பாராதீனமாக நடந்துகொள்ளும் நிலையில் ஈழத்து மண் சற்று வித்தியாசமானது. யுத்தத்திற்கு முன்னரும்சரி அல்லது போரே வாழ்வு என்ற நிலைக்குத் தம்மை மாற்றிக்கொண்டு மூன்று



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தசாப்தங்களை அண்மித்துவிட்ட இன்றைய நிலையிலும்சரி, இனங்காணப் பட்ட பாலியல் வல்லுறவுக் குற்றங்கள் மிகவும் குறைவு. பெண்களுக் கெதிரான ஏனைய குற்றங்களான பெண்ணை கைவிடுதல், காதலித்து ஏமாற்றுதல், தாக்குதல், மனைவியின் விருப்பத்திற்கெதிராக கட்டாய பாலுறவில் ஈடுபடுதல், சீதனக்கொடுமை போன்ற குற்றச் செயல்களுக்கு ஈழத்துப் பெண் உட்படுவது இனங்காணப்படினும் ஒப்பீட்டுரீதியில் இவை மிகவும் குறைவானதாகவே உள்ளது.

## மண்ணின் மனிதம்

பொதுவாகவே யுத்தத்தை வாழ்நிலையாகக் கொண்ட சமூகத்தில் குற்றங்கள் மலிந்திருப்பதும் நீதி, நிர்வாக, பொருளாதாரக் கட்டமைப்புகள் நலிவடைந்திருப்பதும் இயல்பானது. இதற்கு முற்றிலும் மாறாக யுத்தம் நடக்கும் இந்த மண் அவலங்களையும், அற்புதங்களையும் ஒருங்கே தரிசிக்கும் வாய்ப்புப் பெற்றதொன்றாகவே உள்ளது. ஆண் பெண் வேறுபாடின்றி போரின் சுமைகளை தமது தோள்களில் ஏற்றி விடுதலைப்பாதை அமைக்கப் புறப்பட்ட நிலையிலும்சரி, யுத்தத்தின் நேரடிப் பரிசுகளான உயிரிழப்புகள், உடல் வதைகள், உடமை இழப்புகள் போன்றவையும் மறைமுக பரிசுகளான வறுமை, பசி, பட்டினி போன்றவையுமே சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் ஊடுருவி மனிதனின் வாழ்நிலையையே அசைத்துவிடும் ஆற்றல் கொண்ட நிலையிலும்சரி இந்த மண்ணின் மக்களோ மக்களை நிர்வகிக்கும் விடுதலை அமைப்போ பண்பாட்டு விலகலுக்கு ஒருபோதும் உட்பட வில்லை. வியட்னாம் போர் நீடித்தபோது வறுமை காரணமாக அமெரிக்க டாலர்களுக்காக தமது மனைவியரை, குழந்தைகளை, உறவினரை வியட்னாமிய குடும்பத்தலைவர்கள் விற்றது போன்றோ, மணமகள் விற்பனையிலும், பெண்களை அடிமைகளாய் விற்பதிலும் சீனமண் பெயர் பொறித்தது போன்றோ, வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் பாலியல் பசிக்கு அப்பாவிச் சிறுவர்களை பலிகொடுப்பதில் சிறீலங்கா முதலிடம் பெறுவது போன்றோ ஒரு கொடூரத்தை இந்த மண் எப்போதுமே தரிசிக்கவில்லை.

அதிலும் ஒழுக்கத்திற்கும் கட்டுக்கோப்புக்கும் உலகளாவியரீதியில் பேர்போன ஒரு தலைமைத்துவத்தின் கீழ் தேசவிடுதலையையும் சமூக விடுதலையையும் ஒன்றாக முன்னெடுக்கும் போராளிகள், மண்ணை மீட்கப் போராடும் அதேசமயம் மக்களின் வாழ்நிலையை ஒழுங்கு படுத்துவதிலும் மும்முரமாக ஈடுபட்டிருப்பதானது உலகில் உள்ள எந்தவொரு விடுதலைப் போராட்டத்திலும் காணமுடியாததொன்று.

பெண்களுக்கு இழைக்கப்படும் மிக மோசமான கொடுமையாக உள்ள பாலியல் வல்லுறவுக் குற்றத்தைக்கூட பெரும்பாலான நாடுகள் ஒரு பொருட் டாகக் கருதாமல் பாராமுகமாய் விடும்நிலையில் தமிழீழச் சட்டமானது இதற்கு மரண தண்டனை வழங்குவது ஒரு சிறப்பம்சம் என்றே சொல்லவேண்டும். பெண்கள் மீது கட்டவிழ்த்துவிடும் ஏனைய குற்றங்களை இனங்கண்டு அதற்கு நீதிவழங்குவதுடன் நின்றுவிடாது பாதிக்கப்பட்டவர்களை பராமரிப்பதற்கு புனர்வாழ்வுப் பணிகளையும் மேற்கொள்கின்றது.




போராடும் விடுதலை இராணுவம் என்ற வகையில்கூட எமது இராணுவம் வித்தியாசமானது. அடக்குமுறைக்குட்படும் ஒரு இனம் மீது அடக்கும் இனம் பாலியல் வல்லுறவை மேற் கொள்வதானது யுத்தம் நடக்கும் இடங்களில் சாதாரண ஒரு நிகழ்வு. அமெரிக்க இராணுவம் வியட்னாமியப் பெண்களைப் பழிவாங்கியதும், ஜேர்மன் இராணுவம் யூதப் பெண்களைப் பழிவாங்கியதும் ஆச்சரியத்துக்குரியதொன்றல்ல. ஆனால், காலங்காலமாகவே விபச்சாரத்தை ஒரு மரபாக ஏற்றுக்கொண்ட ஒரு மண். போர் என்று வந்து வட, தென் வியட்னாம் எனப் பிரிந்தபோது தன் இனத்தின் மீதே பாலியல் வல்லுறவைக் கட்டவிழ்த்துவிட்ட கொடூரத்தைச் செய்த தென்வியட்னாம் இராணுவமும், இரண்டாம் உலகப்போரில் யப்பானிய இராணுவத்தின் பாலியல் வேட்கையைத் தீர்க்க ஒரு லட்சம் சீன, கொரியப் பெண்களை பலாத்காரமாகப் பழி வாங்கிய யப்பானிய அரசும், மதத்தால் ஒன்றுபட்டு மொழியால் வேறுபட்ட இரண்டு லட்சம் வங்காளப் பெண்களை மோசமாக பழிவாங்கிய பாகிஸ்தானிய இராணுவமும், இனச்சுத்திகரிப்பு என்ற போர்வையில் பொஸ்னிய முஸ்லிம் பெண்களைப் பழிவாங்கிய சேர்பிய இராணுவமும் வரலாற்றின் அதிர்ச்சியூட்டும் நிகழ்வுகள்.

இதற்கு முற்றிலும் மாறாக கரந்தடிப்படை என்ற நிலையில் இருந்து மரபுரீதியான இராணுவமாக வளர்ச்சி பெற்ற நிலையிலும்கூட பண்பாட்டுக்குள் நின்றுவாழும் மண் ணின் மைந்தர்களாகவே போராளிகள் வாழ்கின்றனர். பழிக்குப்பழி என்ற அடிப்படை யில் ருவாண்டாவின் துட்சி இனமும் கூட்டு இனமும் மாறிமாறிப் பெண்களைப் பழி வாங்குவது போன்று சிங்கள இனவாதத்தால் அன்றுமுதல் இன்றுவரை வன்முறை யின் பலிக்கடாக்களாக தமிழ்ப்பெண்கள் உட்படுத்தப்பட்ட நிலையிலும் சிங்கள இனத் தைப் பழிவாங்கும் மனோபாவம் தமிழ் மண் ணுக்கு இல்லை என்பது 28 வருடப் போராட்ட வாழ்வு உலகிற்கு கற்றுத்தந்திருக்கும் உண்மை. சிங்கள இராணுவமும் இந்திய இராணுவமும் தமிழ் மண்ணை ஆக்கிரமித்த போதெல்லாம் தமிழ்ப் பெண்கள் மீது கட்ட விழ்த்துவிட்ட பாலியல் வன்முறைக்குப் பழிக் குப் பழிவாங்காத ஒழுக்கமும், கட்டுக்கோப் பும், உறுதியும் மிக்க ஒரு உன்னத தலை மைத்துவத்தையும் அந்தத் தலைமைத்து வத்தின் கீழ் வழிநடத்தப்படும் எண்ணற்ற போராளிகளையும், இந்த விடுதலைப் போராட் டத்திற்கு சகல வழிகளிலும் ஒத்துழைக்கும் மக்களையும் கொண்ட இந்த மண் உண் மையில் தனித்துவமானதொன்றுதான்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வீர மறவர்களின் எட்டாவது ஆண்டு நினைவெழுச்சி நிகழ்ச்சிகள்




## ஜேர்மனி

20.01.2001அன்று சுட்காட் நகரில் வெகு எழுச்சிகரமாக நடந்தேறியது. இந்நிகழ்வில் பலநூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

## பிரித்தானியா

லண்டன் வெம்பிளியில் உள்ள கோப்ளண்ட் பாடசாலை மண்டபத்தில் 20.01.2001 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பலநூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.







## பிரான்ஸ்

பாரிஸில் 21.01.2001 அன்று நடைபெற்ற இந்நிகழ்வில் பலநூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

## சுவிற்சர்லாந்து

சுவிற்சர்லாந்து பாசல் மாநகரில் 13.01.2001 அன்று வெகு எழுச்சியோடு நடைபெற்றது. இந்நிகழ்வில் பலநூற்றுக்கணக்கான சுவிஸ் வாழ் தமிழீழ மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பயணம்

இரு கண்களும் என்னிடமுண்டு
ஆனாலும் உருவாகப் போகும்-என்
தாயகத்தை நான் காணப்போவதில்லை

அன்பும் பாசமும் நிறைந்த
இளகிய நெஞ்சமும் என்னிடமுண்டு
ஆனாலும் இப்போது நான் அதை
இறுக்கிக் கொண்டு விட்டேன்

இந்தத் தேசத்தில் வாழ்பவர்களிற்கு
பாதுகாப்பு இல்லையென்பதால்
இந்தத் தேசத்தை விட்டு நான்
விலகிச் செல்கிறேன்

சின்னஞ்சிறு மலர்களே
விருட்சமாக முன்னர், கந்தகக்
காற்றுப்பட்டு நீங்கள்
கருகிவிடக் கூடாதென்பதற்காய்
கந்தகத்தோடு நான் புறப்படுகிறேன்

மரணங்களை எம்மண்ணில்
விதைத்தவர்களிற்கு- என்
மரணத்தின் மூலம் மரண தண்டனை
கொடுக்கப் போகின்றேன்

நான் உதிர்கின்ற போது
மலர்கின்ற வெப்பத்தில்
கருகிப் போகின்ற- பகைவனின்
உடல்களின் ஒளியில்தான்

என் தேசத்தின் விடியல்
பூத்துக் கொள்ளும்- எனும்
நம்பிக்கையோடு புறப்படுகிறேன்.

- செந்தோழன்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஆசிரியர் தலையங்கம்

# வேறு வழி?

இனப்பிரச்சினை விவகாரத்தில் சர்வதேச மத்தியத்துவத்தின் குறிப்பாக நோர்வேயின் சமாதான முயற்சிகள் வெற்றிபெறுமா? அன்றி இடை நடுவில் முயற்சிகள் கைவிடப்படுமா? என்பது குறித்து இன்று அரசியல் வட்டாரங்களில் பலமான கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இதற்கு, சமாதான முயற்சிகளை முன்நோக்கி நகர்த்தும் வகையில் சிறீலங்கா அரசின் செயற்பாடுகள் இல்லையென்ற அபிப்பிராயம் பரவலாக எழுந்துள்ளமையே காரணம் ஆகும்.

நோர்வேயின் சமரச முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்த விடுதலைப் புலிகள் அமைப்பு அதனை முன்நோக்கி நகர்த்தும் வகையில் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாக அறிவிப்புச் செய்ததோடு, ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தையும் அறிவிப்புச்செய்து அதனைக் கடைப்பிடித்தும் வருகின்றது.

அதிலும் குறிப்பாக, தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தனது 2000 ஆண்டிற்கான மாவீரர்தின உரையில், நோர்வே அரசு முன்வைக்கும் சில யோசனைகளை ஏற்று அதற்கான முன்முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளுமானால் பதிலாக நாமும் நல்ல முடிவுகளை எடுப்போமெனக் கூறியிருந்த போதும், அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு காத்திராது ஒருதலைப் பட்சப் போர்நிறுத்தத்தை அறிவித்து சமாதானப் பேச்சிற்கான தமது ஆதரவை வெளிக்காட்டியிருந்தார்.

மேலும், விடுதலைப் புலிகள் பிரகடனப்படுத்திய ஒருதலைப் பட்சப் போர்நிறுத்த காலவரம்பிற்குள் சிறீலங்கா இராணுவம் இதுவரையில் இரண்டு பாரிய நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும், விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தை மீறாது தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றனர்.

இவ்வாறாக சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கும், அரசியல் தீர்விற்கெனவும் விடுதலைப் புலிகள் அனுசரித்த போக்கைக் கடைப்பிடிக்கையில், சிறீலங்கா அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கையானது யுத்தநிறுத்தத்திற்கோ அன்றி சமாதானப் பேச்சுவார்த்தைக்களுக்கோ உகந்ததாக இல்லை.


ஆளும் கட்சியில் ஒருதரப்பினர் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பதே தேவையற்றது என்ற ரீதியில், இராணுவத்திற்கான ஆளணி திரட்டலிலும், ஆயுதப்படையினருக்கு நவீன ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்து கொடுப்பதிலுமே முனைப்புக்காட்டி நிற்கின்றனர். மற்றொரு தரப்பினர் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டபின்னர் அதில் முன்னேற்றம் காணப்படும் பட்சத்தில் யுத்தநிறுத்தம் பற்றிப் பரிசீலிக்கலாம் எனவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறாக யுத்தநிறுத்தத்தையும், சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் சிறீலங்கா அரசு நிராகரிப்பதற்கு மேற்கூறப்பட்டோரில் முதல்தரப்பினர் இலங்கையில் இனப்பிரச்சினை என்பதே இல்லை. பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே உள்ளது எனத் தெரிவிக்கையில், இரண்டாம் தரப்பினர் விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை நம்புவதற்கில்லை. தம்மைப் பலப்படுத்திக்கொள்ளவே அவர்கள் இதனை அறிவிப்புச்செய்துள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர்.

ஆனால், இவர்களின் இவ்விரு வாதங்களும் இன்று ஏற்றுக் கொள்ளப்படுவதாக இல்லை. கடந்த காலத்தில் சிறீலங்கா அரசின் இந்நிலைப்பாடுகளுக்கு ஆதரவு அளித்துவந்த மேற்கு நாட்டு அரசுகள்கூட, தற்பொழுது பழைய நிலைப்பாட்டில் இருந்து சற்று மாறிய நிலைப்பாட்டையே கொண்டுள்ளன. இதன் வெளிப்பாடாகவே மேற்குலகம் தற்பொழுது வலியுறுத்தி வரும் யுத்தநிறுத்தமும் அரசியல் தீர்வும் உள்ளது.

அதாவது, இலங்கையில் இனப்பிரச்சினை ஒன்று உள்ளது என்பதையும், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதன் மூலமே அதனைத் தீர்க்கமுடியும் என்பதையும் அவை ஏற்றுக்கொள்கின்றன. மேலும், விடுதலைப் புலிகள் தற்பொழுது அறிவிப்புச் செய்துள்ள யுத்தநிறுத்தமும், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு அவர்கள் வழங்க முன்வந்துள்ள ஒத்துழைப்பும் உண்மைத்தன்மை பொருந்தியவை எனவும் அவை கருதுகின்றன. இதன் காரணமாகவே அவை சமரச முயற்சிகளில் ஈடுபடவும் முன்வந்தன.

ஆனால், தற்பொழுது யுத்தநிறுத்தம் தொடர்பாகவும், அரசியல் தீர்வு தொடர்பாகவும் சிறீலங்கா அரசு கொண்டுள்ள நிலைப்பாடானது இனப்பிரச்சினைத் தீர்விற்கோ, யுத்தத்தை நிறுத்துவதற்கோ உகந்ததாக இல்லை. இதுவே சமரச முயற்சியாளர்களுக்கு ஏமாற்றம் அளிக்கும் ஒன்றுமாகும். அத்தோடு இந்நிலையானது தொடருமானால் அவர்கள் தமது முயற்சிகளை இடைநிறுத்துவதையோ அன்றிக் கைவிடுவதையோ தவிர வேறுவழி எதுவும் இருக்குமா என்பதும் சந்தேகமே.






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# சந்திரிகாவின் 'பெருமை'

இலங்கையில், ஏன் உலகில் என்றுகூட வைத்துக்கொள்ளலாம். அதிகம் பொய் பேசுகின்றவர், கருத்துக்களைத் திரிபுபடுத்துகின்றவர் யார் எனப் பார்த்தால் நிச்சயம் அப்'பெருமை' சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கே உரியதாக இருக்கும். ஜனாதிபதி சந்திரிகா வாய்திறந்தாலே பொய் அல்லது பித்தலாட்டம் ஒன்றே வெளிவரும்போல் உள்ளது.

சிறீலங்கா அரசு ஒரு பௌத்த-சிங்களப் பேரினவாத அரசு, அதன் கடந்தகால ஆட்சியாளர்கள் அனைவரும் பேரினவாதிகளாகவே இருந்துள்ளனர். பேரினவாதத்தை வலியுறுத்தும் அமைப்புக்கள் பலவும் அங்கு பலமாகவே வளர்ச்சி கண்டுள்ளன. ஆட்சிக்கு வருவோரும், வரப்போகின்றவர்களும் இப் பௌத்த பேரினவாதச் சித்தாந்தத்தை அனுசரித்தே போதல் வேண்டும்.

இது சிறீலங்காவின் பொதுவான பண்பாக இருப்பினும், இதனை மாற்றக்கூடாது என்பதோ, மாற்றமுடியாது என்பதோ நிர்ணயம் செய்யப்பட்டதொன்றல்ல. ஆனால், இதனை மாற்ற முற்படுகையில் பல இழப்புக்களைச் சந்திக்க வேண்டியும், அர்ப்பணிப்புக்களைச் செய்யவேண்டியும் வரலாம். ஆகையினால், இவற்றிற்கு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள் தயாராக இல்லாமலும் இருக்கலாம்.



இந்தரீதியில், இனப்பிரச்சினை போன்ற நெருக்கடிகளில் அரசியல் தீர்வொன்றிற்கோ அன்றி சமாதானத்திற்கோ ஆட்சியாளர்கள் தயாராக இல்லாமலும் போகலாம். இதனால் யுத்தநிறுத்தம் ஒன்றைச் செய்யவோ அன்றி, இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தவோ அவர்கள் விரும்பாமலும் இருக்கலாம்.

இவ்வாறான முடிவுகள் அரசின் கொள்கையுடன் சம்பந்தப்பட்டதாகும். இது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. எனினும், அரசாங்கத்தின் நிலைப்பாடு என்றரீதியில் நடைமுறைப்படுத்தலாம். ஆனால், சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பேசுவதோ அரசின் நிலைப்பாடு, கொள்கை என்பனவற்றிற்கும் அப்பால் முழுப்பொய்யாகவும் புனைகதையாகவுமே உள்ளது.

யாழ். மக்களுக்கு செய்மதி ஊடான தொலைத்தொடர்பு மூலம் பேட்டியளித்த சந்திரிகாவின் பேச்சுக்கள் மேலே கூறப்பட்டவற்றிற்குச் சிறப்பான உதாரணங்களைச் சுட்டிக்காட்டத்தக்கவையாகும். எடுத்துக்காட்டாக, வடபகுதி மீதான பொருளாதாரத்தடை, பல வருடங்களாக தொடர்ச்சியாக அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்ற போதும், சந்திரிகா அவ்வாறானதொரு தடையும் விதிக்கப்படவில்லை எனக்கூறுவதும், அத்தியாவசியப் பொருட்களும், மருந்துப் பொருட்களும் போதியளவில் அனுப்பப்படுவதாகக் கூறுவதும் அப்பட்டமானதொரு பொய் மாத்திரமல்ல, கேலிக்கிடமானதும்கூட.

இதனை நிரூபிப்பதற்கு வடபகுதியில் குறிப்பாகப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் எரிபொருள், உணவுப்பொருள் மற்றும் மருந்துப் பொருட்களுக்கு நீண்டகாலமாக நிலவிவரும் தட்டுப்பாடு என்பனவே போதுமானதாகும். மக்கள் அரசு விதித்துள்ள பொருளாதாரத்தடை போன்றவற்றால் போசாக்கற்றவர்களாகவும், நோய் வாய்ப்பட்டவர்களாகவும் மாறியுள்ள நிலையிலும், அவற்றிற்கு மருத்துவம் செய்யப் போதியளவு மருந்தற்ற நிலையிலும் இருக்கையில், தடைகள் எதையும் அரசு மேற்கொள்ளவில்லை எனக்கூறி உலகம் அறிந்த விடயத்தை மறைக்க முனைவது கேவலமானதாகும்.

இது ஒருபுறமிருக்க, சர்வதேச மத்தியத்துவம் ஒன்றிற்கு தாம் இரண்டரை வருடங்களின் முன்னரே உடன்பட்டதாகவும், விடுதலைப் புலிகளே அதனை நிராகரித்து வந்ததாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளமையானது, அவர் எத்தகைய பொய்களையும் உரைக்கக்கூடியவர் என்பதையே காட்டி நிற்கின்றது.

அதாவது, இனப்பிரச்சினைக்கான தீர்வொன்று சர்வதேச மத்தியத்துவத்துடனேயே சாத்தியமாகும் என முதலில் தெரிவித்து, அதற்கான கோரிக்கைகளையும் ஆரம்பத்தில் இருந்து புலிகளே விடுத்து வந்தனர். 1999ஆம் ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட பாரிய இராணுவத் தோல்வியின் பின்னரே அரசு இவ்விடயத்தில் அக்கறை காட்டியது. இந்நிலையில் தாமே சர்வதேச மத்தியத்தத்திற்கு அழைப்பு விடுத்ததாகவும், புலிகள் அதை நிராகரித்ததாகவும் கூறுவது முழுப்பூசணிக்காயைச் சோற்றில் புதைப்பது போன்றதாகும்.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு பொய்களைப் பேசலாம். அதனைத் தமது ஆற்றல் எனவும் அவர் கருதலாம். ஆனால், இவற்றால் சிறீலங்காவிற்கு நன்மை ஏதும் கிட்டிவிடப் போவதில்லை. பேரழிவே மிஞ்சுவதாக இருக்கும். சமாதானத்திற்கான சந்தர்ப்பங்கள் தவறவிடப்பட்டு நாடு அழிவை நோக்கிச் செல்வது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.



www.tamileelamarchive.com

தமிழ் ஆவணக் காப்பகம்

# ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டமும் அதன் இலக்கியப் பதிகையும்

**-கருணாகரன்-**

(சென்ற இதழ் தொடர்ச்சி)

புதிய நாடக மலர்ச்சிக்கு இந்தக் கள அனுபவம் பெரிதும் உதவும் அளவுக்கு நாடகவியலாளர்கள் தொழிற்பட்டிருக்கின்றார்கள். விடுதலைப் போராட்டம் திருப்புமுனைகளுடனும் உச்ச வளர்ச்சியுடனும் நிகழ்ந்து கொண்டிருக்கும் இக்காலப் பகுதியின் உணர்வலைகளை இன்றைய அரங்க முற்சிகள் சித்தரிக்க முயல்கின்றன. சமகாலப் பிரச்சினைகள் நாடகங்களின் பேசுபொருளாகின்றன. போரை எதிர்கொள்ளவேண்டிய அவசியத்தையும் போரை போரால் தான் வெற்றி கொள்ளவேண்டிய எமது யதார்த்தத்தையும் இன்றைய எமது நாடகங்கள் மிகப்பொருத்தமாக வலியுறுத்துகின்றன. சமகால அரசியல் சமூக நிலைமைகளை உள்வாங்கி உருப்பெறும் இந்த நாடகங்கள் மக்களிடையே அதிக விழிப்புணர்வுக்காக நிகழ்த்தப்படுகின்றன.

இவற்றுடன் அரச பயங்கரவாதத்தை எதிர்க்கும் அரங்கச் செயற்பாடுகள் கடந்த இரண்டு தசாப்தங்களாக பல இடங்களிலும் தொடரப்படுகின்றன. தமிழினம் மீதான சிங்களப் பேரினவாதத்தின் வன்முறை நடவடிக்கைகளை வெளியே அம்பலப்படுத்தும் இவ்வாறான அரங்கச் செயற்பாடுகள் கடந்த இரண்டு தசாப்தங்களாக பல இடங்களிலும் தொடரப்படுகின்றன. தமிழினம் மீதான சிங்களப் பேரினவாதத்தின் வன்முறை நடவடிக்கைகளை வெளியே அம்பலப் படுத்தும் இவ்வாறான அரங்கச் செயற்பாடுகள் எமது போராட்டத்திற்கு வலுச் சேர்த்திருக்கின்றன. அதேவேளை தமிழினத்தின் நியாயமான பார்வையை தரக் கூடிய வகையில் இவை தொழிற்பட்டுமுள்ளன.

இன்றைய எமது நாடகங்களில் ஓவியத்தைப் பயன்படுத்துவது போல கவிதைகளும் இடம்பெறுகின்றன. சமகால நிகழ்வுகளையும் உணர்வுகளையும் பேசும் அரசியற்கவிதைகள் பல முழுமையாகவும் சில இடங்களில் பொருத்தப்பாடு கருதிப் பகுதிகளாகவும் நாடகத்தில் பயன்படுத்தப்படுகின்றன. கவிதைகள் அரங்கினூடாக மக்களைச் சென்றடைய மேலும் நாடகங்கள் வாய்ப்பளிக்கின்றன. அதே வேளையில் நாடகங்களின் உத்திகளிலும் அவற்றின் வடிவங்களிலும் புதிய மாற்றங்களும் புதிய முறைமைகளும் ஏற்படத் தொடங்கின. கவிதைகளைப் பாடியும் உரைத்தும் பாத்திரங்கள் இயங்கின. கவிதைகள் நாடகத்துடன் இணைந்து மக்களைச் சென்றடைந்தன. அத்துடன் கவிதைகள் காட்சிப்படுத்தலுக்கானவை என்ற தன்மையும் அற்குரிய வலுவுள்ளவை என்ற உண்மையையும் வெளிக்காட்டின.

இந்த வளர்ச்சிநிலை பின்பு நாடகங்களுக்குரிய பாடல்களையும் கவிதைகளையும் அவற்றுக்கென புதிதாக எழுதும்படியும் ஆக்கியது. இப்பொழுது எமது பெரும்பாலான நாடகங்களில் புதிய கவிதைகளும் புதிய பாடல்களும் எழுதி இணைக்கப்படுகின்றன. கவிதையும் பாடலும் இணையும் போது இவற்றை ஒருங்கிணைத்து நாடகத்தின் முழுமையை ஏற்படுத்த இசை பெரிதும் உதவியது.

எண்பதுகளின் பின்னான நாடகங்களில் இசைமூலம் பல சாதனைகளைச் செய்தவர் இசையமைப்பாளர் கண்ணன் அவர்கள். 'மண் சுமந்த மேனியர்' தொடக்கம் பல நாடகங்களில் கண்ணனின் இசை மிக நன்றாக பரிமளித்தது. இசை, பாடல், கவிதை, பாத்திரங்கள், வசனம், ஒளி, ஒலி என்று எல்லா விடயங்களும் அமையப்பெற்று முழுமைப்பட்டு நிறைவான நாடகங்கள் நிகழ்த்தப்பட்டன.

அரசியல் நாடகங்கள் என்றால் கருத்துக்குவியல்களாகப் பிரச்சார வாடை வீசும்படியாக இருக்கும் என்ற அனுபவத்தை மாற்றி கலை அழகியலுடன் ஆழமான படைப்புக்கள் உருவாகின. நாடகம் தொடர்பான விவாதங்களும் விமர்சனங்களும் பரவலாக இடம்பெற்றன. நாடகவிமர்சனங்களை பத்திரிகைகளிலும் மற்றும் சஞ்சிகைகளிலும் எழுதும் பண்பும் பிறந்தது இது வளர்ச்சி பெற்று பின்பு நாடக விமர்சனப் புத்தகங்களே எழுதுமளவிற்கு வளர்ச்சியும் பெற்றது.

எண்பதுகளின் பின்னான கலை வெளிப்பாட்டிலும் மேலும் புதிய வரவாகவும் சிறப்பாகவும் இடம்பெறத் தொடங்கியவை இசைப்பாடல்களும், வீடியோப் படங்களுமே. இதில் இசைப் பாடல்களின் வரவு முக்கியமானது. மக்களைப் போராட்டத்துக்கு ஊக்கப்படுத்தும் விதமாகவும் போராட்டத்தின் நியாயப்பாடுகளை இயம்பும் தன்மையுடையனதாகவும் இந்தப் பாடல்கள் ஆரம்பத்தில் வெளிவந்தன. அத்துடன் பின்பு இராணுவ அட்டூழியங்களையும், வன்முறைகளையும் வெளிப்படுத்துவனவாகவும் அவற்றை எதிர்ப்பனவாகவும் போராளிகளின் வீரம், தியாகம், அர்ப்பணிப்பு அவர்களிடையேயுள்ள உறவு, நெருக்கம், உணர்வு எனவாகவும் இது இன்னும் பல தளங்களில் விரிந்தது.

இந்தப் பாடல்கள் இசையிலும் கவித்துவத்திலும் செழுமையுடனும், உணர்வாழத்துடனும் வெளிப்படுத்தப் பட்டன. இதனால் மக்களிடையே இவற்றுக்கான வரவேற்பு அதிகமாகியது. மக்களின் மத்தியில் மிகவேகமாகவும் பரந்த அளவிலும் இக்காலப்பகுதியில் அறிமுகமானவை இசைப்பாடல்களே! எண்பதுகளின் முதற்பகுதியில் தமிழகத்தில் இருந்தும் இசைப்பாடல்கள் எமது போராட்டத்திற்கென உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டன. இதில் எமது ஈழத்துக் கவிஞர், கலைஞர்களுடன் தமிழகக் கவிஞர் மற்றும் கலைஞர்களும் பாடகர்களும் பங்கேற்றனர்.

தமிழகத்தில் உருவாக்கப்பட்ட முதலாவது இசைப்பாடல் நாடா "தமிழீழ எழுச்சிப்பாடல்" என்பதாகும். தேனிசை செல்லப்பா தமிழகக் கலைஞர்களில் ஈழப்போராட்டப் பாடல்களின் பங்களிப்பில் மிக முக்கியமானவராக இருக்கின்றார். இதுவரையில் நூற்றுக்கு மேற்பட்ட பாடல்களை இசையமைத்து, தானும் பாடி பெரும் பணியாற்றியிருக்கின்றார். தொடர்ந்து பல பாடல் நாடாக்கள் வெளிவந்தன. இசையமைப்பாளர்கள் எல். வைத்தியநாதன், தேவேந்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

திரன், ஒலிப்பதிவாளர் பங்காரு ஆகியோரும் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளனர்.

ஈழத்தில் முதன் முதலில் இசையமைப்பாளர் கண்ணனின் இசையில் திலீபன் பாடல்கள் உருவாக்கப்பட்டன. கவிஞர் காசி ஆனந்தன், கவிஞர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் இந்தப் பாடல்களை எழுதியிருந்தனர். இது 1987இல் வெளிவந்தது.

1990இன் தொடக்கத்திலிருந்து ஈழத்தில் ஆரம்பமான தாயக எழுச்சிப் பாடல்களின் உருவாக்கம் எமது மண்ணில் இன்று பெரும் வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றது. மக்களிடையே அரசியல் கருத்துக்களை எடுத்தியம்பவும் மாவீரரின் சிறப்புக்களைப் பேசியும் தலைவரின் மாண்பினைப் போற்றியும் வெளிப்படுத்தியும் வருகின்றன. அத்துடன் போராட்ட நிகழ்வுகளின் வெளிப்பாடுகளாகவும் பதிவுகளாகவும் அவற்றின் உணர்வுகளாகவும் இவை அமைந்துமிருக்கின்றன.

பின்பு 1990இல் "இந்த மண் எங்களின் சொந்த மண்" என்ற பாடல் ஒலிப்பேழை வெளிவந்தது. இதற்கும் இசையமைப்பாளர் கண்ணனே இசையமைத்திருந்தார். தொடர்ந்து வந்த பல பாடல் ஒலிப்பேழைகளுக்கும் அவரே இசையமைப்பாளராகப் பணியாற்றியிருக்கின்றார்.

கிட்டத்தட்ட நூறு வரையானோர் இது வரையில்- இந்தப் பத்தாண்டுகளில் பாடல்களை யாத்துள்ளனர். தொடர்ந்து பல பாடல் ஒலிப்பேழைகள் வெளியிடப்பட்டன. இதுவரையில் ஏறக்குறைய அறுபதுக்கும் மேற்பட்ட ஒலிப்பேழைகள் வெளியாகியிருக்கின்றன.

ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பொது வெளியீடாக வெளியாகிய இந்தப் பாடல் ஒலிப்பேழைகள் பின்பு மாவட்ட ரீதியாகவும், படைப்பிரிவுகள், துறைசார் பிரிவுகளாலும் வெளியிடப்பட்டன. பல புதிய இசையமைப்பாளர்கள் உருவாகினர். ஏற்கனவே இசையமைப்பாளர்களாக இருந்த கண்ணன் மாஸ்ரர், அருணா, யாழ்.ரமணன் ஆகியோருடன் இளைய தலைமுறையினராக முரளி, சிறீகுகன், தேவகாந்தன், இசைப்பிரியன், யாழோசை கண்ணன் எனப் பலர் பாடல் ஒலிப்பேழைகளின் உருவாக்கத்தில் ஈடுபட்டனர். இவர்களுடன் தமிழீழ இசைக்குழுவும் மிகமுக்கியமான பங்கினை வகிக்கத் தொடங்கியது. ஆரம்பத்தில் போராளிகளையே முழுமையாகக் கொண்டிருந்த இந்த இசைக்குழு பின்பு பிற கலைஞர்களையும் இணைத்து தன்னை விரிவுபடுத்தி, செழுமைபடுத்தி பல பாடல்களை உருவாக்கியது. இதன் இசையமைப்பாளராக திரு எஸ்.பி. ஈஸ்வரநாதன் இருந்து வருகின்றார்.

இந்தப் பத்து ஆண்டுகளில் ஈழத்தின் இசைப்பாடல்கள் மக்களிடையே மிகப்பரந்த அளவில் அறிமுகமாயிருக்கின்றன. அதேவேளையில் புதிய இசைக் கலைஞர்களும் பாடலாசிரியர்களும் பாடகர்களும் உருவாகியிருக்கின்றார்கள். அறிமுகமாயிருக்கின்றார்கள். இதில் சகல நிலைகளிலும் போராளிகள் இணைந்திருக்கின்றனர். இசையாளர்களாக, பாடலாசிரியர்களாக, ஒலிப்பதிவாளர்களாக என இது விரிவடைகின்றது.

பாடல்களின் வெற்றியில் இன்னொரு முக்கிய பங்காக இருப்பது ஒலிப்பதிவு, ஒலிப்பதிவுத் துறையில் நாட்டுப்பற்றாளர் நித்தியானந்தம்



(நித்தி) பல சாதனைகளைப் புரிந்து பாடல்களின் வெற்றிக்கு உழைத்தார். இப்போது போராளி ஒலிப்பதிவுக் கலைஞர்களாக கிருபா, மலையவன், வீரா, அகிலன், விஜயமலர் எனப் பலர் இந்தப் பணியைச் செய்கின்றனர்.

இவ்வாறு, கடந்த பத்து ஆண்டுகளில் இசை வளர்ச்சியிலும் பாடலில் அமைந்திருக்கின்ற பொருள் மற்றும் கவித்துவ வெளிப்பாட்டிலும் இசைப் பாடல்கள் பல சாதனைகளைச் செய்துள்ளன. மக்களிடையே மிகப்பரந்த அளவில் அறிமுகமாகியிருப்பதுடன் எமது தாயக விடுதலை உணர்வை ஊட்டக் கூடியதாகவும் இவை அமைந்திருப்பது சிறப்புக்குரியதாகும்.

இசைப்பாடல்கள் பெற்ற வெற்றியைப் போலவே இந்தத் தசாப்தத்தில் எமது மண்ணில் உருவான வீடியோப் படங்களும் வெற்றியீட்டின. 'இனியொரு விதி' என்ற குறும்டத்துடன் ஆரம்பமான இந்த முயற்சி பின்பு விரிந்து வளம்பெற்று முழுநீளப் படங்களைத் தயாரிக்கும் நிலைக்கு வந்தது. கிட்டத்தட்ட 30க்கும் மேலான குறும்படங்களும் 12 வரையான முழு நீளப்படங்களுமாக பல வீடியோப்படங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் நிதர்சனம் நிறுவனப் பொறுப்பாளராக இருந்த பரதனும், ஞானரதனும் இணைந்து "இனி யொரு விதி" என்ற 18 நிமிடப் படத்தை எடுத்திருந்தனர்.

வீடியோப் பிரதியை ஞானரதன் எழுத, பரதன் படத்தின் ஒலிப்பதிவையும், நெறியாள்கையையும் செய்திருந்தார். தொடர்ந்து சில குறும்படங்கள் ஆரம்ப முயற்சியாக இவ்வாறு மேற்கொள்ளப்பட்டன. பின்பு பொ.தாசன் , ஞானரதன் ஆகியோர் இதில் கூடுதலாக ஈடுபட்டனர். பொ. தாசனின் உருவாக்கத்தில் "தமிழோசை", "இன்னும் ஒரு நாடு", "சின்ன விழிகள்", "தாயகக் கனவு", "இது எங்கள் தேசம்", "உயிர்ப்பூ", "தேசத்தின் புயல்கள்" என்பன வெளியாகின. தாசன் பல குறும்படங்களையும் இயக்கியிருக்கிறார். ஞானரதன் "காற்றுவெளி", "முகங்கள்" என்ற இரண்டு முழு நீளப்படங்களை இயக்கியுள்ளார். பொன்.கணேசமூர்த்தியின் இயக்கத்தில் "மண்ணுக்காக" என்ற ஒரு முழு நீளப்படமும் இக் காலப்பகுதியில் வெளிவந்தது. "மண்ணுக்காக" படத்தின் கதையையும் பாடல்களையும் நெறியாளரே எழுதியிருந்தார். "திசைகள் வெளிக்கும்", "பிஞ்சு மனம்" ஆகிய படங்களை கேசவராஜா இயக்கியிருந்தார். "உறங்காத கண்மணிகள்" என்ற படத்தை சேரன் (சேரலாதன்) நெறிப்படுத்தினார். இவற்றுடன் யேசுதாசன், அன்ரன், நா.யோகேந்திரநாதன் ஆகியோரும் வீடியோப் படத்தயாரிப்பில் ஈடுபட்டனர். அன்ரனின் நெறியாள்கையில் "எல்லைக்கற்கள்" யேசுதாசனின் நெறியாள்கையில் "செவ்ரத்தம் பூ" ஆகிய படங்கள் உருவாகின. இந்தப் படங்கள் பலவற்றில் ஒளிப்பதிவாளர்களாகவும், படத்தொகுப்பாளர்களாகவும் பிற தொழில்நுட்பவியலாளர்கள், தயாரிப்பு உதவியாளர்கள் எனப் பல நிலைகளிலும் கூடுதலாகப் போராளிகளே ஈடுபட்டனர். இதில் தவா, திலகன், நகுலன், புனிதன், வரதன், அருந்தவம், பகலவன் ஆகியோருடன் இன்னும் பலர் பங்கேற்றனர். குறும்படங்களில் பெண்போராளிகள் பலரும் இந்தப்பணிகளில் இப்போது செயற்பட்டு வருகின்றனர்.

தொடரும்...



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நேர்காணல்

# மக்களின் தொண்டர்களாய்... பாதுகாவலர்களாய்...

அருகிய வளங்களும், பெருகிய தேவைகளும் கொண்ட சமூகச் சூழலில் முரண்பாடுகளும், மோதல்களும், கசப்பும், காழ்ப்புணர்ச்சியுமே மனிதர்களின் இயல்பாகிப்போகின்றது. இதனால்தான் சமூக வாழ்வில் சில வரையறைகளும், நியதிகளும் தவிர்க்க முடியாத தேவைகள் ஆகின்றன. இந்த வரையறைகளை வடிவமைத்து மக்களின் மத்தியில் சட்ட ஒழுங்கை நிலைநாட்டுவதே ஒரு அரசிற்கான காவல்துறையின் பணியாகும். அதிலும் போராடும் ஒரு தேசத்தின் நடைமுறை யதார்த்தம் மிகவும் சிக்கலானது. மக்களது இயல்பு வாழ்வே குழப்பமுற்றிருக்கும்போது சட்டங்கள் நலிவடைந்து போக குற்றங்கள் மலிந்துபோவதுதான் உண்மை.

எனினும் எமது தமிழீழத்தைப் பொறுத்தவரை தேச விடுதலையுடனான சமூக விடுதலையையும் முன்னெடுக்கும் கொள்கைக்கு அமைவாக மக்களின் இயல்பான நிம்மதியான வாழ்வை உறுதிப்படுத்தும் ஒரு பலம்மிக்க கட்டமைப்பாகவே தமிழீழ காவல்துறை உருவாக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்து தொழாயிரத்து தொண்ணூற்றோராம் ஆண்டு ஆனிமாதம் முதலாம் திகதி தமிழீழ காவல்துறைக்காக தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் தமது பயிற்சிகளை ஆரம்பித்தனர். தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள் ஆயிரத்து தொழாயிரத்து தொண்ணூற்றி ஓராம் ஆண்டு, கார்த்திகை மாதம் பத்தொன்பதாம் திகதி அன்று தமிழீழ காவல்துறையின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு, ஒரு தனியரசை நிறுவப் போரிடும் ஒரு தேசிய இனமாகிய எமது விடுதலைப் போர் வரலாற்றில் பொறித்து வைக்கப்பட வேண்டிய நிகழ்வாக காவல்துறையை அதிகாரபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இன்று தமிழீழத்தில் படிப்படியாக பரவலாக பணிமனைகளைத் திறந்து தமது சேவையை மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதில் தமிழீழ காவல்துறையின் பெண்கள் அணியின் வளர்ச்சியும் அபாரமானது. அயல்நாடுகளான சிறீலங்காவிலோ, இந்தியாவிலோ நடைமுறையில் காணப்படாத பல சமூக சீர்திருத்தத்திற்கான சட்ட ஒழுங்குகளையும், செயற்பாடுகளையும் செய்து வருகின்றனர். இவர்களின் இவ்வளர்ச்சிப் பெருக்கானது தமிழீழப் பெண்களை முன்னேற்றகரமான, துணிவுள்ள பெண்களாக வாழ வகைசெய்ய முனைவதில் வெற்றி கண்டுவருகிறது.

**தமிழீழ காவல்துறையின் பெண் உப பரிசோதகர் செல்வி. பொன்னையா பவானி அவர்களுடன் சில நிமிடங்கள்.**


www.tamileelamarchive.com

**ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றி ஓராம் ஆண்டு, உங்களது முதல் அணியின் பயிற்சியை நிறைவு செய்து கொண்டு வெளியேறிய அன்றிலிருந்து இன்றுவரை காவல்துறை நிர்வாகத்தில் பெண்கள் அணியினரான உங்களது பங்கு பற்றி கூறுவீர்களா?**

ஆயிரத்து தொழாயிரத்து தொண்ணூற்றி ஓராம் ஆண்டு, கார்த்திகை மாதம், பத்தொன்பதாம் திகதி எமது அணிகள் பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறின. எமது முதலாவது அணிவகுப்பை தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டு, எமது பணிகளை ஆரம்பித்து வைத்தார். இதனைத் தொடர்ந்து யாழ். குடாநாட்டில் யாழ்ப்பாணம், சுன்னாகம், சங்கானை, கோப்பாய், சாவகச்சேரி, பளை, பருத்தித்துறை, நாகர்கோவில் போன்ற இடங்களில் பணிமனைகள் திறந்து வைக்கப்பட்டன. இதன்பின்னர், வன்னிப் பெருநிலப்பரப்பில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம், வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் பணிமனைகள் திறந்து வைக்கப்பட்டன. சகல பணிமனைகளிலும் அன்றிலிருந்து இன்றுவரை நாமும் பணிபுரிந்து வருகின்றோம்.

பணிமனைகளில் பொதுமக்களால் பதிவு செய்யப்படும் முறைப்பாடுகளை பதிவு செய்தல், அவற்றினை விசாரணை செய்தல், நீதிமன்றில் காவல்துறையால் தாக்கல் செய்யப்படும் வழக்குகளை நெறிப்படுத்துதல் போன்ற பணிகளை செய்வதுடன், காவல்துறையின் விசேட பணிகளான குற்றப்புலனாய்வுப் பிரிவு, குற்றத்தடுப்புப் பிரிவு போன்ற பிரிவுகளில் செயல்படுவதோடு, புலனாய்வு வேலைகளையும், காவல்துறை நடுவப்பணியகம், பணிமனைகள் என்பவற்றில் அலுவலகப் பணிகளையும், நீதிமன்றினால் விடப்படும் அழைப்பாணைகள், பிடியாணைகள் என்பனவற்றையும் செய்து வருகின்றோம். இவற்றைவிட பணிமனைகளால் மேற்கொள்ளப்படும் குற்றத்தடுப்பு நடவடிக்கைகளிலும் எமது பங்கு அளப்பரியது.

இவற்றுடன், ஒவ்வொரு பிரதேசங்களிலும் இடம்பெறும் பொது நிகழ்வுகள், ஆலயத் திருவிழாக்கள், பாடசாலைகளின் முன்னால் வீதிப்போக்குவரத்து ஒழுங்கைப் பேணுதல் போன்ற விசேட கடமைகளையும் செய்துவருகின்றோம். மேற்கூறிய பணிகள் யாவற்றையும் இரவு பகல் என்று பாராது மேற்கொண்டு வருகின்றோம்.

அண்மையில் மட்டக்களப்பு, திருகோணமலைப் பிரதேசங்களிலும் எமது பெண் உறுப்பினர்கள் பணிகளை மேற்கொண்டுவந்தனர்.

தொடர்ந்தும் மக்கள் மத்தியில் ஏற்படும் குடும்பப் பிணக்குகள், கொடுக்கல் வாங்

கல் பிணக்குகள், காணிப் பிணக்குகள், சிறு சிறு சண்டை சச்சரவுகள் போன்ற பிரச்சினைகளை பணிமனைகளிலே வைத்து இருதரப்பினருடைய சம்மதத்துடன் இணக்கம் கண்டு வருகின்றோம். இதில் ஆண்களைவிட எமது பங்கே கூடுதலாக உள்ளது. குற்றவியல் வழக்குகளில் விசாரணைகளை மேற்கொண்டு, துப்புத்துலக்கி, சந்தேக நபர்களை கைதுசெய்து நீதி மன்றுகளில் வழக்குகளை தாக்கல் செய்து வருகின்றோம்.

**இன்றைய காலப்பகுதிகளில் எந்தெந்தப்பகுதி பணிமனைகளில் பெண்களே தலைமைப் பொறுப்பேற்று நிர்வாக ஒழுங்கை மேற்கொண்டு வருகின்றனர்?**

இன்றைய போர்க்காலச் சூழலில் எமது கட்டுப்பாட்டுப் பிரதேச எல்லைகள் குறுகி உள்ளதால், கடந்த காலங்களில் பணிமனைகளில் தலைமைப் பொறுப்பில் இருந்த பெண் உறுப்பினர்கள் பணிமனைகளின் பிரிவுப் பொறுப்புக்களையும், பதில் பொறுப்புக்களையும் ஏற்று செய்துவருகின்றோம். நாம் பொறுப்புக்களை ஏற்று செயற்படுகையில் அங்கு பணிபுரியும் சகல உறுப்பினர்களும் எமது பொறுப்பின் கீழே வழிநடத்தப்படுகின்றனர். இன்னும் நீதி மன்றுகளில் வழக்குகளை நெறிப்படுத்துதல், பணிமனைகளில் விசாரணைகளை நெறிப்படுத்துதல் போன்ற முக்கிய பணிகளையும் செய்துவருகின்றோம்.

**எந்த அடிப்படையில் உங்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படுகின்றன?**

குற்றச் செயல்கள் தொடர்பாக தகவல்கள் சேகரித்தல், வழக்குகளை கண்டுபிடித்தல், நீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றுதல் மற்றும் எமது சேவைக் காலத்தின் போது ஒழுக்கம், கட்டுப்பாடு என்னும் விடயங்களில் எமது ஈடுபாடு எவ்வளவு ஆழத்திற்கு அமைந்துள்ளது என்பவற்றின் புள்ளி விபரங்களை அடிப்படையாக வைத்து, எமக்கு எழுத்து மூலமான பரீட்சையொன்று நடாத்தப்படுகின்றது. இதில் சித்தியடைந்தவர்கள் நேர்முகப் பரீட்சையொன்றிற்கு அழைக்கப்படுகின்றனர். இதிலும் சித்தியடைந்தவர்களுக்கே பதவி உயர்வுகள் வழங்கப்படுகின்றன.

அவசியமான காலங்களில் களமுனைக்கு செல்லும் காவல்துறையினரின் பணிகள் அங்கு சிறப்பாக நடைபெற்றதாகவும், அவர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கலாம் எனவும் களமுனைத் தளபதிகள் சிபார்சு செய்தால் அவ்வாறானவர்களுக்கும் பதவி உயர்வுகள் வழங்குவதுண்டு.

**உங்களது படிமுறை வளர்ச்சிகள் பற்றிக் கூறமுடிமா?**

காவல்துறையில் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்படும்போது இரண்டு படிமுறை நிலைகளிலேயே சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஒன்று சாதாரண உறுப்பினர்கள், இரண்டு உப பரிசோதகர்கள். சாதாரண உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்படும் உறுப்பினர்கள், நான் முன்பு கூறிய அடிப்படையில் தகுதிகள் காணப்படின் தலைமைக் காவலராக பதவி உயர்த்தப்படுவர். இதன் பின்னர் உப பரிசோதகர், பரிசோதகர் என்ற நிலைக்கு உயர்த்தப்படுவர்.

உப பரிசோதகர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுபவர்கள் பரிசோதகராக பதவி உயர்த்தப்படுகின்றனர். எமது படிமுறை வளர்ச்சியும் தற்போது பரிசோதகர் தரத்திலேயே உள்ளது.

**பெண்கள் மீதான குற்றச்செயல்களில் எந்தவகையான குற்றச்செயல்கள் அதிகமாக நடைபெறுகின்றன?**

காதலித்துக் கைவிடுதல், காதலித்து தாய்மையடையச் செய்து கைவிடுதல், காதலித்து உடலுறவு கொண்டு கைவிடுதல் போன்ற குற்றச் செயல்களே அதிகமாக நடைபெறுகின்றன. இதனால் பெண்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். இதற்குக் காரணம் அநேகமான பெண்கள் தங்களது உடலியல் பற்றிய விளக்கத்திற்கு வருவதற்கு முன்னரே சிறு வயதிலேயே ஏமாற்றப்பட்டுவிடுவதே ஆகும். அண்மைக் காலங்களில் இன்றைய போர்ச் சூழலை தமக்கு சாதகமாக்கிக்கொண்டு சில ஆண்கள் தவறுகளை புரிந்துவிட்டு, இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் செல்வதும், இடப்பெயர்வுகளைக் காட்டி நிரந்தர முகவரிகள் இல்லாமல் இடங்களை மாறி மாறி வாழ்வதே காரணமாகும். இவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்க விளையும் போது தாம் சட்டத்தில் இருந்து தப்புவதற்காக சிலர் பெண்களிடம் இருக்கும் சில ஆதாரங்களையும் தந்திரமாகப்பெற்று அழித்துவிடுகின்றார்கள்.

இதனைத் தவிர்ப்பதற்கு பெண்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.

**குற்றவாளிகளை கைது செய்யச் செல்லும்போது எந்த வகையான பிரச்சினைகளையாவது நீங்கள் எதிர்கொண்டிருக்கிறீர்களா?**

தமிழீழத்தைப் பொறுத்தவரையில் குற்றவாளிகளை கைது செய்தல் தொடர்பான நடவடிக்கைகளில் பெண் உறுப்பினர்களாகிய நாம் பிரச்சினைகளை எதிர்கொள்வது மிக மிக அரிதே. பொதுவாக பெண்களை கைது செய்வதற்கே நாம் சென்றுவருகின்றோம். நாம் ஒருவரை கைது செய்யும்போது அவர் தொடர்பாக சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டினை மிகவும் விளக்கமாக அவர்களுக்கு எடுத்துரைப்பதுடன், அவர்களை எமது பணிக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். இவ்விடயத்தில் எமது மக்கள் மிகவும் புரிந்துணர்வு உள்ளவர்கள். நாம் மேற்கூறிய முறையில் சம்பந்தப்பட்டவர்களை அணுகும்போது அவர்கள் எம்முடன் விசாரணைக்காக பணிமனைக்கு வருகின்றனர். சில சமயங்களில் கைது செய்யப்பட வேண்டியவர்களுடைய பெற்றோர், பாதுகாவலர் அல்லது வீட்டுக்காரருக்கு அவர்கள் என்ன பிரச்சினைக்காக எமது விசாரணைக்கு தேவைப்படுகின்றார்கள் என்ற விடயத்தை அறிவித்தால் தாமாகவே சம்பந்தப்பட்டவர்களை கொண்டு வந்து எம்மிடம் முற்படுத்துகின்றனர்.



**விசாரணைக்கென தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுடனான உங்களது அணுகுமுறைகள் எப்படியானவையாக அமைகின்றன?**

எமது காவல்துறையில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படும் சகலரும் தமிழீழ மக்களே.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இவர்கள் சிங்கள இராணுவக் கெடுபிடிகளாலும், பொருளாதாரத் தடை என்பவற்றாலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களும் எமது உடன் பிறப்புக்களே. இவர்களுடன் அன்பாகவும், பாசமாகவுமே நாம் எமது அணுகுமுறைகளை மேற்கொள்கின்றோம்.

நாம் குற்றச் செயல்கள் தொடர்பான தகவல்களை பெறுவதற்காக சகல கிராமங்களிலும் மக்கள் மத்தியில் ஏராளமான தகவலாளர்களை உருவாக்கி வைக்கின்றோம். அக்கிராமங்களில் ஏதாவது குற்றச் செயல்கள் நிகழ்ந்தால் தகுந்த ஆதாரங்களுடன் தகவல்களை திரட்டி எமக்குத் தருகின்றனர். இம்முறையானது குற்றச் செயல்கள் நிகழாது இருப்பதற்கான சிறந்ததொரு அணுகுமுறையாகவே நாம் பார்க்கின்றோம். நாம் பொதுமக்களை தகவலாளராக மாற்றி அவர்களின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொள்வதால் விசாரணைகளை இலகுவாக செய்யக்கூடிய நிலையில் இருக்கின்றோம். இந்த முறையானது விடுதலைக்குப் போராடுகின்ற எமது தேசம் எதிர்காலத்தில் குற்றச்செயல்கள் அற்ற ஆரோக்கியமான ஒரு தேசமாக அமைவதற்கு உதவுமென நான் பெரிதும் நம்புகின்றேன்.

**ஒவ்வொரு குற்றவாளிகளும் சமூகத்தின் ஒவ்வொரு பிரதிநிதிகளே. அந்த வகையில் அவர்கள் தடுப்புக்காவலிலிருந்து வெளியே செல்லும்போது தாழ்வு மனப்பான்மையுடனோ, குற்றவுணர்வுடனோ வெளியேறலாம். அவர்களுக்கு நீங்கள் என்ன செய்கின்றீர்கள்?**

எமது அமைப்பானது விடுதலைக்காகப் போராடும் ஒரு தேசிய இயக்கத்தின் உப அமைப்பாகும். போராட்டம் நடந்து கொண்டிருக்கும் இச்சூழலில் எமது பிரதான கடமைகளில் ஒன்றுதான் காவல்துறைக்கு வரும் மக்கள் அனைவரையும் போராட்டத்தின்பால் பங்காளிகளாக்குவதாகும். அவர்கள் எமது தடுப்புக்காவலில் இருக்கும் போது அவர்களுடன் ஏற்றத்தாழ்வுகள் ஏதுவுமின்றி பழகுகின்றோம். காவல்துறையின் மக்கள் தொடர்பக உறுப்பினர்கள், தேச விடுதலையுடன்கூடிய சமூக விடுதலைக்கான கருத்துக்கள், அன்பு, அறம் என்பவற்றை அவர்களுடன் பகிர்ந்துகொள்கின்றார்கள்.

நாம் இப்படியான ஒரு உறவை இவர்களுடன் ஏற்படுத்திக்கொள்வதால் இவர்கள் வெளியேறும்போது தாழ்வு மனப்பான்மையோ, குற்ற உணர்வோ இல்லாமலேயே வெளியேறுகின்றனர். குற்றவாளிகள் என்று தண்டிக்கப்படுவோர் உயர்ந்த குணங்கள், பல சாதனைகள் படைக்கும் திறமைகள் என்பன அயர்ந்து கிடக்கும் உள்ளங்கள் படைத்தவர்கள். ஏதோ சூழ்நிலைகளின் காரணமாகவோ, வறுமையின் விளைவாகவோ, பஞ்சத்தை தீர்க்கும் எண்ணங்கொண்டே வழி தவறி குற்றங்களை புரிகின்றனர். அவர்களுக்கு உளவியல் ரீதியாக தகுந்த ஒழுக்கப் பயிற்சி கொடுத்து அவர்களது உள்ளத்தை உயர்த்திவிட்டால் அவர்களும் தேசத்தின் சிறந்த குடிகளாக திகழ்வார்கள். இவ்வாறு தகுந்த பயிற்சியளித்து குற்றவாளிகளை சீர்திருத்துவதுதான் சீர்திருத்தப்பள்ளிகளில் முக்கியமாக கவனிக்கப்படும் வேலையாகும். கல்வி அறிவில்லாதவர்களுக்கு கல்வி அறிவும், உழைப்பில் நாட்டமில்லாதவர்களுக்கு உழைப்பின் உயர்வையும் புகட்டி தன்மானம், சுயகௌரவம், பிறர்மீது அன்பு, தேசப்பற்று போன்ற நல்லியல்புகளை கற்பித்து அவர்களின் மனம் பண்படுத்தப்பட்டால் குற்றவாளிகளும் குணவான்களாக மாறுவது இயலாத காரியமில்லை.

சீர்திருத்தப்பள்ளிகள் கல்விச்சாலைகளாக இயங்கவேண்டும். சீர்திருத்தப்பள்ளிக்கு வெளியில் இருப்பவர்கள் அனைவருமே சீர்திருத்தப் பள்ளியில் இருக்கும் குற்றவாளிகளைவிட ஒழுக்கத்தில் உயர்ந்தவர்கள். உள்ளத்தில் கள்ளமில்லாதவர்கள். தூய்மையுடையவர்கள் என்று கூறிவிட முடியாது. ஆதலால் குற்றவாளிகளை சமூகத்தின் கடைநிலையில் உள்ளவர்கள் என்று நாம் எண்ணுவதற்கு இடமில்லை.

மேலே சொல்லப்பட்ட சீர்திருத்தக் கொள்கையை எம்மால் முடியுமானவரை நடைமுறைப்படுத்துவதுடன் மிகவும் பரந்த அளவில் நிறுவனமயமாக்கப்பட்ட முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தமிழீழத் தேசத்திற்கான இந்தச் சேவைகளின் மூலம் எப்படியான ஒரு இலக்கினை அடையவேண்டுமென நீங்கள் விரும்புகின்றீர்கள்?**

தமிழீழ தேசம் விடுதலையடையும் போது எதுவித குற்றச்செயல்களும் அற்ற உன்னதமான ஒரு சமூக அமைப்பு உருவாகும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். இந்த இலக்கினை வைத்தே கௌரவ தேசியத் தலைவர் அவர்களின் வழிநடத்தலின் கீழ் ஒவ்வொரு செயற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**நீங்கள் ஒரு காவல்துறை பெண் உறுப்பினர் என்ற முறையில் சமூகத்தில் உள்ள பெண்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

இன்றைய எமது போராட்டம் தேசிய விடுதலைக்காக மட்டுமின்றி பெண் விடுதலையையும் உள்ளடக்கியதாக உள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் போராட்டத்திற்கு கௌரவ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் தலைமை தாங்கி வழிநடத்திச் செல்கின்றார். இதனையிட்டு தற்காலப் பெண்கள் பெருமிதம் அடையவேண்டும். இதுவரை காலமும் சமூக ஒடுக்குமுறைகளுக்கும், மூடநம்பிக்கைகளுக்கும் இலக்காகியிருந்த தமிழீழப் பெண்கள் தற்போது விழிப்படைந்து வருகின்றனர். பெண்கள் விழிப்படைந்து களமுனைகளிலும் பல சாதனைகள் படைத்து வருகின்ற இந்தக் காலகட்டத்திலும்கூட எமது சமூகத்தில் பல பெண்கள் வெளியில் வரத் தயங்குகின்றனர். அவர்களும் விழிப்படைய வேண்டும். தம்மைத்தாமே காப்பாற்றும் வலுவுள்ளவர்களாக மாறவேண்டும். பாதிப்புக்குள்ளாகும் பெண்கள் தமக்கென நீதியை நிலைநாட்ட சட்ட ஒழுங்குகள் இருக்கின்றன என்பதை தெரிந்து வைத்திருக்க வேண்டும். இல்லையெனில் தெரிந்தவர்கள் மூலமாவது அறிந்து கொள்ளவேண்டும். குறிப்பாக தமக்குச் சாதகமாக தம்மிடமுள்ள ஆதாரங்களை கைவிடாது அவற்றை நீதி மன்றங்களில் சமர்ப்பிக்க முன்வரவேண்டும்.

எனவே எந்தவொரு பெண்ணும் தாம் செய்யப்போகும் எந்தக் காரியமாக இருந்தாலும் ஆழ்ந்துயோசித்து அதனால் ஏற்படப்போகும் நன்மை, தீமைகளை அறிந்து செயல்பட்டு வந்தால் பெரும் பாதிப்புக்களுக்குள்ளாகாமல் தம்மைத்தாமே காப்பாற்றிக்கொள்ளலாம் என்பதை அவர்களுக்குக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

**-உலக மங்கை-**






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மௌனத்துள் துயரம்...

## கவிதைகள்

அம்மா...
நீ மௌனமாய் இருப்பதேன்...?
கண்ணும் கருத்துமாய் காத்த உன்மகள்
களம் நோக்கிச் சென்று விட்டாள்
என்ற கலக்கமா...?
அல்லது...
உன் பிள்ளை போரில் வென்று
வெற்றி வாகை சூடிவரும் வரையும்
மௌன விரதமோ சொல்லம்மா.
அப்படியாயின்,
உனக்கு பெருமையம்மா.

களம் குதித்த உன் பிள்ளை
களமாடிக் கயவனை வென்று வருவாள்
'சீறிவரும் சன்னங்களிற்கிடையிலும்'
தனித் தமிழீழம் வெகுவிரைவில் வேண்டும்,
உன் வீரப் புதல்வியின் ஆகுதியால்
நாளை தமிழீழம் உருவாகும்.

போராட்டச் செடியில் பூத்த
புதுமலர் உன்பிள்ளை,
வருகின்ற தமிழீழத் தடாகத்தில்
உன் பிள்ளையின் முகம் துலங்கிடும்
உனக்கு விடிவு பிறக்கும்.
நீ மௌனமாய் இருந்து விட்டால்
ஈடேறுமா...?
உன் பெற்ற கடனை தீர்த்துவிட வேண்டும்
மௌனமாய் இராதே,
மௌனத்திற்குள் துயரம் கொள்ளாதே.
விழித்தெழுந்திடம்மா.

-நா.நாமகள்

**ஒரு கதை!**

நாங்கள் எப்போதும் தயாராக உள்ளோம்.
தமிழ் மக்களே நீங்கள் கவலைப்பட வேண்டாம்.
உங்கள் நலனில் எங்களுக்கு எப்போதும்
அக்கறை உண்டு.
இந்த வானும், கடலும், மலையும், மடுவும்
உள்ளவரை உங்கள் மீதான எங்கள் கரிசனை
எப்போதும் போல உண்டு
அதனால்தான் உங்களுக்கு எத்தகைய இடர்கள்
வரும் போதும் நாங்கள் நிவாரணம் வழங்கத்
துடியாகத் துடித்துக் கொண்டு இருக்கின்றோம்
எனவே எந்தக் கஸ்டத்தின் போதும் நீங்கள்
எங்களை மறந்து விடாதீர்கள்.
சிங்கத்தின் காவலர்கள் உங்களை
காவு கொள்ள வரும்போது அலட்டிக் கொள்ளாமல்
அவர்கள் உங்களை சுட்டுக் கொல்ல,
வெட்டிக் கொல்ல உங்களால் ஆன
ஒத்துழைப்பினை
வழங்குங்கள். நாங்கள் உங்களைப் புதைப்பதற்காக
கிடங்குகளை வெட்டி வைத்துக்
காத்திருக்கின்றோம்.
நம்புங்கள் அப்போதுதான் உங்களுக்கான
நஸ்ட ஈட்டினை எங்களால் பெற்றுத் தரமுடியும்.
நாங்கள் ஜனநாயகத்திற்கு மீண்டவர்கள்
என்பதை நீங்கள் எப்படி மறுக்க முடியும்.

- இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்.


# ஆகா!



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# வள்ளுவர் கூறிய வீரமும்



-மு.வேந்தன்.

வள்ளுவர் தந்த திருக்குறள் தனி மனித வாழ்வு, சமுதாய வாழ்வு, நாட்டு வாழ்வு, உலக வாழ்வு அனைத்தும் முழுதுறத் தழுவிய வாழ்வியல் நூல், அது கற்பனைப் பனுவலன்று. கற்பனை கடவுள் கொள்கைகளையும், அது தொடர்பான கட்டுரைகளையும் ஏற்காத நூல். கர்ம பலனையும், யாகம் செய்தலையும் ஆதரிக்காத நூல். நல்லன எவை அல்லன எவை என்பதைச் சுட்டிக்காட்டும் நூல். வறட்டுக் கொள்கை பேசும் நூலன்று. கடமைகளை வலியுறுத்துவதோடு, அன்புக்கும் அறத்திற்கும் விளக்கம் தந்து அவற்றிற்கு ஆக்கம் தரும் நூல். தீய பண்புகளையும், தீய செயல்களையும் வெறுத்து ஒதுக்கும் நூல். ஒழுக்கத்திற்கும் ஒப்புரவிற்கும் உயர்வு தந்து அறிவுக்கும், ஆற்றலுக்கும் மதிப்பளிக்கும் நூல். காதலின்ப வாழ்வை கண்ணெனப்போற்றும் நூல் சுருங்கக் கூறின் எந்நிலைய வாழ்க்கைக்கும் வழிகாட்டும் வாழ்க்கை விளக்க முதன்நூல். திருக்குறள் ஓர் உயிர் நூல் என்பது மெய்ப்பட வேண்டுமாயின் வள்ளுவர் குறள்களைக் கால நடப்புகளோடு பொருத்தி எழுதவும், சொல்லவும், விளக்கவும் வேண்டும்.

உலகத்தில் நல்லரசும், அல்லரசும் உண்டு வல்லரசும் மெல்லரசும் உண்டு இந்தியாவின் முன்னாள் முதன்மை அமைச்சர் நேருவும், சீனாவின் முதன்மை அமைச்சர் சூ என் லாயும் பஞ்சசீல உடன்படிக்கை செய்தனர். அதைத் தொடர்ந்து சீனத் தூதுவர் இந்தியாவில் 'சீனா-இந்தியா பாய் பாய்' அதாவது சீனரும் இந்தியரும் உடன் பிறந்தார் என்று கூறித்திரிந்தார். ஆனால், கேள்போல் வந்த பகை வாள் போல் மாறியதை இந்

# வீரப்படையும் எம்மிடம்

தியா மீது சீனா படையெடுத்தது காட்டியது. இலங்கையில் நடந்தது என்ன? சமாதான உடன்படிக்கைகள் கிழித்தெறியப் படவில்லையா? இன்று நடப்பது என்ன? வக்கற்றவர் அம்மாவின் பொதியை பொக்கிசம் என்கின்றனர். போராடி உரிமை பெறும் எண்ணத்தைவிட்டு உறவாடுகின்றனர். ஆனால், வள்ளுவரின் எச்சரிக்கையை மறந்து உறவாடுகின்றனர்.

'தொழுதகையுள்ளும் படையொடுங்கும் ஒன்னார் அழுத கண்ணீரும் அனைத்து'

அதாவது பகைவர் வணங்கித் தொழுத கையினுள்ளும் கொலைக் கருவி மறைந்திருக்கும். பகைவர் அழுது சொரிந்த கண்ணீரும் அத்தன்மையதே. அம்மையாரின் 'சமாதானத்தின்' பின்னால் தமிழனை அடியோடு அழிக்கும் எண்ணமே உள்ளது.

இன்றுவரை தமிழினம் பல இனக்கலவரங்களைக் கண்டுள்ளது. அம்மாவின் கிபீர், மிக், வானவூர்திகள் சொத்து நலன்களைப் பறித்து மக்களைத் துரத்தியடிக்கின்றன. கோவில்கள், தேவாலயங்கள் இடிந்து வீழ்கின்றன. நம் நாட்டை நரகமாக்குகின்றன. இவற்றை உணர்ந்து நம்மை நாமே பாதுகாக்கவேண்டும். நம்மைக் காக்கும் படையுடன் சேர்ந்து போராட வேண்டும். காக்கத் தவறுகிறவனைப் பார்த்துத்தான் வள்ளுவர்.

'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்' என்று எச்சரிக்கின்றார்.

வள்ளுவரின் பொருட்பால் எழுபது அதிகாரம், எழுநூறு குறள்களைக் கொண்டது. இறைமாட்சி என்பது முதலாவது அதிகாரம். அவ்வதிகாரத்தின் முதற்குறள்.

'படை சூடி கூழ் அமைச்சு தடபரண் ஆறும் உடையாள் அரசுருள் ஏறு'

இக்குறளில் முதற்சொல் படை, வள்ளுவர், படை என்னும் ஆற்றலுடைய சொல்லை முதலாவதாக வைத்து பொருட்பாலை தொடங்கி உள்ளார். படையின் இன்றியமையாமையை இதனைவிட வேறுவகையால் உணர்த்த முடியுமா?

'படை என்பது தலைக்கு உரிய உறுப்புக்கள் அமைந்ததாகவும், இடையூறுகளுக்கு அஞ்சாததாகவும் எடுத்த கடமையில் வெற்றி பெற்றுத்தருவதாகவும் இருக்கக்கூடிய படையே தலைவனுடைய செல்வங்களுள் சிறந்த செல்வமாகும்.

'உறுப்பமைந்து ஊறஞ்சாவெல்படை வேந்தன் வெறுக்கையும் எல்லாம் தலை' என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கேற்ப தமிழீழத் தேசியத் தலைவர் படை அமைத்து படையை நகர்த்தி பல நூற்றாண்டுக்காலம் அன்னியனின் காலடியில் இருந்த ஆனையிறவை மீட்டுத் தந்துள்ளார். தரணி போற்றும் தமிழைப் பேசும் தமிழனுக்கு ஒரு தாயகம் வேண்டும். அவன் மறத்தை, மானத்தை உலகம் போற்ற வேண்டும். அடாத சிங்களவன் ஆட்சியிலிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டுமென எண்ணி தங்கத்தமிழ்த்தாய் பெற்றெடுத்த தவப்புதல்வன் பிரபாகரன் ஊண் உறக்கமின்றிப் போராடுகின்றார்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நம் ஈழ மன்னர்கள் ஐரோப்பியர்களுக்கும், சிங்களவர்களுக்கும் அடிமைப்பட்டதற்குக் காரணம் காலத்துக்கேற்ற படைக்கருவிகளும் எதிரிகள் வைத்திருந்த கருவிவகைகளும் இல்லாமையே. இன்று நம் தலைவர் பொருத்தமான கருவிவகைகளை வைத்தே வன்னிப்பெருநிலப்பரப்பிலிருந்து எதிரிகளை ஓட ஓட விரட்டினார் இதனையோ வள்ளுவர்,

'வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும் பகைவர் கண்பட்டசெருக்கு'

நவீன கருவிகள் இருந்தால் போதுமா? எதிரியிடம் இல்லாத உளஉறுதி, இலட்சிய வெறி நம் வீரர்களிடம் உண்டு. வெல்லும் படைக்கு இவை தேவை என்பதை வள்ளுவர்,

'கூற்றுடன்று மேல்வரினும்கூடி எதிர்

நிற்கும் ஆற்றலதுவே படை' என்றார்.

அதாவது வியூகம் அமைத்து எமனே சினம்கொண்டு வந்தாலும் எதிர்நின்று வெல்லக் கூடிய ஆற்றல் உடையது நம்படை என்பதை நிரூபித்துள்ளார் நம் தேசியத் தலைவர்.

வள்ளுவரை ஒரு தீயன் கண்டபடி வைதான், வள்ளுவர் பொறுத்தார். அக்கொடியவன் அவர் துணைவி வாசுகியை தொட்டிழுக்கப் போனான். வள்ளுவர் வைத்தார் வலிய அறை. 'ஏனையா அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல இகழ்வாரை பொறுத்தல் வேண்டும்' என்று எழுதிய நீரே பொறுமை இழந்து என்னை அடித்ததேன்' என்று வினவினான் அக்கொடியவன். ஆனால் வள்ளுவரோ,

'செய்தக்க அல்ல செயக் கெடும் செய்தக்க செய்யாமை யானுங் கெடும்' என்று இன்னுமோர் அறை அறைந்தார்.

நம் வீட்டில் கொடிய பகைவன் புகுந்து மங்கையர் மானத்தை, மக்களின் சொத்து சுகங்களை அழிக்கும் போது பாராமுகமா

# உண்டு

இருக்காமல் மறம், மானம் கொண்ட படையில் சேர்ந்து போராடி அன்னியனை அடித்துத் துரத்த வேண்டாமா?

வள்ளுவர் சாத்வீகப்பூச்சி அல்ல. பல போர்களைப் பார்த்தவர் அதனால்தான்.

'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்களை கட்டதன னொடுநேர்' என்றார்.

பயிருக்கு களை பிடுங்குவது போல் நாட்டை அழிக்கும், மக்களை அழிக்கும் தீயரை ஒழிக்க வேண்டும்.

வள்ளுவர் தந்த வீரப்படை உண்டு. வள்ளுவர் தந்த வீரமறவர் உண்டு. அவ்வீரப்படையை வழிநடத்த தரணிபோற்றும் வல்லவம் மிக்க வீரத் தலைவன் உண்டு. எனவே அணி அணியாக தலைவன் தலைமையில் அணிதிரண்டு மக்களையும், நாட்டையும் பாதுகாக்க அடாத சிங்களவனின் போரை எதிர்த்துவெல்ல வேண்டும்.

'நஞ்சுப் பகைவர் நடுநடுங்கப்போர் புரியும் அஞ்சாப் படை வலிமையாக்கு'

காட்டு மிராண்டிகளாய்
ஆதிவாசிகள் என் கண்ணெதிரே வந்தனர்.
என்னினக் குழுமத்தின்
மேலுள்ள கோபத்தில்
என் மனிதர்களைக் கொன்றனர்
என்னவர்தேடிய தேட்டங்களைக்
கொள்ளையிட்டு
பெண்டிரைப் பிள்ளைகளைப் பலியிட்டு
இரத்தவெள்ளத்துள் கிடக்கும்
என்மேல் ஏறிமிதித்துக்
கூக்குரலிட்டபடியே சென்றனர்.
விழிபரப்பிய இடமெங்கும் பிணக்காடு
கற்காலத்தில் விரியாத
சிந்தனைத் திறனோடு
அவர் செய்வதைத் தடுக்கப்
போரிட்ட என்மாந்தரிற்
தவறில்லையே
குருதி பீறிடத்துடிக்கும்
எனக்காய் மனித உரிமை பேச
அன்று எவருமே இருக்கவில்லை
போர் மரபை மீறுவது பற்றியும்
சமாதான வழிபற்றியும்
பேச்சுவார்த்தையின் அவசியம் பற்றியும்
கூற முன்வருவதற்கு

மானுடனாயிருந்தேன்.
எனது போர்க்குணம் சிறுத்துப்
பெட்டிக்குள் அடங்கியிருந்தது.

ஆம் அதுதான்
வெலிக்கடையில் பூசாவில்
பிந்துனுவெவவில்
மீட்சி தரவந்தார்கள்
இந்தக் காட்டுமிராண்டித் தேவதைகள்
சமர்க்களங்களில் கண்ட
தோல்விகட்கு சமன்பாடு செய்ய
எம்மைச் சாகடித்தார்கள்.
அவர்கள் குதறியெறிந்தவர்களின்
குருதித்துளிகளிலிருந்து
எமக்காய் இலவு காத்த
உறவுகளின் விழி நீரிலிருந்து



# மீண்டும் பிறக்கின்றோம்

அமைப்புக்கள் இருந்ததாகவும்
தெரியவில்லை.

காலமாற்றங்களுடன்
கணணி ஏந்திய கோலத்தவராய்
நான் சிறைப்பட்டுக் கிடந்த
சிங்க நகரத்துச் சிறைக்கூடத்துள்
எப்படி இவர்கள் புகுந்தார்கள்?
போரில் கைதாகிய படைவீரர்களை
நல்லெண்ண அடிப்படையில்
சிங்கள உறவுகளிடம் கையளிக்கும்
போர் மரபு தெரிந்த
ஒரு தலைவனின் தேசத்திலிருந்து
அப்பாவியாய் வந்த என்னைச்
சிறைக்கூடத்துள் ஏன் வதைத்தார்கள்?
கைதாகும் போது முரண்டு பிடிக்கவில்லை
வதைப் படுத்தியவரைத்
திருப்பியடிக்கவில்லை
புத்தனின் போதனை
யுத்தமெனக் கொண்டவர்க்கு
மறுகன்னத்தையும் காட்டிய

நாங்கள் மீண்டும் கருக்கொள்கின்றோம்
ஒரு அப்பாவித் தமிழிச்சியின்
கருப்பையிலிருந்து அல்ல
சிங்கபுரச் சிறைக்கூடங்களிலிருந்தே
பிறக்கப்போகிறோம்.
எமது ஆன்மத்தின் கனவிலிருந்து
புறப்படுகின்றது இந்தச்
சூறாவளிகளின் சுயம்.

போர்த் தளபாடங்களுடன்
படைமுகாம்களிலே
எமது மண்ணிலும்
சிறையுற்றுக் கிடக்கிறார்கள்
சிங்க வீரர்கள்.
அவர்களது சடலங்கள் வரட்டும்.
அப்பாவிகளைப்
புலியாய் மாற்றிய
அரசி (சு)க்கு அன்று
அனுப்புவோம் அனுதாபக் கடிதம்.

–அம்புலி.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# 'அவனுக்கு முன்னாலை நாங்களெல்லாம் சின்ன ஆக்கள்தான்'

அன்றைக்கென்னவோ அதிசயமாய் அப்புவை ஆலமரத்தடியில் காண வில்லை. நவமும் நண்பர்களும் நேரத்திற்கே வந்து ஆலமரத்தடியில் கூடியிருந்தனர். அவர்களின் முகங்களில் வழக்கமாகக் காணப் படும் அந்த உற்சாகம் வடிந்துபோயிருந்தது.

'என்னடா மச்சான் இப்பிடியே போனால் நிலைமை என்ன?' காந்தன் கவலை தோய்ந்த குரலில் கேட்டான்.

'என்னடா...சலிச்சுக்கொட்டுறாய்?'

குமரன் கேட்டான்.

'பின்ன என்ன மச்சான்... ஓயாத அலை மூண்டிலை பிடிச்ச இடங்களையெல்லாம் இப்பிடியே விட்டுக்கொண்டு போனா... என்ன செய்யிறது?'

அப்பு சாவகாசமாக வந்து சேர்ந்தார். வழக்கமான ஆரவாரங்களைக் காணாத அப்புவின் முகத்தில் வியப்புப் படர்ந்தது.

'என்னடா பொடியள்... ஆக்கள் இருக்கிற சிலமனே இல்லை. கப்பல் ஏதன் கவிண்டு போச்சோ?' கிழவர் கேலி பொங்கக் கேட்ட படி ஆலமரத்தடியில் உட்கார்ந்தார்.

'இல்லையப்பு... இவன் காந்தன்தான் ஏதோ சொல்லுறான். தென்மராட்சியிலை எங்கடை ஆக்கள் பிடிச்ச இடங்களிலை சிலதை ஆமிக்காரன் திரும்பவும் பிடிச்சுப்போட்டாங்களெல்லே... அப்ப நாங்கள் என்ன பல வீனப்பட்டுப் போயிட்டமா எண்டு அவனுக்கு ஒரே கவலை' பதிலளித்தான் நவம்.

'நீங்கள் மட்டும் இப்பிடி நினைக்கேல்லை... சிறிலங்காவின்ரை பிரதமர் தொடக்கம் அமைச்சர்மாரும் இப்பிடித்தான் நினைக்கினம். அப்பிடி எல்லாரின்ரையும் போக்கைத் திசை திருப்பி விடுறதுதான் தம்பியின்ரை நோக்கம்... எதிரி பலமானவனா பலமில்லாதவனா எண்டு திண்டாட விடவேணும், குழப்ப வேணும். அப்பத்தான் எதிரி எதிர்பாராத, நாங்கள் எதிர்பாக்கிற இராணுவ, அரசியல் வெற்றிகளைப் பெறமுடியும்' அப்புவின் அனுபவம் பேசியது.

'இப்பிடித்தான் முதல் ஜெயசுக்குறு விலையும் ஏ9 பாதையைத் திறக்கிறனெண்டு வெளிக்கிட்டு ஒண்டரை வருசமா அடிச்சுப் பிடிச்ச இடங்களை எங்கடை ஆக்கள் 5 நாட்களிலை பிடிச்சவை... அவைக்கு உதெல்லாம் சர்வசாதாரணம்' நவம் அப்புவை ஆமோதித்தான்.

'எப்பவும் இராணுவத் தாக்குதலைப் பற்றியே சிந்திச்சுக்கொண்டிருக்கக்கூடாது தம்பியவை. இராணுவ நகர்வுகளாலை செய்யமுடியாத சில விசயங்களைக்கூட அரசியல் நகர்வுகள் மூலமாச் செய்யமுடியும். அரசியல், இராணுவம் இரண்டிலையும் சமநிலை பேணப்படுகிறது முக்கியந்தான். ஆனா, சந்தர்ப்பத்துக்கேத்தபடி எது முக்கியமோ அதை முன்னிலைப்படுத்த வேணும். இராணுவத் தாக்குதலைத் தொடுத்து இடங்களைக் கைப்பற்றுறதாலை மட்டும் எங்கடை போராட்ட இலக்கை அடையலாமெண்டு நினைக்கிறது முட்டாள்த்தனம். தம்பி சரியான நேரத்திலை சரியான அரசியல் நகர்வை மேற்கொள்ளுறான் எண்டிறது என்ரை அபிப் பிராயம்' என்றார் கிழவர் .

'அப்பு சொல்லுறதுபோலை 99 நவம்பரிலை தொடங்கின ஓயாத அலைகள் இராணுவ நடவடிக்கை இந்நேரம் வன்னியை மீட்டுக் குடாநாட்டை நோக்கி நகர ஆரம் பிச்சுது. அதேபோலை நவம்பர் 2000திலை தொடங்கின அரசியல் அலை ஐரோப்பா, அமெரிக்கா எண்டு எல்லா இடமும் அடிக்குது' நவம் அப்புவின் கருத்துக்குத் தலை யசைத்தான்.

'இவள் சண்டாளி 95ஆம் ஆண்டிலை சமாதான தேவதை வேசம் போட்டு உலகத்தையும், எங்கடை சனத்தையும் ஏமாத்தினாள். பிறகு புலியள் பயங்கரவாதியள் அவையளோடை பேச முடியாது எண்டு சொல்லிச் சொல்லியே சமாதானத்துக்கான யுத்தம் எண்ட கொடூரமான யுத்தத்தை எங்கடை சனத்துக்கெதிரா அஞ்சாறு வருசமாத் தங்கு தடையில்லாமச் செய்தாள்' மேலே ஏதோ ஆவேசமாகப் பேச முற்பட்ட அப்புவைத் தடுத்தான் குணம்.

'இது இப்ப நோர்வேப் பேச்சுவார்த்தை மாதிரி முக்கியமான விசயம்! அப்பு சொல்லுறதைக் கேளுங்கோடா' நவம் கண்டித்தான்.

'அவள் சந்திரிகாவின்ரை பொய் அரசியலின்ரை முகமூடி இப்ப டபாரெண்டு கிழிஞ்சு தொங்குது. இவ்வளவு நாளும் உவ சின்னப் பிள்ளையளுக்குப் பேய்க்கதை சொன்னது மாதிரி விடுதலைப் புலியள் பயங்கரவாதியள் எண்டு அண்டப்புளுகு ஆகாசப்புளுகு எல்லாம் அவிட்டு விட்டுக்கொண்டிருந்தா. அந்தக் கதையளை நம்பித்தான் உலக நாடுகளும் ஆயுதங்களை அள்ளி அள்ளிக் குடுத்துதுகள். அது மட்டுமே எங்கடை சனம் ஊர் திரண்டு இடம்பெயர்ந்து போனபோதுகூட ஏனெண்டு கேட்கேல்லை. இன்னும் இன்னும் காசை அள்ளிக்குடுத்து எங்கடை அழிவுக்குக் கைகுடுத்தது உலக நாடுகள். ஆனா... எங்கடை பிள்ளையள் வன்னி நிலங்களையெல்லாம் மீட்டுக்கொண்டு யாழ்ப்பாண வாசலிலை வந்துநிண்டு, அந்த நிலத்தை மீட்கப் போகேக்குள்ளை எங்கெங்கையோ வெல்லாம் இருந்து எத்தினையோ நாடுகள் ஒரே கோரசா அரசாங்கத்துக்கு ஆதரவாகக் குரல் குடுத்திச்சுதுகள். சந்திரிகாவின்ர அவலக்குரல் வல்லரசு நாடுகள் உட்பட பல நாடுகளுக்குக் கேட்டுது. அஞ்சு வருசத்துக்கு முதல் அஞ்சு லட்சம் மக்களின்ரை அவலக் குரல் கேட்காமப் போச்சு... ஆனா, ஒரு ஒற்றைக்குரல், சந்திரிகாவின்ர குரல் அஞ்சு வருசத்துக்குப் பிறகு கேட்டுது.... அதுக்குக் காரணம் என்ன?'

நவமும் நண்பர்களும் அந்த அவல நினைவில் தோய்ந்தபடி அப்புவின் பேச்சை ஆழமாகச் செவிமடுத்தனர். அப்பு சொன்னார். 'இதுதான் அரசியல்!'

'இந்தப் பொய் அரசியல் திரையைக் கிழிக்க வேணும்' அதைத்தான் இப்ப தம்பி செய்யிறான்'

நவமும் நண்பர்களும் ஒருவருக்கொருவர் பொருள் பொதிந்த பார்வைகளைப் பரிமாறிக்கொண்டனர். பின் நவம் தயக்கத்தோடு கேட்டான். 'அது சரியப்பு... ஆமிக்காரரெல்லே எங்கடை இடங்களைத் திருப் பிப் பிடிக்கிறாங்கள்....'

'அவசரப்படாதை பொடியா.... உன்ரை கேள்விக்கு வரலாற்றிலையே பதில் இருக்குது... எங்கடை புலியள் யாழ்ப்பாணத்திலை இருந்து தற்காலிகமா பின்வாங்கிச்சினம். பிறகு ஜெயசுக்குறு நடவடிக்கை மூலமா மாங்குளத்தைக்கூட ஆமி பிடிச்சுது. அப்ப ரத்வத்தை என்ன சொன்னவர் நினைவிருக்கே... 80 வீதமான புலிகளை அழிச்சுப் போட்டம் எண்டு சொன்னார்.... அதை உலகமும் அப்ப நம்பிச்சுது. அப்ப புலிகளிட்டை பெரிசா பிரதேசங்களும் இருக்கேல்லை. உலக மட்டத்திலை அரசியல் செல்வாக்கும் இருக்கேல்லை. ஆனால், சிறீலங்கா அரசாங்கத்திட்டை இந்த ரெண்டும் இருந்துது. காத்திருந்து தக்க தருணம் பாத்து புலிகள் அடிச்சிச்சினம். யுத்த அலை மாறி அடிச்சுது. சிறீலங்கா அரசாங்கத்தாலை நிண்டுபிடிக்க முடியேல்லை. இப்ப எங்கடை பிள்ளையளிட்டை போதிய இராணுவ பலம் இருக்குது. அதேபோலை சர்வதேச பலமும் பெருக வேணும். அதிலைதான் இப்ப கவனம் செலுத்துகினம்' கிழவர் சொன்னார்.

'முதல்லை சிறீலங்கா அரசாங்கம் பிள்ளைப்பூச்சி, ஒண்டுமே தெரியாத அப்பாவி நினைச்சா அந்த நினைப்பை மாற்றவேணும் எண்டு சொல்லுறியள். அதுகின்ரை கோர முகத்தை எல்லாரும் பார்க்கும்படியாச் செய்ய வேணும். அப்பிடிச் செய்யிறதன் மூலம் சிறீலங்காவுக்கு வெளிநாடுகள் வழங்கிற உதவிகள் நிறுத்தப்படும். அப்பிடி நிறுத்தப்பட்டால் ஆக்கிரமிப்பு இராணுவத்தின்ரை இராணுவ நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படும். எங்களாலை மீட்கப்பட்ட பிரதேசங்களும் எங்கடை வசமே இருக்க, இது உதவி செய்யும் எண்டிறதோடை மேலும் பிரதேசங்களை மீட்கவும் இந்த நிலைமை உதவி செய்யும். அது மட்டுமே பொருளாதார உதவிகள் மறுக்கப்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

படும்போது, சிறீலங்காவின்ரை பொருளாதாரம் கீழ்நோக்கிப் போகும். அது அரசை ஈடாடச் செய்யும். ஸ்திரத்தன்மை இல்லாத அரசாங்கம் எத்தினை நாளைக்கு நிண்டு பிடிக்கும்.... அங்காலை பலவீனப்பட நாங்கள் மேலும் மேலும் பலம் பெறுவோம். அப்பிடித்தானேயப்பு?' நவம் கேட்டான்.

'டேய்.... நீ அப்புவோடை சேந்து நல்ல அரசியல் தெளிவோடை கதைக்கப் பழகீட்டாய். கையிலை ஒரு சுருட்டும் தந்தால் அப்புவின்ர அசல் வாரிசுதான்'

'இப்பதான் பொடியள் உங்களுக்கும் கொஞ்சம் நிலைமையள் விளங்குது... இப்ப சிறீலங்கா முழி பிதுங்கிப்போய் நிக்குது. எங்கடையாக்கள் பேச்சுவார்த்தைக்கு ஓமெண்டது மட்டுமில்லாம, ஒருதலைப்பட்சயுத்தநிறுத்தத்தையும் அறிவிச்சது அவைக்குப் பெரிய தலையிடியாப் போச்சு. பேச்சுவார்த்தைக்குப் போனா பௌத்த சிங்கள இனவாதம் கத்தும். போகாட்டி வெளிநாடுகளிலை சிறீலங்கா 'சமதர்ம' அரசாங்கம் எண்டுபோட்ட முகமூடி கிழிஞ்சுபோகும். என்ன செய்யிறதெண்டு தெரியாமல் ஆப்பிமுத்த என்னவோ மாதிரி அகப்பட்டுக்கொண்டாள் பொடிச்சி. அவைக்கு நிலைமையள் சாதகமா இல்லை எண்டு காட்ட பாரீஸிலை நடந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின்ரை மாநாட்டிலை பெருமளவு நிதி கிடைக்காமல் போனது ஒண்டே போதும்' அப்பு பொக்கை வாயால் சிரித்தார்.

'நிலைமையள் இப்பிடி எல்லா வளத்தாலையும் தங்களுக்குப் பாதகம் எண்டு தெரிஞ்சோடனை என்ன சொல்லுகினம் தெரியுமே... புலியள் பலவீனப்பட்டுப் போச்சினம். அதுதான் பேச்சுவார்த்தை, யுத்தநிறுத்தம் எண்டு நிக்கினம் எண்டு சொல்லித் தங்களைத் தாங்களே திருப்திப்படுத்திக் கொள்ளுகினம்' குணம் கிண்டலடித்தான்.

'நல்லாய்ச் சொன்னாய் குணம்... எங்களுக்கே ஒரு விஷயம் விளங்கேல்லை. சில இடங்களிலை புலியள் ஏன் ஒரு எதிர்ப்பையும் காட்டாமல் பின்வாங்குகினம் எண்டு' குமரன் இன்னமும் குழப்பத்தில் இருந்தான்.

'டேய் விசர்ப்பொடியா...! இதுவும் எங்கடை ஆக்களின்ரை ஒரு தந்திரமெண்டு நினையடா... இப்பிடி பலமாயிருந்து போட்டுத் திடீரெண்டு பதுங்கிறதிலை ஏதோ விசயம் இருக்கெண்டு விளங்கேல்லையேடா... மற்றதடா பொடி முந்தி பிரச்சாரத்தையே நம்பி யுத்தம் செய்த ரத்வத்தை இப்ப என்ன சொல்லுறாரெண்டு கேள். இப்ப புலியள் போர் நிறுத்தத்தை அறிவிச்சதாலை வெளிநாடுகளிலை புலியளைப் பற்றின மதிப்பு மேலோங்கி இருக்கலாம். ஆனா அதைவிட இப்ப பிரதேசங்களைக் கைப்பற்றுறதுதான் முக்கியம் எண்டு ரத்வத்தை ஐயா சொல்லுகிறார். ஆனால், உண்மை நிலைமை என்னவெண்டால், இண்டைக்கு இராணுவ வளம் நிரந்தரமா இருக்க வேணுமெண்டால் உண்மையான சர்வதேச அரசியல் ஆதரவு அவசியம். இந்த சர்வதேச அரசியல் ஆதரவிலை கூடுதலாக எங்கடை ஆக்கள் கவனஞ் செலுத்துகினம். அதுக்காக பிரதேசங்களிலை இருக்கிற கவனத்தை அப்பிடியே கைவிட்டாச்சு எண்டு அர்த்தமில்லை. இப்பகூட குடாநாடு புலிகளின்ரை முற்றுகைக்குள்ளைதான் இருக்குது. இராணுவ கேந்திர முக்கிய நிலையங்களான கிளாலி, எழுதுமட்டுவாள், நாகர்கோவில் பகுதியள் புலிகளின்ரை முற்றுகைக்குள்ளைதான் இருக்குதுகள்' அப்பு சளைக்காது சொன்னார்.


'அப்ப கெதியா அடி இருக்குதெண்டிறியள்?' குமரன் ஆவலோடு கேட்டான்.

'சமாதான முயற்சிக்கு சிறீலங்கா உடன்படாவிடில் எந்தநேரத்திலையும் தென்மராட்சி நோக்கியோ, வடமராட்சி நோக்கியோ அல்லது குடாநாட்டின்ரை முக்கிய இராணுவ நிலையள் நோக்கியோ புலி பாயக்கூடும். குடாநாட்டு இராணுவத்தின்ரை இருப்பையே கேள்விக்குறியாக்கக்கூடிய இராணுவ சமநிலையிலைதான் எங்கடையாக்கள் இருக்கினம் எண்டு நான் மட்டும் சொல்லேல்லை... இராணுவ ஆய்வாளர்கள்கூடச் சொல்லுகினம் கண்டியளே... தம்பி ஒருகாலமும் செய்யிறதுக்கு முதல் சொன்னதில்லை. இந்தமுறை மாவீரர் உரையிலை ஒரு விசயம் வலியுறுத்திச் சொன்னது கேட்டனியே.... என்ன இடர்வரினும் யாழ்ப்பாணத்தை மீட்டே தீருவோமெண்டு தம்பி சொல்லியிருக்கிறான். அதாலை புயலுக்கு முந்தின அமைதியையே புலியள் கடைப்பிடிக்கிறதா என்ரை மனம் சொல்லுது' அப்பு கூறினார்.

'அப்பு நோர்வே தூதுவர் திரும்பவும் வன்னிக்கு வரப் போறாராம்?' குணம் கேட்டான்.

'ஓம்டா தம்பி! போர்நிறுத்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாமப் போனாலும் சர்வதேச மட்டத்திலை அது ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கு. அதாலைதான் நோர்வே தூதுவர் திரும்பவும் வன்னிக்கு வாறார். இந்தப் பேச்சுவார்த்தை முயற்சிகள்தான் சர்வதேச அங்கீகாரத்துக்கான முதற்படி. எங்கடை ஆக்களின்ரை இந்தப் போர்நிறுத்தம் சர்வதேச அரசியலிலை ஒரு புதிய அத்தியாயத்தை எழுதியிருக்கு கண்டியளோ'என்றவாறு அப்பு மண்ணைத் தொட்டு வணங்கிவிட்டு எழுந்தார்.

செவிவளைந்தான் ஆலமரத்தை ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு எடுத்தது ஓட்டம். நவமும் நண்பர்களும் எழுந்து அவரவர் திசைகளில் நடந்தார்கள்.






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# அபோறிஜின்ஸ் அவுஸ்திரேலியாவின் ஆதிக் குடிகள்

**-அனித்தா**

அபோறிஜின்கள் (Aborigins) என்பதற்கு World Book அகராதியில் 'தேசத்தின் உண்மையான மூத்த குடிகள்' என்று பொருள் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பதமானது இன்று அவுஸ்திரேலியர்களால் அங்கு வாழும் ஆதிக் குடிகளைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது. இங்கு வாழும் அபோறிஜின் மக்களிற் சிலர் தம்மை கூரிஸ் (Koories) எனவும் அழைத்துக் கொள்வர். 1788 தையில் முதன் முதலாக பிரித்தானிய வெள்ளையினம் அவுஸ்திரேலியாவில் கால் பதித்த ஆரம்பத்தில் இவர்கள் பூர்வீக மக்கள்(Natives) என அழைக்கப்பட்டனர். 1840களின் பின்னரே அவர்கள் அபோறிஜின்கள் எனக் குறிப்பிடப்பட்டனர்.

அவுஸ்திரேலியாவானது 1901ஆம் ஆண்டு புதிய தேசமாக புதிய கொடியோடு பிறப்பெடுத்தது. அப்போது அவுஸ்திரேலிய வெள்ளையர் அரசினால் வரையப்பட்ட அரசியல் யாப்பில் அவுஸ்திரேலியாவின் மூத்த குடிமக்களான அபோறிஜின்ஸ் சம்மந்தப்பட்ட எதுவுமே குறிப்பிடப்படவில்லை. 'தொடக்கமானவர்கள்' எனும் பொருளில் அபோறிஜின்ஸ் என அழைக்கப்பட்டு வந்த பூர்வகுடிமக்கள் அழிக்கப்பட வேண்டிய இனமாகக் கருதப்பட்டு அவர்கள் மீது பிந்தி வந்த வெள்ளையர்களால் நிறுவனமயப்படுத்தப்பட்ட இனப்பிரிப்புச் சட்டங்கள் பிரயோகிக்கப்பட்டன.

ஆனால் 1920களில் அபோறிஜின் மக்கள் தமது உரிமைக்காகவும், ATSI (Aboriginal and Torres Strait islanders) மக்களாகத் தம்மை அங்கீகரிக்கவும் கோரினர். அன்றைய வெள்ளையர் சமூகத்தால் தொந்தரவானவர்களாகவும், அருவருப்பு மிக்கவர்களாகவும் நோக்கப்பட்டனர். 1950களில் வந்த இணைப்பு அரசாங்கம் அபோறிஜின்ஸ் மீதான இனவெறிக் கொள்கைகளை பிரயோகிக்காத போதிலும் அரசமைப்புரீதியாக எதுவித உரிமையும் வழங்கப்படவில்லை. 1967இல் நடைபெற்ற சர்வசன வாக்குரிமையை அடுத்து சிறிய கண்டத்தின் மூத்த குடிகளுக்கு சுயநிர்ணயம் சார்ந்த சுயநிர்வாகம் வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அபோறிஜின்களின் கலாச்சாரம் 1992இல் அவுஸ்திரேலிய உச்சநீதிமன்ற மேபோ-2 சட்டத்திருத்தத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டது. இருந்தபோதிலும் அபோறிஜின் மக்கள் தடுப்புக்காவலில் வைத்துக் கொல்லப்பட்ட கொடூரங்களும் திருடப்பட்ட சந்ததிகளுமாக உள்ள அவர்களது அவலம் மீள புனரமைக்கக்கூடியது அல்ல.

கடந்த இரு நூற்றாண்டுகளுக்கு மேலாக அபோறிஜின்ஸ் பூர்வகுடி மக்கள் இனங்களை ஒன்றுபடுத்தல் அல்லது கலத்தல்(assimilation) என்ற பெயரில் தமது குடும்பங்களில் இருந்து பிரிக்கப்பட்டனர். இவர்களை மனிதாபிமானத்துடன் நடத்த அவுஸ்திரேலிய வெள்ளையினத்தவர் தவறிவிட்டனர்.

ஆயிரக்கணக்கான அவுஸ்திரேலிய பூர்வகுடிகளின் குழந்தைகள் இவ்வாறு பிரித்தெடுக்கப்பட்டனர். வரலாற்றாசிரியர்களின் கணிப்பின்படி 1910ற்கும்-1972ற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மாத்திரம் அபோறிஜின்ஸ்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

குழந்தைகளில் பத்தில் ஒருவர் அவர்களின் குடும்பத்திடமிருந்து அவுஸ்திரேலிய அரச தரப்பால் வலுக்கட்டாயமாக பிரிக்கப்பட்டிருப்பர். அரசின் இனக்கலப்புக் கொள்கைகளின்படி அக்குழந்தைகளுக்கு வெள்ளையர்களின் நாகரீகக் கல்வியையும் புகுத்தி அவர்களின் தனித்தன்மையை இல்லாமற் செய்வதே நோக்கமாக இருந்தது.

இவ்வாறு தனிக்கப்பட்ட அபோறிஜின்கள் சிதைக்கப்பட்ட பரம்பரையின் கலைந்துபோன எச்சங்களாக அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகின்றனர். இந்தச் சந்ததியின் வாழ்வு கண்ணீர் நிறைந்தது. எண்ணிறைந்த துன்பங்கள் சூழ்ந்தது. பாலியல் துன்புறுத்தல்கள், தமது அடையாளத்தை இழந்தமை, குரோத மனப்பான்மையுடன் வெள்ளை நிற அவுஸ்திரேலியர்களால் நோக்கப்படுதல் இவ்வாறு இன்றும் பல வழிகளில் ஒடுக்கப்பட்டே வாழ்கிறார்கள் இந்தக் கங்காருக் கண்டத்தின் மைந்தர்கள்.

இவற்றுக்கெல்லாம் இனவாத வேர்களினால் திட்டமிடப்பட்டு தவறுதலாக வழிநடத்தப்பட்ட வெள்ளை அரசுகளின் கொள்கைகளே காரணம். இன்று இவற்றிற்கு எல்லாம் பிராயச்சித்தம் என்பது சாத்தியமே இல்லாமற் போய்விட்டது. வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு கடந்த வருடம் மே மாதம் சிட்னி துறைமுகப் பாலத்தடியில் கூடிய இரண்டு லட்சம் மக்கள் அபோறிஜின்களுக்காக நீதி கேட்டனர். கடந்த ஜுலை மாதத்தில் ஐ.நா மனித உரிமைகள் அமைப்பு தற்போதைய அவுஸ்திரேலிய அரசு இனஒன்றிப்புக் கொள்கைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு போதிய நியாயப்பாட்டினை வழங்கவில்லை எனக் குற்றஞ்சாட்டியுள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதம் முன்னாள் பிரதமர் மல்கம் பிறேசர் தமது உரையில் "அபோறிஜின்களின் உரிமைகளை பாதுகாப்பதில் இருந்து தவறிவிட்டோம்" என்றார். அத்தோடு பிரிக்கப்பட்ட அபோறிஜின் சந்ததிக்களுக்காக அவுஸ்திரேலிய அரசு தேசிய மன்னிப்புக் கோர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். ஆனால் பழமைவாதக் கட்சியின் பிரதமரான ஜோன் கோவாட் அதற்கு மன்னிப்புக் கேட்க மறுத்துவிட்டார். பெருந்தொகையான அவுஸ்திரேலியர்களும் அவருக்குப் பின்னால் உள்ளனர்.

ஆனால் அவுஸ்திரேலியாவின் அபோறிஜின்களின் அவலம் உலகிற்கு சிட்னி ஒலிம்பிக்கின் போது வெளிப்படுத்தப்பட்டது. அபோறிஜின்கள் ஒலிம்பிக் போட்டிகளின்போது போராட்டங்களை மேற்கொள்ளப் போவதாகப் பயமுறுத்தினர். அவுஸ்திரேலியாவின் அமுங்கியிருந்த அசிங்க முகமான பிரிக்கப்பட்ட சந்ததிகளின் விடயம் இறுதியில் வெளியுலகிற்கு வந்துவிட்டது.

உலகின் 6வது பெரிய நாடான அவுஸ்திரேலியா தென்கோளத்தின் நித்திலமாக விளங்குகின்றது. உலக அரிய மிருகங்களில் ஒன்றான கங்காருவிற்கு பெயர்போன நாட்டின் ஆதிக்குடிகளான அபோறிஜின்கள்



பிரிக்கப்பட்ட அபோறிஜின் குழந்தைகள் மிசனறி ஒன்றில் 1930களில் எடுக்கப்பட்ட புகழ் பெற்ற நிழற்படம்

அவுஸ்திரேலியாவிலே உருவானார்கள் வாழ்ந்தார்கள் என்று அபோறிஜினியப் பழங்குடிகளின் மூதாதையர்கள் கூறுகின்றனர். ஆனால் பெரும்பாலான மனித இன ஆராய்ச்சியாளர்கள், அபோறிஜின்ஸ் தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளில் இருந்து வந்ததாகக் கூறுகின்றார்கள். ஆழம் குறைந்த கடற்பகுதிகளுக்கூடாக அவர்கள் அவுஸ்திரேலியாவை வந்தடைந்ததாக ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இன்னும் சிலரோ அபோறிஜின்ஸ் 50000 வருடங்களுக்கு முன்னர் மனுக்குலம் தோன்றிய காலத்திலேயே அவுஸ்திரேலியாவில் வாழ்ந்ததாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால் அபோறிஜின்ஸ் பேசும் மொழிகளில் உள்ள சொற்களுக்கும் திராவிடக் குடும்பத்தின் முதன் மொழியாகிய தமிழிற்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாக மொழியியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். இதிலிருந்து தமிழர்களின் மூதாதையர்களும் அபோறிஜின்களின் மூதாதையர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

அபோறிஜின்களின் விவசாயம் தமிழர்கள் பண்டைய நாட்களில் மேற்கொண்ட காடுகளை எரித்துப் பயிரிடும் முறையான சேனைப்பயிற்செய்கை முறையினை ஒத்ததாக உள்ளது. மீன்பிடிப்பதிலும், வேட்டையாடுதலையும் தமது ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டுள்ளனர். அதுமாத்திரமின்றி பூமராங் எனப்படும் முறைசாரா தாக்குதல் கருவியையும் இவர்களே முதன் முதலில் பயன்படுத்தினர். அபோறிஜின்ஸ் மிகவும் தேர்ச்சி பெற்ற வேட்டைக்காரர்களாக உள்ளனர். தமது வேட்டைக்கு உரிய உபகரணங்களை இயற்கைப் பொருட்களில் இருந்தே பயன்படுத்துவர்.

அவர்கள் தமது வரலாறுகளை குகைகளில் ஓவியங்களாக பதிந்து வைத்துள்ளனர். தெற்கு அவுஸ்திரேலியாவில் காணப்படும் குகையொன்றில் கி.மு 18000 வருடங்களுக்கு முந்திய ஓவியங்கள் ஆய்வாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவர்கள் இறந்தவர் ஆவியாய் மீள வருவார் என நம்பினர். அதை தமது பரம்பரைத் தெய்வங்களாக மரங்களை, விலங்குகளை வணங்கினர். இன்றுகூட அபோறிஜின்களின் புனிதச் சின்னமாக உலகின் பெரிய பாறையான உலறு ( Ayers Rock அதிகாரபூர்வ பெயர் இதன் நீளம் 1.5 மைல்கள், 1000 அடி உயரம்) விளங்குகின்றது.

1788இல் பிரித்தானியக் குடியேற்றம் அவுஸ்திரேலியாவில் ஆரம்பமாகிய வேளையில். அபோறிஜின்களின் எண்ணிக்கை 300,000 ஆக இருந்தது. அவர்களிடையே 200 வகையான பேச்சு மொழிகள் விளங்கின. வெள்ளையர்கள் குடியேறிய ஒரு நூற்றாண்டு காலப்பகுதிக்குள் அபோறிஜின்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அபோறிஜின்களை அழிப்பதன் மூலம் தமது உரிமையைப் பலப்படுத்த வெள்ளையர்கள் பெருமெடுப்பில் முயற்சிகளை மேற்கொண்டனர். மூத்த குடிகள் இடையே நோய்கள் பரப்பப்பட்டன, அவர்களுக்கு பிழையான சிகிச்சைகள், வழங்கப்பட்டன, அவர்களிடையே என்றுமில்லாதவாறு சமூக கலாச்சார சீரழிவுகள் புகுத்தப்பட்டன. இதன் விளைவாக 1920இல் அபோறிஜின்களின் எண்ணிக்கை 60, 000 ஆகியது.

இன்று அபோறிஜின்களுக்கென பாரம்பரிய நிலச் சபைகள் உள்ளன. இன்று படிப்படியாக அவர்களுடைய கலை கலாச்சாரம் இலக்கியம், ஓவியம் என்பன சர்வதேச சமூகத்தை எட்டத் தொடங்கியுள்ளன. ஆனால் அவுஸ்திரேலிய மூத்த குடிகள் பிந்தி வந்த வெள்ளையர்களால் சிதைக்கப்பட்டு இன்று அவுஸ்திரேலியாவின் கண்காட்சிப் பொருளாகிப் போயுள்ளனர். அபோறிஜின்கள் 1970 வரை அவுஸ்திரேலிய அரசின் சனத்தொகைக் கணக்கெடுப்பில் உள்ளடக்கப்படவில்லை. என்றால் அவர்களை மிக அண்மைக்காலம் வரை அவுஸ்திரேலியர்கள் ஒரு பொருட்டாகக் கருதவில்லை என்பது விளங்குகின்றதல்லவா.

ஒரு கண்டத்தின் மூத்த குடிகள் தமது சுயாதிபத்தியத்தை இழந்து இன்று நடைப்பிணங்களாக வாழ்கின்றனர் என்றால் மிகையில்லை.


www.tamileelamarchive.com

**ஈழத்தமிழர் மீதான அரசியல் வன்முறைகள் இனக்கலவரங்களாகவே முதலில் கட்டவிழ்த்து விடப்பட்டன. 1956—58 காலப்பகுதியில் நிகழ்த்தப்பட்ட இனக்கலவரநிகழ்வைச் சித்தரிக்கிறது இந்தக்கதை. தொடர்ந்து 71,77,81,83 ஆம் ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்ட இனக்கலவரங்களையும் இது நினைவூட்டக்கூடியது.**

மாலை நாலரைமணி, பிள்ளையார் கோவில் கணபதி ஐயர் வீட்டின் முன்விறாந்தையிலே மூர்த்தி மாஸ்டரும் ஐயரும் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். எங்கெல்லாமோ சுற்றிவந்து கடைசியில் இலக்கிய உலகத்திலே புகுந்தார்கள்.

'மாஸ்டர் நீங்கள், 'கலைச்செல்வியை'த் தொடர்ந்து படித்து வருகிறீர்களோ?' என்று கேட்டார் ஐயர்.

'ஓமோம், ஆரம்பத்திலே இருந்து பார்த்து வருகிறேன். ஆனால் எல்லாவிடயங்களையும் படிக்கிறேனென்று சொல்ல முடியாது. ஏன் என்ன விசேசம்?'

'கலைச்செல்வி, பழைய பிரதி ஒன்றை இன்றுதான் தற்செயலாகப் படித்துப் பார்த்தேன். அதிலே ஒரு சிறுகதை'

'யார் எழுதியது?'

'எழுதியவர் பெயரைக் கவனிக்கவில்லை. அந்தச் சம்பவந்தான் மனதை உறுத்திக் கொண்டிருக்கிறது'

'சொல்லுங்கள் நினைவு வருகிறதா பார்க்கலாம்'

'மூன்றாம் வருடம் இலங்கையில் பெருவெள்ளம் ஏற்பட்டதல்லவா, அந்தச் சூழ்நிலையை வைத்துக் கதை எழுதப்பட்டிருக்கிறது. குளக்கட்டை உடைத்துக்கொண்டு ஒரு கிராமத்துக்குள் வெள்ளம் பெருகி வருகின்றது, சனங்கள் உயரமான இடத்தைத் தேடி ஓடுகிறார்கள். அந்த ஊரின் பணக்காரனின் வீட்டுக்கு 'மேல் வீடு'ம் இருக்கிறது, அங்கே அவன் தனியாக இருக்கிறான், வெள்ளத்துக்கு அஞ்சி ஏழைப் பெண்-இளம்பெண் அந்த மேல் வீட்டுக்குச் செல்கிறாள், பணக்காரன் அவளைப் பதம்பார்க்க முயல்கிறான், அவள் இசையவில்லை, அவன் பலாத்காரம் செய்தேனும் அவளை அடைந்துவிடத் துணிந்துவிட்டான். அவள் உயிரைவிட கற்பையே பெரிதாக மதிப்பவள். மேல்வீட்டிலிருந்து குதித்து உயிரைத் துறந்தாள். கற்பைக் காப்பாற்றிக் கொண்டாள்- இந்தக் கதையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் மாஸ்டர்'

'என்ன நினைக்கிறது? புராண காலத்திலிருந்து திரும்பிப் திரும்பிப் படித்த 'கருத்து'த்தான். கதையை அமைத்த முறையிலும். வசன நடையின் துடிதுடிப்பிலுந்தான் இந்தக் கதைக்கு வாழ்வு கிடைக்கும். நான் படிக்கவில்லை, படித்தாத்தான் அதைப்பற்றிச் சொல்லலாம்'

'நான் கதைக்கு விமர்சனம் கேட்கவில்லை மாஸ்டர்.

# கற்பு

-வரதர்-

புராணகாலத்திலிருந்து படித்ததாகத்தான் சொன்னீங்களே. அந்தக் 'கருத்தை'ப் பற்றித்தான் உங்கள் அபிப்பிராயம் என்ன என்று கேட்கிறேன்'

'எதைக் கேட்கிறீர்கள் ஐயா? தனது கற்பைக் காப்பாற்ற உயிரைத் துறந்தாளே, அதைப்பற்றியா?'

'ஓமோம், அதையேதான்'

ஒரு பெண்ணின்-முக்கியமாகத் தமிழ்ப்பெண்ணின் சிறப்பே அதில் தானே இருக்கிறது, மானம் இழந்த பின் வாழாமை இனி தென்பதெல்லவா தமிழன் கொள்கை?' ஐயர் பெருமுச்சு விட்டார். பிறகு 'நீங்களும் இப்படிச் சொல்கிறீர்களா?' என்று கேட்டார்.

மூர்த்தி மாஸ்டர் திகைத்தார். தான் என்ன தவறுதலாகச் சொல்லிவிட்டாரா? இந்த ஐயர் என்ன இப்படிக் கேட்கிறார்?

ஒரு நிமிட நேரம் மௌனம் நிலவிற்று. ஏதோ எண்ணித் துணிந்துவிட்டவர் போல கணபதி ஐயரே மீண்டும் மௌனத்தைக் கலைத்தார்.

'மாஸ்டர் எனக்கும் என் மனைவிக்கும் மட்டும் தெரிந்த இரகசியத்தை உங்களுக்குச் சொல்லப் போறன்- உங்களுக்குச் சொல்லலாம், சொல்வதால் ஒரு தீமையும் ஏற்படாது. இதைக் கேட்டபிறகு 'கற்பு'ப் பிரச்சனைபற்றி பேசுவோம்'

'போன வருசம் பெரியந்தனை முருகமூர்த்தி கோயிலில் நான் பூசை செய்து கொண்டிருந்தது உங்களுக்குத் தெரியும். அங்கே தமிழர்கள் ஐம்பது பேர்கூட இருக்காது. விசேட தினங்களுக்கு மட்டும் பிற இடங்களிலிருந்தெல்லாம் வந்து கூடுவார்கள். சிங்களவர் கூடப் பலர் கோவிலுக்கு அந்து அர்ச்சனை செய்விப்பது வழக்கம்

சிங்களவர்-தமிழர் கலகம் துவங்கியவுடனே அங்கிருந்த தமிழர்களில் முக்கால்வாசிப் பேரும் யாழ்ப்பாணத்திற்கு ஓடிவந்து விட்டார்கள். நான் பூசையயை விட்டு விட்டு எப்படிப் போகமுடியும்? என் மனைவியைப் போகும்படி சொன்னேன். எனக்கும் வருவது தனக்கும் வரட்டுமென்று அவள் மறுத்துவிட்டாள். சிங்களவரும் அக்கோயிலிலே கும்பிட வரும் வழக்கம் இருந்ததால் கோயில் விசயத்தில் தலையிட மாட்டார்கள். எங்களுக்கும் ஆபத்து நேராது என்ற துணிவில், அவளை மேலும் வற்புறுத்தாமல் விட்டுவிட்டேன்'

ஒரு புதன்கிழமை அன்று பேபிநோனா என்ற சிங்களக்கிழவி- அவள் எங்களோடு நன்கு பழகியவள். கோவிலுக்கும் நாள் தவறாமல் வருகிறவள்- அவள் சொன்னாள். 'நீங்கள் இனி இங்கேயே இருப்பது புத்தியில்லை ஐயா. காலியிலிருந்து சில முரடர்கள் மூன்று லொறிகளில் வந்திருக்கிறார்களாம். வருகிறவழியெல்லாம் தமிழர்களை இல்லாத கொடுமை செய்கிறார்கள். இன்றிரவோ நாளையோ இந்தப் பக்கம் வரக்கூடுமென்று கதைக்கிறார்கள். நீங்கள் இப்போதே புறப்பட்டு பொலிஸ் ஸ்டேசனுக்கு போய்விடுங்கள். பிறகு பொலிஸ் துணையோடு கொழும்புக்குச் செல்லலாம்' என்றாள்

அவள் சொன்னதைக் கேட்ட பிறகு 'அப்பனே முருகா! என்னை மன்னித்துக் கொள்' என்று மனதுக்குள் வேண்டிக் கொண்டு கையோடு கொண்டு போகக்கூடிய பொருட்களை இரண்டு பெட்டிக்குள் சேகரித்தோம். என் மனைவியின் நகைகளையும்-நூலில் கட்டிய தாலியொன்றைத் தவிர-எல்லாவற்றையும் கழற்றிப் பெட்டியில் பூட்டினோம். இந்த ஆயத்தங்கள் செய்வதற்குள் மணி ஐந்தாகிவிட்டது. நாங்களும் புறப்பட ஆயத்தமானபோது பேபிநோனா அவசரம் அவசரமாக ஓடிவந்தாள். 'ஐயா, ஐயா, சில்வாவும் இரண்டுபேருமாக வாறாங்கள். அம்மாவை அவங்கள் கண்ணில் படாமல் எங்கையாவது ஒழிந்திருக்கச் சொல்லுங்கோ, கேட்டால் நேற்றே ஊருக்குப் போய்விட்டா என்று சொல்லுங்கோ நான் இங்கே நின்றால்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எனக்கும் ஆபத்து, உங்களுக்கும் ஆபத்து, கவனம் ஐயா' என்று சொல்லிவிட்டு பேபிநோனா ஓடி மறைந்துவிட்டாள்.

சில்வாவை எனக்குத் தெரியும், ஆள் ஒருமாதிரி. 'ஐயா, ஐயா' என்று நாய் மாதிரி குழைந்து ஐம்பது சதம், ஒரு ரூபா என்று இடைக்கிடை என்னிடம் வாங்கியிருக்கிறான். ஆள் காடைத் தரவளியாதலால் நானும் பட்டும் படாமலும் நடந்து வந்திருக்கிறேன். இரண்டொரு நாள் என் மனைவியை றோட்டில் தனியாகக் கண்டபோது அவனுடைய பார்வையும் சிரிப்பும் நன்றாக இருக்கவில்லையென்று அவள் சொல்லியதுண்டு.

இப்போது அவன் வருகிறானென்றால்-

எனக்கு ஒருகணம் ஒன்றும் தோன்றவில்லை-யோசிக்கவும் நேரமில்லை-வீட்டுக்குள் பரண்மாதிரி மூன்று மரங்களைப் போட்டு அதன் மேல் சில பழைய பெட்டிகளைப் போட்டிருந்தது. என் மனைவியை நான் தூக்கி அந்த மரங்களின் மேல் விட்டு மெதுவாக அந்தப் பெட்டிகளின் பின்னால் மறைந்து இருக்கும்படி விட்டேன். பிறகு எங்கள் பயணப் பெட்டிகளை எடுத்துச் சற்று மறைவாக ஒரு மூலையில் வைத்துவிட்டேன். பிறகு முன் விறாந்தைப் பக்கம் வந்தேன். நானும் வர அந்தக் காடையர்களும் வாயிலில் நுழைந்தார்கள். எனக்கு உள்மனது நடுங்க ஆரம்பித்துவிட்டது- இருந்தாலும் சமாளித்துக் கொண்டு- 'என்ன சில்வா இந்தப் பக்கம்? என்று சிரிக்க முயன்றேன்'

'சும்மாதான் நீங்கள் இருக்கிறீர்களா, இல்லாவிட்டால் யாழ்ப்பாணத்துக்கு கம்பிநீட்டிவிட்டீர்களா என்று பார்க்கத்தான் வந்தேன்' என்றான்.

'முருகனை விட்டு நான் எங்கேதான் போகமுடியும்?' என்று சொன்ன என்குரலே தெளிவாக இல்லை.

'எங்களுக்குக் கொஞ்சம் தண்ணீர் குடிக்க வேண்டும்' என்றான் சில்வா. நான் சரியென்று குசினிப் பக்கம் போனேன்- எனக்குப் பின்னால் அவர்கள் தொடந்து வருவதை உணர்ந்தேன். ஆனாலும் திரும்பிப் பார்க்கவில்லை. ஒரு செம்பில் தண்ணீரை வார்த்துக் கொண்டு நிமிர்ந்தேன். எனக்கு முன்னால் அந்த மூன்று காடையர்களும் நின்றார்கள். செம்பைப் பிடித்த எனது கையில் நிதானமில்லை.

'அதுசரி ஐயா எங்கே அம்மாவைக் காணவில்லை?'

நான் திரும்பித் திரும்பி மனதுக்குள் ஒத்திகை பார்த்த வசனங்களை ஒப்புவித்தேன், 'அவ நேற்றறே ஊருக்குப் போய்விட்டாவே'

'பளீர்' என்று என் கன்னத்தில் ஒரு அறை விழுந்தது. செம்பும் தண்ணீரும் உருண்டு சிதறிற்று. என் கண்களுக்குப் பார்வை வரும் முன்பே என் மடியில் கையைப் போட்டு ஒருவன் இழுத்தான். மற்றக் கையினால் வயித்தில் ஒரு குத்துவிட்டான்,

'தமிழ்பண்டி பொய்யா சொல்கிறாய்? இன்று காலையில்கூட உன் பொண்டாட்டியைப் பார்த்தேன்!'

மற்றவன் கேட்டான், 'அவளை யார் வீட்டில் கொண்டு போய் ஒளித்து வைத்திருக்கிறாய்?' நெஞ்சிலே கொஞ்சம் தண்ணீர் வந்தது. இந்த முரடர்கள் நான் அவளை வேறு யார் வீட்டிலோ ஒளித்துவைத்திருப்பதாக நினைத்துவிட்டார்கள். ஆகையால் இந்த

சிறுகதை

வீட்டில் அதிகம் பார்க்கமாட்டார்கள். என் உயிர் போனாலும் சரி, அவள் மானம் நிலைக்கட்டும் என்று நினைத்துக் கொண்டேன்.

'என்னடா பேசாமல் நிக்கிறாய்?'

குத்து! அடி! உதை! குத்து! அடி! உதை! குத்து! அடி! உதை!

நான் இயக்கமின்றிக் கீழே விழுந்து விட்டேன். அம்மட்டிலும் அவர்கள் விடவில்லை. இரண்டு பேர் என்னைப் பிடித்துத் தூக்கினார்கள்.





www.tamileelamarchive.com

'அவள் இருக்கிற இடத்தை நீ சொல்ல மாட்டாய்- கடைத்தெருப் பக்கம் காலியிலிருந்து லொறியில் வந்திருக்கிறார்கள். அவர்களிடம் உன்னைக் கொண்டு போய்க் கொடுத்தால், உன்னை தலைகீழாகக் கட்டித் தூக்கித் தோலை உரித்த பிறகு கீழே நெருப்பைக் கொழுத்திச் சுடுவாங்கள், உனக்கு அதுதான் சரி! வாடா!' என்று சொல்லி இழுத்தார்கள். என்னால் நடக்கவும் முடியவில்லை.

அவ்வளவு அடி அகோரம். அவர்கள் இழுத்துக்கொண்டு நடு வீட்டுக்கு வந்துவிட்டார்கள். மேலே என் மனைவி-- அந்த அறையையும் கடந்து வெளியே காலை வைத்துவிட்டார்கள்.

'நில்லுங்கள்! நில்லுங்கள்!' என்ற கூச்சலோடு என் மனைவி, பரணிலிருந்து குதித்தாள்.

'அவரை விட்டுவிடுங்கள்!' என்று அலறிக்கொண்டே என்னிடம் ஓடிவந்தாள்.

அவர்கள் என்னை விட்டுவிட்டார்கள். ஆறு முரட்டுக்கரங்கள் அவளை மறித்துப்பிடித்தன.

பிறகு-

என்னை ஒரு மேசையின் காலோடு பின்கட்டாகக் கட்டினார்கள். அவளை- என்மனைவியை. குசினிப்பக்கம் இழுத்துக் கொண்டு போனார்கள். இரண்டொரு நிமிடங்களில் அவளுடைய அலறல் கேட்டது. பிறகு அவள் அலறவில்லையோ, அல்லது நான்தான் இரத்தம் கொதித்து, மூளை கலங்கி, வெறி பிடித்து, மயங்கி விட்டேனோ, மறுபடி எனக்கு நினைவு வந்தபோது அதே மேசையடியில் யாரே ஒருவருடைய மடியில் படுத்திருப்பதை உணர்ந்தேன்.

என்னை அவ்விதம் ஆதரவாகத் தூக்கி மடியில் வைத்திருப்பது யாரென்று அறிய ஒரு ஆவல். கண்களை திறந்து பார்த்தேன்.

என் மனைவி!

மானம் அழிந்த என் மனைவி---

எத்தனையோ நூற்றாண்டுகளாக ஊறிப்போன 'கருத்து' என்னைச் சித்திரவதை செய்தது. மானத்தை இழந்த என் மனைவியின் மடிமீது தலைவைத்துப் படுத்திருக்கிறேனே- என் உடம்பு கூனிக் குறுகியது. எழுந்து வெளியே நிலத்தில் விழுந்துவிட வேண்டு மென்று மனம் உன்னிற்று.

என் முகத்திலோ ஒரு சொட்டுக் கண்ணீர், இன்னொன்று, இன்னொன்று, என் முகமும் அவள் கண்ணீரால் நனைய, மனம் சிந்திக்கத் தொடங்கியது.

மூன்று விசப் பாம்புகள் அவளைக் கடித்து இன்பத்தை உறிஞ்சின. அவள் உடலும் உள்ளமும் வேதனையால் துடித்தன. எரிந்து போகிற உடலை யாரே என்னவோ செய்தார்கள். மனம் சிறிதும் சம்மந்தப்படாதபோது அவளுடைய மானம் போய்விடுமா? செய்யாத குற்றத்திற்கு அவள் தண்டனை அடைய வேண்டுமா? மனம் சம்மந்தப்படாதபோது வெறும் உடலுக்கு நேர்ந்த தீங்கினால் மானம் அழிந்துவிடுமென்றால் பிரசவத்திற்காக டாக்டரிடம் போகும் பெண்களெல்லாம்-

என் மனதில் எழுந்த அருவருப்பை வெளியே இழுத்தெடுத்து தூர வீசினேன், பரிதாபப்படவேண்டிய என் மனைவியின் பெருமை என் நெஞ்செல்லாம் நிறைந்தது. மெதுவாக அவள் கைகளைப் பற்றி என் மார்போடு அணைத்துக் கொண்டேன்.

பிறகு பொலிஸ் வந்தது பேபி நோனாதான் அந்த உதவியைச் செய்தாளென்று பின்னால் தெரிந்து கொண்டேன். என்னவோ கஸ்டங்களெல்லாம் பட்டு, அகதிமுகாமில் கிடந்துழன்று எப்படியோ இங்கேவந்து சேர்ந்தோம்.

'இப்போழுது சொல்லுங்கள் மாஸ்டர், பலாத்காரத்தினால் ஒரு பெண்ணின் உடல் ஊறு செய்யப்பட்டால் அவள் மானம் அழிந்துவிடுமா? அதற்காக அவள் உயிரையும் அழித்து விடவேண்டுமா? கணவன் இறந்தவுடன் உடன்கட்டை ஏறியவள்- அப்படிச் செய்வதே கற்புடைய மகளிர் கடமை என்ற சமூகக் கருத்தினால் உந்தப்பட்டு ஏற்றப்பட்டவள் பத்தினித் தெய்வமா? அல்லது பகுத்தறிவற்ற சமுதாயத்துக்குப் பலியான பேதையா? -- சொல்லுங்கள் மாஸ்டர்'

கணபதி ஐயர் உணர்ச்சி மேலீட்டால் பொருமினார்.

'என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் ஐயா! இப்படித்தான் பரம்பரை பரம்பரையாக இரத்தத்தில் ஊறிப்போன பல விசயங்களைப் பற்றிச் சிந்திக்காமலே அபிப்பிராயம் கொண்டுவிடுகிறோம். நான் கூட எவ்வளவு முட்டாள்த்தனமாக அபிப்பிராயம் சொல்லிவிட்டேன்- ஐயா பகுத்தறிவு பகுத்தறிவு என்று சொல்லிக் கொண்டு தேவையில்லா விசயங்களிலெல்லாம் வாய்வீச்சு வீசுகிற பலரை எனக்குத் தெரியும். ஆனால் உண்மையான ஒரு பகுத்தறிவுவாதியை இன்றைக்குக் கண்டுபிடித்துவிட்டேன்' என்று சொன்னார் மூர்த்தி மாஸ்டர்.

ஐயர் வீட்டுச் சுவரிலே இருந்த மகாத்மா காந்தியின் படம்- அதிலே ஐயரின் சாடை தெரிவது போலத் தோன்றிற்று மூர்த்தி மாஸ்டருக்கு

## தமிழர் வரலாற்றில் தை மாதம்

### கடைசித் தமிழ் மன்னன் கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்பட்டான்

அன்று கண்டி இராச்சியத்தின் கடைசித் தமிழ் மன்னனான கண்ணுசாமி என்ற சிறி விக்கிரம ராஜசிங்கனின் ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கில் படையெடுத்து வந்த ஆங்கிலப்படைகளிடம் பிலிமத்தலாவை, எகலப்போலை தலைமையிலான சிங்களப் பிரதானிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டு 24.01.1815 அன்று இத்தமிழ் மன்னன் வேலூருக்கு நாடுகடத்தப்பட்டான்.

### சிங்களச் சிறீ தமிழர்களின் வாகனங்களில் பொருத்தப்பட்டது

சிங்களப் பேரினவாதத்தின் ஆசியோடு ஆட்சிபீட மேறிய சிறீலங்காவின் பிரதமர் எஸ்.டபிள்யு ஆர்.டி பண்டார நாயக்காவினால் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டு தமிழீழப் பகுதிகளில் அமுல்படுத்தப்பட்டது. அதன் ஒரு கட்டமாக 1958.01.01 அன்று தமிழர் பகுதிகளில் அனைத்து வாகனங்களிலும் சிங்கள சிறீ எழுத்தை பொறிக்கவேண்டும் என்ற அநாகரிக இனவாத விதி அமுல்ப்படுத்தப்பட்ட.

### தமிழாராட்சி மாநாட்டுப் படுகொலை

10.01.1974 அன்று, சிறீலங்கா அரசின் பல்வேறு தடைகளையும் மீறி யாழ்ப்பானத்தில் நடத்தப்பட்ட தமிழாராட்சி மாநாட்டு நிகழ்வின்போது சிறிமா அரசின் சிங்களக் காவல்படைகளால் 9 அப்பாவித்தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

### கொக்கட்டிச்சோலைப் படுகொலை

1987.01. 28, 29, 30 ஆகிய நாட்களில் மகிழடித்தீவு, இறால் கொம்பனி, முனைக்காட்டுப் பகுதிகளில் 200 தமிழ்மக்கள் சிறீலங்கா விசேட அதிரடிப்படையினரால் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர்.

### மாவீரன் கப்டன் அருள் வீரச்சாவு

தாயகத்து விடுதலைக்காக 1986இல் தன்னை விடுதலைப் புலிகளோடு இணைத்துக் கொண்டவர் கப்டன் அருள் மாஸ்டர். தமிழீழ விடுதலைப் புலிகளால் பாவிக்கப்படும் துப்பாக்கி எறிகணையான அருள்-89 இவரால் வடிவமைக்கப்பட்டதாகும். 04.01.1988 அன்று நீர்வேலிப் பகுதியில் ஏற்பட்ட இந்திய இராணுவத்துடனான மோதலின்போது வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

### கிளாலிக் கடனீரேரிப் படுகொலை

1993.01.02 அன்று யாழ் குடாநாட்டிற்கும் வன்னிப் பகுதிக்குமான ஒரேயொரு போக்குவரத்துப் பாதையாக விளங்கிய கிளாலிக் கடனீரேரியூடாகப் படகுகளில் பயணம் செய்த அப்பாவித் தமிழர்கள் 52 பேர் சிறீலங்காக் கடற்படையினரால் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டனர்.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


## சந்திரிகாவின் ஆட்சி பீடத்திற்கு சமாதானத்தில் நம்பிக்கை இல்லை

**விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள்**

விடுதலைப் புலிகள் கடைப்பிடித்து வரும் ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி சிறீலங்கா முழு அளவிலான போருக்குத் தயாராகி வருவதாக விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம்1201.2001 அன்று தமிழ் கார்டியன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார். அச்செவ்வியிலிருந்து சில பகுதிகள் வருமாறு.....

விடுதலைப் புலிகளின் நிலைகளுக்கு எதிராக பாரிய அளவில் தாக்குதல்களை நடத்தும் நோக்கத்துடன், சிறீலங்கா அரசு புதிய படையணிகளையும், பல்குழல் ஏவுகணை செலுத்திகள், பீரங்கிகள், டாங்கிகள் போன்ற கனரக அழிவு ஆயுதங்களையும் யாழ்ப்பாணக் களத்திற்கு அனுப்பியுள்ளது. கிளாலி, எழுதுமட்டுவாள், நாகர்கோவில் எல்லையோரமாக நிலைகொண்டுள்ள விடுதலைப் புலிகளின் பாதுகாப்பரண்களை ஊடறுத்து, ஆனையிறவு நோக்கி நகரும் நோக்குடன் ஒரு பாரிய தாக்குதல் திட்டம் வரையப் பட்டிருக்கின்றது. இப் பாரிய தாக்குதலை நடத்த சிறீலங்கா முற்படுமாயின் அதன் விளைவு பாரதூரமாக அமையும். இது எதிரிக்கு பெரும் இரத்தக்களரியை ஏற்படுத்தும் என்பது மட்டுமல்ல போர் என்றுமில்லாத அளவிற்கு விரிவடையும் சாத்தியம் உள்ளது.

சந்திரிகாவின் ஆட்சிபீடத்திற்கு சமாதானத்தில் நம்பிக்கை இல்லை. பேச்சுவார்த்தை மூலமாகப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கறையற்ற இவர்களுக்கு, இராணுவத் தீர்வில்தான் அக்கறையும் நம்பிக்கையும் உண்டு எனத் தெரிவித்துள்ளார். போராடுபவர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்படும் பாரிய உயிரழிவுகள் பற்றி இந்த ஆட்சிபீடம் கவலைப்படுவதில்லை. அரசாங்கத்தின் நோக்கங்களை மதிப்பாய்வு செய்யும் பொழுது, சமகால அரசியல் இராணுவச் சூழ்நிலை தெளிவற்றதாக இருள்படிந்ததாகவே தென்படுகின்றது.

விடுதலைப் புலிகள் பலவீனமாக உள்ளனர், அதனாலேயே சமாதானத்தை நாடுகின்றனர் என்ற சிறீலங்கா அரச இராணுவ வட்டாரங்களில் நிலவும் கருத்தை நான் மறுக்கின்றேன். இந்த மதிப்பாய்வு தவறானது. எமது நேர்மையான நோக்கத்தை அரசதரப்பு தவறாகப் புரிந்திருக்கின்றது. இராணுவரீதியாக மாத்திரமின்றி, தார்மீகரீதியாகவும் நாம் பலமாக இருக்கின்றோம். நாம் ஒரு பலமான தளத்திலிருந்தே சமாதானத்தை நாடுகின்றோம்.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, அரியாலைப் பிரதேசங்களில் இருந்து விடுதலைப் புலிகள் தந்திரோபாயப் பின்நகர்வை மேற்கொண்டனர். ஒருதலைப்பட்ச போர்நிறுத்தம் செய்து சமாதானத்தைப் பேணியவாறு பெரிய அளவில் எதிர்த்தாக்குதலை நடத்துவது நடைமுறைச் சாத்தியமானதல்ல. இப்பகுதிகள் ஒரு பாதுகாப்பான யுத்தத்திற்கு அனுகூலமான நிலப்பரப்பும் அல்ல. அப்பகுதிக்கான விநியோகச் சிக்கலும் எமக்குள்ளது. அதன் காரணத்தினாலும் பெருமளவு உயிர்ச்சேதம் ஏற்படுவதை தவிர்ப்பதற்காகவும் அப்பகுதிகளில் இருந்து தந்திரோபாயப் பின்னகர்வை மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

## யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் பொங்குதமிழ் நிகழ்வு

யாழ் பல்கலைக்கழகத்தாரின் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு, சிங்களப்படையின் பயமுறுத்தல்கள் இடையூறுகளைத் தாண்டி யாழ் பல்கலைக்கழக வளாகத்தில்17.01.2001 அன்று எழுச்சிகரமாக நடைபெற்றுள்ளது. பல்கலைகழகத்திற்கு போகும் வழிகளை சிங்களப்படை அடைத்து வைத்திருந்து மாணவர்களை மாத்திரம் அனுமதித்திருந்த நிலையிலும் சுமார் 6000ற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர். 25ற்கும் மேற்பட்ட மதத்தலைவர்கள், பத்திரிகையாளர்கள் பலநூற்றுக்கணக்கான மக்கள் மற்றும் சரியான அத்தாட்சி ஆவணங்கள் இல்லை எனக் காரணங்காட்டி பல மாணவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். என்றபோதிலும் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், ஊழியர்கள், மதத்தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரும் திரண்டனர். காலை 10.30 மணிக்கு துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் சுதந்திர தீபத்தை ஏற்றி வைத்து நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். பொங்குதமிழ் எழுச்சி நிகழ்ச்சிக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தின் வணிகமையங்கள் அனைத்தும் பூட்டப்பட்டிருந்தன. எல்லா வணக்கஸ்தலங்களிலும் நண்பகல் 12.00 மணிக்கு மணிகள் ஒலிக்கவிடப்பட்டன.

## சிங்களப் படைத்தரப்பு சந்தித்த பேரிழப்பு

16.01.2001 அன்று கினிகிர-9 என்ற குறியீட்டுப் பெயருடன் சிங்களப்படை தென்மராட்சியில் பெருமெடுப்பில் தரைநகர்வு நடவடிக்கையொன்றினை மேற்கோண்டது. விடுதலைப் புலிகள் பிரகடனப்படுத்தியுள்ள ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தைப் பயன்படுத்தி சிங்களப் மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கையானது விடுதலைப் புலிகள் தொடுத்த பதில் நடவடிக்கையில் முறியடிக்கப்பட்டது. இதன் போது நூறிற்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், ஐநூறிற்கும் அதிகமான படையினர் காயமடைந்தனர். இவ் முறியடிப்புச்சமரில் வெற்றிக்கு வித்தாக 70 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

## களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதி பலி

சிறீலங்கா அரசாங்கத்தால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழரான திருமலையைச் சேர்ந்த சண்முகநாதன் நித்தியானந்தன் (27 வயது) 04.01.2001 அன்று கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளார். மர்மான முறையில் கொல்லப்பட்ட நித்தியானந்தனது சடலம் களுத்துறை சிறைச்சாலையின் மலசலகூடப்பகுதியில் சககைதிகளால் கண்டெடுக்கப்பட்டது. ஏற்கனவே பல தடைகள் களுத்துறைச் சிறைச்சாலையில் பல தமிழர்கள் சிங்களவர்களால் படுகொலை செய்யப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே.

## எமது நண்பனைக் கடத்தியவர்கள் யார்?

**–வவுனியா கல்வியியல் கல்லூரி மாணவர்கள்–**

வவுனியா கல்வியியல் கல்லூரி மாணவனாகிய சோமசுந்தரம் முகுந்தன் சிறீலங்கா இராணுவத்துடன் இயங்கும் ஆயுதக்குழுவொன்றினால் 09.01.2001 அன்று கடத்திச் செல்லப்பட்டார். இவர் கடத்தப்பட்டதைக் கண்டித்து வவுனியா கல்வியியல் கல்லூரி மாணவர்களால் ஆட்சேப ஊர்வலம் ஒன்று 10.01.2001 அன்று நடத்தப்பட்டது. இதன்போது தமது சகமாணவன் கடத்தப்பட்டதைக் கண்டித்த மாணவர்கள் அவரது விடுதலைக்கு ஆவனசெய்யக் கோரி வவுனியா அரசஅதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தன


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# போராட்டத்தின் நிழலில்



மேஜர் சோதியா
( மைக்கல் வசந்தி )
கரவெட்டி
26.09.1963-11.01.1990

பச்சைப்பசேல் என்ற குளிர்மைக்காடு அது. அதுதான் எங்கள் மணலாறு. பசுமை மரங்களின் நடுவே நாம் போராளிகளாக நிமிர்ந்த நாட்கள். போராளிகள் என்ற நிமிர்வு ஒருபுறம். அண்ணனுடன் இருக்கின்றோம் என்ற... தலைக்கிரீடம் ஒருபுறம்... நிச்சயமாக... நிச்சயமாக என்னால், எம்மால் மறக்க முடியாத நாட்களாகிவிட்டன:

இந்திய இராணுவக் காலப்பகுதி, ஓ! அதுதான் மேஜர் சோதியாக்காவை நாம் கண்டு பழகி, வழிநடந்த, நேசித்த காலம்.

நெடிதுயர்ந்த பெண், வெள்ளையான நிமிர் தோற்றமான பெண். பல்வரிசை முழுமையாகக் காட்டிச் சிரிக்கும் மனந்திறந்த சிரிப்புடன் எம்மைப் பார்வையிட்ட அந்த இனியவள் அப்போ தலைமை மருத்துவராகக் காட்டில் வலம் வந்தவர்.

சோதியக்கா வயித்துக்குத்து... சோதியக்கா கால்நோ... சோதியாக்கா காய்ச்சல்... சோதியாக்கா ... சோதியாக்கா.

ஓம் எப்ப வருத்தம் வந்தாலும் அவவைக் கூப்பிட நேரம் காலம் இல்லை. சாப்பிட்டாலும் சரி, இயற்கைக் கடனை கழிக்கச் சென்றாலும் பின்னுக்கும் முன்னுக்கும் நாய்குட்டிகள் போல் நாம் இழுபட்டுத்திரிந்த அந்தக் காலம். கடமை நேரங்கள் எங்களது தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றிய சோதியாக்கா. நெல்லியடி ஈன்றெடுத்த புதல்வி. கல்வியும் கலையும் கற்றுத்தேர்ந்த உயர் கல்வி மாணவி.

விடியல்- அதுதான் எம்மை பட்டைதீட்டி வைரங்கள் ஆக்கிய பட்டறை, இல்லை பாசறை எம்மை வளர்த்த பாசத்தாய்ப்பூமி என்பேன்.

அந்த இனிய கணப்பொழுதுகள் யாவும் இனிமையும் இளமையும் நிறைந்தவை. எங்கள் கடமைகளை சரிவர நிறைவேற்ற எழுந்த நாட்கள்.

காடு-ஆம் காடு விரிந்து பரந்து எங்கும் வியாபித்திருந்தது. எப்பவும் ஒரு குளிர்மை பயம் தரும் அமைதி. குருவிகள்கூட எம்மைக்கண்ட பின் சத்தம் குறைத்தே கீச்சிட்டனவோ? என எண்ணத்தோன்றும் அமைதி. மென்குரல்களில் உரசிக்கொள்ளும் எம் உரையாடல்கள்.



எங்கும் தேடல், எதிலும் தேடல். காட்டில் உள்ள அனைத்து வனத்தையும் சிதைக்காமல் சிக்கனமாக முகாம் அமைத்தோம். சிங்காரித்துப் பார்த்தோம். போர் முறைக் கல்வியும் புதிய பயிற்சிகளும் தலைவர் அவர்களால் நேரடிப்பார்வையில் நிறைவேற்றிய காலம்.

சமையல் தொடக்கம் போர்ப் பயிற்சி வரையான பெண்களின் தனி நிர்வாகத் திறமை வளர்த்தெடுக்கப்பட்ட முதல் படியும் அங்கேதான். அதில் சிறப்பாக எல்லாப் போராளிகளாலும் கீழ்ப்படிவுடனும், அன்புடனும் நோக்கப்பட்ட ஒரே ஒரு தலைவி மேஜர் சோதியாக்கா.

உணவுத்தேவைக்காகவும் வேறுதேவைகள் கருதியும் மைல் கணக்கா, நாள் கணக்கா, அளவு தண்ணி, அளவு சாப்பாட்டுடன் நடை.... நடை. தொலைதூரம்வரை நடை. வானம் தெரியும் வெட்டைகளைக் கடக்கும்போது இரவு எம்முடன் கலந்துவிடும். தொடுவானம் வரை தெரியும் நட்சத்திரங்கள் எமக்கு உற்சாகமூட்டும். காலைப்பணியும், உடலில் எமனைத்தின்ற களைப்பும் சேர்ந்திருக்கும். ஆனால் நொடிப்பொழுதில் கிசு கிசுத்து நாம் அடித்த பம்பலில் யாவும் தூசாகிப் போகும். அன்று எம்முடன் இருந்து குருவியுடன் பாடிய, மரத்துடன் பேசிய தோழியர் பலர் இன்றில்லை. நெஞ்சுகனத்தாலும் தொடர்கின்றேன்.

கனத்த இரவுகளிலும் நுளம்புக் கடியுடன் எப்பவுமே, ஏன் இப்பவுமே அது எங்களுடன் தொடர்கின்றது. சோதியாக்கா யார் யார் எப்படி எவ்விதம் கவனிக்கவேண்டும். அவர்கள் உடல்நிலை எப்டியென்று கவனித்துத்தந்த பிஸ்கற், குளுக்கோஸ் உணவாக மாறிவிடும் அங்கே. அவரது பரிவும், இரக்கமும் எம்மைக் கவனித்து அனுப்பும் விதமும் எனக்கு என் அம்மாவை ஞாபகமூட்டும்.

கண்டிப்பும் கறாரும் கொண்ட கட்டளையை அவர் தந்தபோதெல்லாம் எனக்கு என் அப்பா ஞாபகம் வரும்.

கல கல என பஜார் அடித்து சிரித்த வேளை என் பள்ளித் தோழிகள் நினைவில் வந்தனர்.

கள்ளம் செய்துவிட்டு அவர்முன் போகும் போது கிறிஸ்தவ பாதிரியாரை ஞாபகம் ஊட்டும் சோதியாக்கா... அது தான் எங்கள் சோதியாக்கா.

பச்சை சேட், பச்சை ஜீன்ஸ் அதுதான் அவரது விருப்பமான உடையும், ராசியான உடையும்கூட. பச்சை உடை போட்டால் நிச்சயமாகத் தெரியும், அண்ணையைச் சந்திக்கப்போறா என்று அண்ணையிடம் பேச்சுவாங்காத உடுப்போ என்று யாரும் கேட்க, 'கொல்' எனச் சிரித்தவர்களை கலைத்து குட்டும் விழும். அந்த குட்டுகள் இனி...

காட்டில் சகல வேலைகள், முகாம் அமைத்தல், கொம்பாசில் நகர்த்தல், கம்பால் பயிற்சி என ஆளுமையுடன் வளர்ந்து வந்தோம். யாவற்றையும் திட்டமிட்டு சகல போராளிகளையும் விளக்கிக் கொண்டு, அவர்களது ஆலோசனைகளையும் கேட்கும் பண்பும், வேலைகளைப் பங்கிடும் நிர்வாகத் திறனும், மனிதர்களை கையாளும் திறமையும் மிக்க தலைவியாக வளர்ந்து வந்தவர். மற்றவர்கள் ஒத்துப்போகும் விருப்பை எம்மில் வளர்த்துச் சென்றுவர்.

உழைத்து உழைத்து தேய்ந்த நிலவு ஒரேயடியாக மறையும் என்று யார் கண்டார்.. எம்கெல்லாம் 'நயிற்றிங் கேலான' அவர் நோயால் அவதியுற்றபோது துடித்துப் போனோம்.

அந்த மணலாற்றின் மடியில் புதையுண்டு போக அவர் விரும்பியும் அன்னை, தந்தை காண உடல் சுமந்து நெல்லியடி சென்றோம். ஊர் கூடி அழுதது. ஊர் கூடி வணங்கியது. மரணச்சடங்கில் மதவேறுபாடு இன்றி போராளியின் வித்துடலை வணங்க பல்லாயிரம் மக்கள் கண் பூத்து அழுதபடி அஞ்சலித்த காட்சி, நாம் நிமிர்ந்தேம்.

வளர்வோம், நிமிர்வோம் என மீண்டும் புது வேகத்துடன் காடு வந்தோம். இன்று களத்தில் புகுந்து விளையாடும் வீராங்கனைகளையும் பெண் தளபதிகளின் நிமிர்வையும் கண்டே பின்பே ஆறினோம்.

சோதியாக்கா! நாம் படை கொண்டு நடத்தும் அழைகைப்பாருங்கள். நாம் நிர்வாகம் செய்யும் நேர்த்தியைப்பாருங்கள்.

உங்கள் பெயரை இதயத்தில் ஏந்தி, உங்கள் பெயரைச் சுமந்த படையணியைப் பாருங்கள்.

-விசாலி-

# அணையாத தீபம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மீள்பார்வை 2000



## டிசம்பர் 2000

### 01.12.00

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின், சிறுவர்களுக்கான போலியோ தடுப்பு மருந்து வழங்கும் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் விடுதலைப் புலிகள் இரு நாட்கள் மோதல் தவிர்ப்பு நிலையைக் கடைப்பிடித்தனர்.

### 04.12.00

தமிழீழத்திலிருந்து இடம்பெயர்ந்து, தமிழகத்தில் தங்கியிருந்த தமிழீழ விடுதலை அணியின் பொதுச்செயலாளர் ஈழவேந்தன் இந்திய அரசால் சிறீலங்காவிற்கு நாடுகடத்தப்பட்டார்.

### 05.12.00

கினிகீர-5 என்ற குறியீட்டுப் பெயருடன் கைதடிப்பகுதியை நோக்கி முன்னேற முயன்ற சிறீலங்கா ஆயுதப்படைகள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட முறியடிப்புத் தாக்குதலை அடுத்த பலத்த இழப்புக்களுடன் இராணுவம் தனது முன்னேற்ற முயற்சியைக் கைவிட்டது. இதன்போது 12 படையினர் கொல்லப்பட்டனர், 3 அதிகாரிகள் உட்பட முப்பத்தாறு பேர் படுகாயங்களுக்கும் உள்ளாகினர்.

### 07.12.00

சிறீலங்காப்படையின் இராணுவ றக் வண்டி மோதி பாடசாலை மாணவியான ஏழாலையைச் சேர்ந்த 9ஆம் வகுப்பில் கல்விபயிலும் விக்கினேஸ்வரன் திவ்யா என்பவர் கொல்லப்பட்டார்.

### 14.12.00

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட மூன்று பொலிசார் கொல்லப்பட்டனர். இதன்போது சிங்களப்படை கண்மூடித்தனமாகச் சுட்டதில் இரு அப்பாவித் தமிழர்கள் இறந்தனர்.

தமிழகத்தில் தஞ்சமடைந்திருந்த 13 வயதான தமிழீழச் சிறுமி ரவீந்திரன் குவேனி என்பவர் காமுகர்களால் பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

### 16.12.00

கினிகீர-5இன் கட்டம் 2 எனும் குறியீட்டுப் பெயரோடு சிறீலங்காப் படை மேற்கொண்ட நுணாவில் நோக்கிய தரைநகர்வு முயற்சிக்கு எதிராக விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பதில் தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 32 பேர் காயமடைந்தனர்.

### 21.12.00

திருமலை மாவட்டம் சலப்பையாறுப் பகுதியில் சிங்களக்கடற்படை நிலைகள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் ஆறு கடற்படையினர் கொல்லப்பட்டு மேலும் ஒருவர் காயமடைந்தார்.

### 18.12.00



சிறீலங்காவிற்கு உதவி வழங்கும் அமைப்புக்கள், நாடுகளின் கூட்டம் 18, 19 ஆகிய இரு நாட்களில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளால் சிறீலங்கா அரசின் மனித விரோதச் செயற்பாடுகள் குறித்து தமது கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

### 20.12.00



பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய அமைப்பு என்ற பேரினவாத அமைப்பினால் பேச்சுவார்த்தை வேண்டாம் போரைத் தொடர்ந்து நடத்து எனக் கோரும் ஆர்ப்பாட்டப் பேரணி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றது. இதன்போது நோர்வே பிரிட்டன் நாடுகளின் தேசியக் கொடிகளும் எரிக்கப்பட்டன.

### 21.12.00

24.12.2000த்திலிருந்து 24.1.2000 வரைக்குமான பண்டிகைக் காலப்பகுதியில் ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்படவுள்ளதாக விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்டது.

### 22.12.00

அரியாலை கொழும்புத்துறைப் பகுதிகளை நோக்கி முன்னேறும் நோக்கில் சிறீலங்காப்படைகள் மேற்கொண்ட கினிகீர-7 நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகளின் பதில் தாக்குதல்கள் காரணமாக ஒரு அதிகாரி உட்பட 25 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 47 படையினர் காயமடைந்தனர்.

### 23.12.00

விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவிப்பானது சிறீலங்கா அரசினால் நிராகரிக்கப்பட்டது என சிறீலங்கா தகவல் அமைச்சரினால் அறிவிக்கப்பட்டது.

### 25.12.00

அன்று சிறீலங்கா இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்ட 9 தமிழர்களில் 5 வயதுச் சிறுவன் ஒருவன் உட்பட 8 பேர் வெட்டியும் அடித்தும் படுகொலை செய்யப்பட்டு மிருசுவில் பகுதியில் புதைக்கப்பட்டனர். சடலங்கள் புதைக்கப்பட்ட புதைகுழியை, இச்சம்பவத்தில் தப்பிய ஒரே சாட்சி இனங்காட்ட, கழுத்துப் பகுதிகள் வெட்டப்பட்ட நிலையில் சடலங்கள் மீட்கப்பட்டன.

### 27.12.00



தொடரும் கடும் காற்று மழை காரணமாக மட்டக்களப்பு, அம்பாறை திருமலை, அநுராதபுரம், பொலநறுவை, மன்னார் பகுதிகளில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. வவுனியாவில் கடும் காற்று மழை காரணமாக சிதம்பரபுரத்திலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம் கொட்டகைமீது மரம் சரிந்து விழுந்ததில் 14 வயதான சிவராசா ரமேஸ் என்ற சிறுவன் மரணமடைந்துள்ளார்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக்காப்பகம்

# "கண்கள் கூறும் வார்த்தைகள்"



### காணும் கண்களே, கூறும் வார்த்தை என்ன?

### அஞ்சல் ஊடாக எரிமலைக்கு...

குறிப்பு: உங்கள் ஆக்கங்களை பத்து வரிகளுக்கு மேற்படாமல் எழுதவும்.

**எரிமலை**
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
FRANCE.



## நவம்பருக்கான...

காட்டாற்று வெள்ளமாக கரை புரண்டு
ஓடுகின்றது தமிழீழ நதி
தம் இலட்சியத்தில் இருந்து வழுவாது,
அந்நதியில் இருக்கும் சில சின்ன நதிகள்
எல்லாவற்றிலும் வெற்றியீட்டிச் சென்று
கொண்டிருந்த போது
தாகம் எடுத்தது! அதன் தாகத்தைத்
தணித்தது தமிழ் நதி ஒன்று.
மீண்டும் நதி தன் இலட்சியத்தை
நோக்கி சென்று கொண்டே இருக்கின்றது
தமிழீழ நதியின் தாகம்
தமிழீழத் தாயகம்.

**இசைஞானவதனி ஜெயராஜா**
**எல்ஸ் டோவ், ஜேர்மனி.**

இரும்பு உடலிலே கரும்பு மனதிலே
விரும்பும் விடுதலை அரும்பும் வயதிலே
தரும் நீர் குடித்திட தாகமது தீருமோ
தமிழீழத் தாகம் தண்ணீரால் மாறுமோ
ஊற்றுத் தண்ணீரை ஊற்றிக் குடிப்பதெல்லாம்
சுற்றியுள்ள சோலையது பற்றிச் செழிப்பதற்கே
மற்றும் சொல்வதற்கு மதில், வேலி மறைக்கிறதே
முற்றும் என முடிப்பதற்கும் கற்ற தமிழ்
தடுக்கிறதே.

**எம்.கிருஸ்ணர்**
**சூரிச், சுவிஸ்**

தலை நிமிர்ந்து வாழ்ந்த தமிழினத்தின்
தலைவிதி மாறிய போது தமிழ்த்தாய் தந்த
பெரும் தலைவராம் குன்றுமுயர்ந்த தோளான்
கரிகாலன் பிரபாகரன் மீண்டும் தன்னினத்தின்
நிலைமாற்றி நிமிர்ந்து வாழ படைநடத்தும்
தமிழர் தம் சேனையில் தமிழீழத் தாகத்துடன்
களமாடும் காரிகையாம் தன் சேய்கு- அவள்
தாளாத தாகம் தீர்க்க தண்ணீர் வார்த்து மகிழும்
தமிழீழத்தின் தன்மானத் தந்தையொருவர்

**உதயபாரதலிங்கம்**
**பேர்ண்**

இருண்ட வாழ்வியலை இடர்பட்ட பொழுதுகளை
சுருண்டு வீழ்ந்த தமிழரை துணிந்தெழச் செய்தாய்
தடைகளைத் தாண்டி இலட்சியம் சுமந்து எதிரிப்
படைகளை எதிர்த்திடும் பக்குவம் கொண்டாய்
கொடியவர் எமது மண்ணில் சுவடு பதிக்கக் கூடாதென்று
குமுறியே எதிர்த்தெழுந்து எரிமலையாய் வெடித்தாய்
வெற்றியைச் சுமக்கும் தோள்கள் விடுதலை சுமந்த தேகம்
உத்தம தாய் சுரந்த சத்திய நீரையுண்டு தாகம் போக்கி
நித்தமும் வெற்றியோடு நிதர்சனம் காத்து எழுவாய்!

**வேணுகோபாலன்**
**இலண்டன்**

வளமான தமிழணங்கை வாழ வைக்கும் தாகம்
வன்னியனாய் சங்கிலியாய் வாழ ஒரு தாகம்
தளம் கொண்ட எதிரி தலை தறித்துவிடும் தாகம்
தாய்மண்ணை தமிழனுக்காய் மீட்டுவிடத் தாகம்
உளம் எல்லாம் தன்னினத்து விடுதலையின் தாகம்
உரிமைக்காய் உயிர் துறக்க உள்மனதில் தாகம்
களமாடிக் களமாடிக் கனிந்ததொரு தாகம்
கரும்புலியாய் தற்கொடைக்கு ஈகமிடும் தாகம்
இளந்தமிழன் இதயத்து இயக்கம் ஒரு தாகம்
இனத் தலைவன் இதயத்தில் இடம்பிடித்த தாகம்
இடைவெளியில் வந்து நிற்கும் இயற்கை தரும் தாகம்
இவர் தாகம் தணித்து விட்டு தாகம் கொள் தமிழா!

**ஞானி**
**நூறன்பேர்க், ஜேர்மனி.**

வசந்த வாயில் அள்ளிய தேசமதில்
பாசறை முழக்கம் மின்னி மறைந்தும்
தண்மையற்ற இரத்தம் தோய்ந்த யுத்த களமும்
வாடி வதங்கி சொல்கேட்க தேகமும்
வாழ்வு வாழ்வதற்கே என்றே நினைவற்றும்
பகைவன் யுத்த மேகங்கள் சூழ்ந்தும்
மறக்கமுடியாத தியாகப் பூக்களின் சாதனைகள்
நெஞ்சத்துக்கு இனிய காவியங்கள் பலவே படைத்து
ஈழக்காவல் தெய்வங்கள் எதிரி முயல முன்
தாகந்தீர்த்தே எல்லைக்கற்களாய் உறுதியாகின்றார்.

**ஞானேஸ்**
**பாரிஸ், பிரான்ஸ்**

தாகத்திற்கு தண்ணீர்
ஊற்றும் தமிழ் நெஞ்சங்களே!
வேகமாய் வேற்றான் படை
வீழ்த்தும் வேங்கையர் விழுதுகளே!
தவித்த வாய்க்கு தண்ணீர் தரும்
வேரின் தாகமும் தமிழீழத் தாயகமே.
அடக்குமுறையாளன் எம் மண்ணை
விட்டு அகலும் போதல்லவா தணியும்.

**வல்வைப்பிறேம்**
**டோட்முன்ட், ஜேர்மனி**

வீரம் நிறைந்த உனக்குள்ளும்
ஈரம் உள்ளது என்பதை -
நாம் மட்டுமல்ல
எதிரியும் அறிவான்
இந்த நீர் உன் தாகத்திற்கு
எம்மாத்திரம்
ஈழம் கனியும் வேளைதானே
உன்தாகம் தீரும்
இதை இந்த உலகு அறியும்.

**வே.பி.இன்பன்**
**பாரிஸ், பிரான்ஸ்**

பாசம் கொண்ட
தமிழ்த் தலைவன் இட்ட
பணியைச் செய்யும் புலிவீரன்
தமிழ்த் தாகம் கொண்டு
தவித்ததினால்
பெருவேகம் கொண்டு
போர் செய்தான்
இதனால் பிறந்தது சிறுதாகம் கண்டு
இரங்கியது ஒரு தமிழ் நேயம்
தமிழீழம் காத்திட வேண்டும் என்று
மிக இதமாய்த் தணித்தது
இவன் தாகம்.

**செ.ஆனந்தன்**
**பெரடேசியா- டென்மார்க்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

20ம் ஆண்டில்...

ஒடுக்குமுறைக்கு எதிரான ஆவேசக்குரல்
போர்க்கால இலக்கியத்தின் யதார்த்தப் பதிவு
விடுதலை வேட்கை மிக்க எழுச்சிப் படைப்புக்கள்
மண்ணின் மணத்தோடு மனஉணர்வுகளை வெளிப்படுத்தும்
உன்னத இலக்கியமாக

சிறுகதைகள்
கவிதைகள்
மற்றும்

சமூகவியல், வரலாறு, தத்துவம்,
மொழியியல் இலக்கியக் கட்டுரைகள்
எல்லாவற்றையும்
தாங்கிவரும்

**எரிமலை**

கலை பண்பாட்டு அரசியல்
சமூக சஞ்சிகை.
இவ்விதழ் சார்ந்த தொடர்புகளுக்கு -



ERIMALAI
C/O T.C.C -France
341 Rue Des Pyrenees
75020 Paris
FRANCE.

Fax: (33) 1 43 58 11 91

Email: erimalai@freesurf.fr

# எரிமலை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com